# புதிய தமிழகம்

UNIVERSITY EXTENSION LIBRARY
18 DEC 1957
MADURAI

★

UNIVERSITY EXTENS
LIBRARY, MADURA

ஆசிரியரும், வெளியிட்டோரும் :

**சாமி. சிதம்பரனூர்**

முன்னுரை :

**மணலி. கந்தசாமி, M.L.A.**

UNIVERSITY LIBRARY
31 MAY 1957
MADRAS

★

கிடைக்குமிடம் :

**தமிழ்ப் புத்தகாலயம்,**

மயிலாப்பூர் : : சென்னை ௪.

விலை அணு 12

# பொருள் அடக்கம்

★


1. ஆசிரியர் வேண்டுகோள் ... 3
2. முன்னுரை ... 5
   [ தோழர் மணலி. கந்தசாமி, M.L.A. ]
3. முந்துவோம்! (பாட்டு) ... 8

1. புதிய தமிழக அமைப்பு ... 9
2. ஆட்சியே மக்கள் உயிர் ... 17
3. மொழிவாரி மாகாணக் குறிக்கோள் ... 21
4. மக்கள் கேட்கும் மாகாணம் ... 27
5. நிலப் பிரபுத்துவ ஒழிப்பு ... 34
6. அன்னியர் சுரண்டல் ... 40
7. வெற்றிக்கு வழி ... 46
8. தனித்து நிற்கவேண்டுமா? ... 54
9. சுரண்டல் எது? ... 61
10. மத்திய அரசாங்கம் வேண்டுமா? ... 65
11. புதிய தமிழகத்தில் மக்கள் உரிமை ... 72
12. நமது குறிக்கோள் என்ன? ... 76


598
031:6

# ஆசிரியர் வேண்டுகோள்

★

புதிய தமிழகத்தின் குறிக்கோள் என்ன? அது எந்த முறையில் அமைய வேண்டும்? புதிய தமிழகம் யாருக்காக? எதற்காக? புதிய தமிழகத்தை அமைக்கத் தமிழ் மக்கள் செய்ய வேண்டிய கடமை என்ன? இவைகளை விளக்குவதே இச்சிறு நூல்.

இந்திய யூனியனுக்குள் இன்றுள்ள மாகாணங்களை மொழிவாரி அடிப்படையில் திருத்தி அமைக்க வேண்டும். மொழிவாரி மாகாணங்கள் என்பதும், தேசிய இனவாரி மாகாணங்கள் என்பதும் ஏறக்குறைய ஒன்றே தான். எல்லாத்தேசிய இனமக்களும் சுதந்தரமாக—ஒற்றுமையாக—ஒருவரை ஒருவர் சுரண்டாமல்—ஒருவரை ஒருவர் அடக்கி நசுக்குவதற்கு இடமில்லாமல் வாழுவதற்கு இதுவே வழி,

மொழிவாரி மாகாணங்கள் ஒவ்வொன்றும் சுய நிர்ணய உரிமையுடன் விளங்க வேண்டும். எந்த மொழிவாரி மாகாணத்திலும் அந்நியர் சுரண்டலுக்கு இடமிருக்கக் கூடாது; நிலப்பிரபுத்துவக் கொடுங்கோன்மைக்கு இடமிருக்கக் கூடாது. ஒவ்வொரு மொழிவாரி மாகாணத்திலும் ஜனநாயக ஆட்சியே நிலவவேண்டும். இதுவே மொழிவாரி மாகாணம் கேட்பதன் நோக்கம்.

இந்த அடிப்படையில் தான் மொழிவாரி மாகாணங்கள் அமைய வேண்டும். இத்தகைய மாகாணங்கள் ஏற்படும் வரையில் மொழிவாரி மாகாணக் கிளர்ச்சி நடந்தே தீரும்.

ஆனால் இதற்கிடையில் தற்காலிகமாக, எந்த அளவில், எந்த அடிப்படையில் மொழிவாரி மாகாணங்கள் அமைந்தாலும் அதை நாம் வரவேற்கின்றோம். உடனடி

யாக அடையக்கூடிய எத்தகைய மொழிவாரி மாகாணத்திற்கும் புதிய தமிழகக் கிளர்ச்சி முட்டுக்கட்டையாக் நிற்கவே நிற்காது. எத்தகைய அரை குறை மொழிவாரி மாகாணப் பிரிவினையும் முழு உரிமையுள்ள மொழிவாரி மாகாண அமைப்புக்கு அடிப்படை கோலும் என்ற நம்பிக்கையுடன் அதை ஆதரிக்கின்றோம். தனி நாடு பிரிந்தாலும்ஏற்றுக் கொள்ளுவோம்.

ஆகவே மொழிவாரி மாகாணத்தின் முடிவான நோக்கம் என்ன என்பதை விளக்குவதே இந்நூல். மாகாணப் பிரிவினைக்காக நடைபெறும் எந்த முயற்சியையும், எந்தக் கிளர்ச்சியையும் வெறுப்பதோ, தடுப்பதோ, குறை கூறுவதோ இந்நூலின் நோக்கம் அல்ல.

தமிழர்கள் ஊன்றிப் படித்து உண்மை காணவேண்டும் என்பதே எனது ஆவல். இதற்கு முன்னுரை தந்து உதவிய தோழர் மணலி கந்தசாமி அவர்களுக்கு எனது நன்றி.

நெ. 9, ஏழாவது தெரு,
சவுராஷ்டிர நகர்.
சென்னை 24.

அன்பன்
சாமி. சிதம்பரன்.

18—12—52

# முன்னுரை

மணலி சி. கந்தசாமி M.L.A.

★

இன்று தமிழ்நாட்டில் ஒரு புதிய எழுச்சி. நாட்டுப் பிரிவினை பற்றி எல்லா வட்டாரங்களிலும் பேசப்படுகிறது. இன உணர்ச்சி முறுக்கேற்றப்படுகிறது. தாய் மொழிப் பற்று மக்கள் உள்ளத்தில் தவழுகிறது. பொதுவாகத் தமிழ் மக்கள் ஒரு புத்தம் புதிய வாழ்வுக்காகத் திரண்டெழுகிருர்கள்.

ஆனுல் இந்த எழுச்சியின் போக்கு ஒரு முகமாயில்லை. பலப்பல விதத்தில் இந்த எழுச்சி சிதறுண்டு தனித் தனியே உருவெடுப்பதைப் பார்க்கிறோம். ஒன்றுபட்ட எழுச்சிக்குச் சரியான வழி வகை வேண்டும். அதுவே இன்று ஜனநாயக சக்திகளின் முன் உள்ள தலை சான்ற கடமை. அது தான் "புதிய தமிழகம்" "ஜனநாயகத் தமிழகம்" சகல தமிழர்களையும் ஒன்றுபடுத்தி உய்விக்கும் தமிழகம்.

"புதிய தமிழகம்" என்று சொல்லும் போது அது ஏதோ ஒரு சிலரின் கற்பனை லட்சியம் எனும் கால கட்டம் அல்ல; அல்லது கிளர்ச்சிக்காரர்களின் மேடை முழக்க மட்டுமல்ல; ஆனுல் இன்று கோடிக்கணக்கான தமிழ் நாட்டு மக்களின் உள்ளத்திலிருந்து ஒலிக்கும் இதய ஒலி. இந்த இதய ஒலி ஒன்று பட்டு உருவாகி உரிய பாதையில் ராஜ நடை போட்டு கம்பீரமாக முன்னேறியாகவேண்டும். பிளவும் கூடாது, ஒத்திப் போடுவதும் தப்பு.

கிடைத்ததாகச் சொல்லப்படும் சுதந்திரம் ஏற்பட்டு ஆண்டு ஐந்துக்கு மேலாகிவிட்டது. தமிழன் வாழ்வு வளம்பெறவில்லை; வறண்டுதான் வருகிறது. உணவு தான்ய விளைவு ஒடுங்கி வருகிறது. உறுதொழில்கள் எல்லாம் நசித்து வருகின்றன. உரிமைகள் பறிபோகின்றன.

ஆங்கிலம் ஆட்சி புரிகிறது. இந்தியும் இடுக்கிலே பல வந்தமாக நுழைக்கப்படுகிறது.

இந்தப் பாழும் சூழ்நிலையில் தமிழன் சிந்திக்கத் தொடங்கிவிட்டான். தன்னைப்பற்றி, தன் இனத்தைப் பற்றி, தன் தாய் மொழிபற்றி, தன் தாயகம் பற்றிக் கவலை தோய்ந்த முகத்துடன் சிந்திக்கத் தொடங்கிவிட்டான்.

இந்த இதயத் துடிப்பின் எதிரொலியைக் கண்டு கொண்ட பல கட்சியாளரும் குழுக்களும் அதற்கு உருக் கொடுக்க—உயிர் கொடுக்க முன்வந்துள்ளனர். நாட்டுப் பிரிவினை தான் நல்ல ஒரு மருந்து என்பது சிலரின் விடாப்பிடிவாதம். ஒன்றுபட்ட இந்தியாதான் தமிழனின் உறுதுணை என்பது ஆட்சியாளரின் மந்திரோபதேசம். இந்த இரண்டு கூட்டமும தமிழ் மக்களின் வாழ்க்கையுடன் தங்களின் இயக்கத்தை இணைப்பதை ஒப்புவதில்லை. முன் னவருடைய வழி வெறும் பிரசாரக் கிளர்ச்சி, பிந்தியவரின் வழி அதிகார அடக்குமுறை ஆட்சி,

இந்த நிலைமையால்தான் " புதிய தமிழகம் " என்னும் முழக்கம் அனுபவத்தின் அடிப்படையினின்றும் அலங் காரமாக எழுகிறது. ஜனநாயகப் பண்பாடுள்ள சகலரின் தெளிவான ஒன்றுபட்ட கோரிக்கை அது. சுயேச்சை யான, பிரிந்துபோகும் உரிமை உத்தரவாதத்துடன் கூடிய தமிழனின் தன்மானக் கோரிக்கை அது. சகல தேசிய இனங்களுடனும் சமத்துவ அடிப்படையில், தங்கள் நலன் சிறிதும் பாதிக்கப்படாதவகையில் கூட்டு வாழ்வு கோரும் கோரிக்கை அது. சகல யதேச்சாதிகாரத்தையும் முடிவு கட்டி, மக்களாதி பத்தியத்தை சகல துறைகளிலும் நிறுவு வதில் கொண்டு செல்லும் கோரிக்கை அது. தமிழனின் இனப்பற்றை—மொழிப்பற்றை பிற இனத்தின் மீதுள்ள வெறுப்பாக மாற்றுத ஜன ஒற்றுமைக் கோரிக்கை அது. பெரும் பகுதி தமிழர்களான விவசாயிகளின் வாழ்வை உறிஞ்சும் நிலப் பிரபுத்துவப் புல்லுருவியை ஒழித்துக் கட்டி உழுபவனுக்கு நில மளிக்கும் உத்தமக் கோரிக்கை அது.

இத்தகைய கோரிக்கையான "புதிய தமிழகத்தை" என்னுடைய மதிப்புக்குரிய நண்பர், புலவர், திரு. சாமி சிதம்பரனுர் இந்த நூலில் தனக்கே உரித்தான விளம்ப மான எளிய நடையில் படம் பிடித்துக் காட்டுகிருர்.

தேசப்பற்றும், மொழிப்பற்றும், இனப்பற்றும் மக்க ளின் நல் வாழ்வுடன் இணைந்தவையே தவிர அதற்கு சம் பந்தமில்லாத வறட்டு வக்ஷியங்களல்ல என்ற சித்தாந்த பரம்பரையில் வளர்ந்துள்ளவர் நண்பர் சாமி. சிதம்பர ஞர்.

விருப்பு வெறுப்பில்லாத வகையில், தமிழனின்புது உணர்வை யதார்த்தச் சூழ் நிலைமை என்னும் அளவு கோல் கொண்டு அளந்து காட்டித் தமிழனை அறை கூவி அழைக்கிருர் இச்சிறு நூலில்.

இச்சிறுநூல் இனப் பிரச்சினையைப்பற்றிய ஒரு சரி யான ஜனநாயகக் கண்ணேட்டத்தைப் பார்க்க உதவும், மக்களின் இனப்பிரிவினை கோஷமும், பலவந்தமான இனப் பிணைப்பும், கோஷமும், சுரண்டும் வர்க்கத்தின் நலன் என்ற ஒரே அடிப்படையின்மீது கட்டப்பட்ட இருமுகங்கள் என் பதை ஆத்திர மூட்டாத வகையில் அறிவு பூர்வமாக எடுத்துக காட்டியுள்ளார். உழைத்துப் பாடுபடும் சகல தமிழர்களின் உண்மையான விடுதலையின்றும் எழுவது தான் புதிய தமிழகம் எனபதை விவசாயிகளுக்கும்' தொழி லாளிகளுக்கும் அறிவாளிகளுக்கும் விளங்கக் கூறும் நூல் இது.

புதிய தமிழகம் அமைக்கும் பாதையில் இத்தமிழ் நூல் நல்லதொரு வழிகாட்டியாகும். ஒவ்வொரு தமிழ மகனுடைய—மகளுடைய கையிலும் இந்த நன்னூல் இருக்கவேண்டும் என்பது என் அபிப்பிராயம்.

சென்னை,<br>
18—12—1952.

மணலி. சி. கந்தசாமி,

# முந்துவோம்!

★

முந்துவோம்! முந்துவோம்! முந்துவோம்

1. இனிய புதிய தமிழகத்தை
ஏற்படுத்த முந்துவோம்!
ஏழை அடிமை நிலைமை மாற்றி
எவரும் ஒன்ருய் வாழுவோம்?
மனிதர்தம்மை மனிதர் ஏய்க்கும்
மாய வாழ்வை வீழ்த்துவோம்!
மக்கள் வாழ்வில் இன்பம் வளரும்
வழிகள்கண்டு மகிழுவோம்!

2. அன்னியர்கள் நமது நாட்டில்
ஆட்சி செய்ய இனிவிடோம்!
அவர்கள் தோட்டம் தொழில்கள் யாவும்
நமக்குச் சொந்தம் ஆக்குவோம்!
இன்னும் உழவர் வாழ்வை உறிஞ்சும்
முறைமை நாட்டில் இருப்பதா?
இந்த நிலையை நீக்கி உணவுப்
பண்டம் பெருக வழி செய்வோம்!

3. தமிழில் ஆட்சி, தமிழில் கல்வி
தாயகத்தில் நாட்டு வோம்!
தரணியெங்கும் தமிழைக் கலையைப்
பண்பைப் புகழைப் பரப்புவோம்!
தமிழர் என்று தலை நிமிர்ந்தே
உரிமையோடு வாழுவோம்!
தயக்கம் இன்றிப் பிறரும் நமது
நிலையில் வாழ உதவுவோம்!

சாமி - சிதம்பரனர்.

UNIVERSITY EXTENSION LIBRARY
MADURAI

# புதிய தமிழகம்

## 1. புதிய தமிழக அமைப்பு

### மொழிவாரி மாகாணம் ஏன்?

அடிமைத் தளையை அறுத்து வீசுவோம்! ஆண்டான் அடிமையற்ற புதிய சமுதாயத்தை ஆக்குவோம்! பள்ளம் படுகுழியற்ற சமநிலைச் சமுதாயத்தைக் கட்டுவோம்! மக்கள் வாழ்விலே இன்பத் தேன் பாய்ந்தோடச் செய்வோம்! இன்று எங்கும் இதே முழக்கந்தான். இத்தகைய வாழ்க்கைக்கு வழி காட்டும் சாலை அமைப்பதே இன்று நமது முன்னே நிற்கும் முதல் வேலை.

இதற்காகவே இந்நாட்டில் உள்ள ஒவ்வொரு மொழியினரும் உரிமையாட்சி கேட்கின்றனர். எல்லோரும் இன்புற்றிருக்கும் இனிய வாழ்வை விரும்பாதவர்கள் யார்? மனிதத் தன்மையை அறிந்த அனைவரும—மனிதத் தன்மையுடைய மக்கள் அனைவரும் ஒற்றுமை வாழ்வையும், உரிமை ஆட்சியையும் வரவேற்றே தீர்வார்கள்.

புதிய தமிழகம்! ஒன்றுபட்ட தமிழகம்! புத்துணர்ச்சி! புது வாழ்வு! தமிழ் முன்னேற்றம்! தமிழ்க் கல்வி! தமிழர் ஒற்றுமை! தமிழ் ஆட்சி! இந்த முழக்கங்கள் தமிழ் நாட்டிலே எங்கும் கேட்கின்றன. ஏன் இம்முழக்கங்கள்! ஏழை—அடிமையற்ற சமுதாய வாழ்வு

ஏற்பட்டே யாகவேண்டும் என்பதே இம்முழக்கங்களின் குறிக்கோள். மக்கட் சமுதாய வளர்ச்சி வரலாற்றை அறிந்தவர்கள் இந்த நோக்கத்தில் மாறுபடமாட்டார்கள்.

மக்களின் கூட்டுறவு வாழ்க்கைதான் இன்றைய மகத்தான நாகரிக வளர்ச்சிக்குக் காரணம்; மக்கள் விலங்குகளைப்போலத் தனித்தனியே வாழ்ந்திருப்பார் களாயின் இந்த உலகம் காடாகத்தான் காட்சியளிக்கும்; விலங்குகளைப்போல் தம் வயிற்றுப்பாடு ஒன்றையே குறி யாகக்கொண்டு வாழ்ந்திருப்பார்களாயின் இன்றைய நாகரிக உலகப் பூஞ்சோலையை நாம் காணவே முடியாது. மக்களும் விலங்குகளைப் போலத்தான் வாழ்வார்கள்: உலகமும் வெறும் காடு, மலை, வனம், பள்ளம் படுகுழி, மேடுகளாகத்தான் காட்சியளிக்கும். இவை உண்மையா அல்லவா? சிந்தியுங்கள்!

கூட்டு வாழ்க்கையின் சிறப்பைப் பல மக்கள் இன் னும் உணரவில்லை. பொது மக்கள் இதை உணராமல் இருக்கவேண்டும் என்பதே சில குள்ள மனத்தர்களின் குறிக்கோள். இவர்கள்தாம் சமுதாயப் புல்லுருவிகள். தன்னல வாதிகள். மக்களை அடிமைப்படுத்தி—அவர்கள் உழைப்பைச் சுரண்டி உயர்ந்தவர்கள்போல் வாழ்வு நடத்துகிற சிலந்திப பூச்சிகள். இவர்களால்தான் மனித சமூகம் சின்னாபின்னமாகச் சிதைந்து கிடக்கிறது. இப் படிச் சிதைந்து கிடக்கும் மக்களை ஒன்று சேர்த்தாக வேண்டும். இதுவே இன்று மனிதாபிமானிகள் —மக்கள் அன்பர்கள்—மக்கள் ஊழியர்கள் செய்யவேண்டிய முதல் வேலை.

மக்களை ஒன்றுசேர்க்கும் பணியின் முதற் படிதான் மொழிவாரியாக மாகாணங்கள் பிரியவேண்டும் என்பது; அல்லது தேசிய இனவாரியாக மாகாணங்கள் பிரிய வேண்டும் என்பது. இந்த மொழிவாரி மாகாணக் கிளர்ச் சியுடன் இணைந்ததுதான் ஐக்ய தமிழகக் கிளர்ச்சி.

புதிய - ஐக்ய தமிழகம் ஏன்? மொழிவாரி—அல்லது இனவாரி மாகாணங்கள் ஏன்? அவைகள் எவ்வாறு அமைந்திருக்க வேண்டும்? அவற்றை அடைவது

எப்படி? இத்தகைய மாகாணங்கள் அமைந்தால் மக்கள் வாழ்வு எப்படியிருக்கும்? .மொழிவாரி மாகாணப் பிரிவினையை எதிர்ப்பவர்கள் யார்? அவர்கள் எண்ணம் என்ன? இவைகளைப்பற்றித் தெளிவாகத் தெரிந்து கொள்ளவேண்டும்.

## பரந்த தமிழகம்!

ஐக்ய—அல்லது புதிய தமிழகம் என்றால் என்ன? அதன எல்லை யாது? அதன் கொள்கை என்ன? இவைகளை முதலில் அறிந்துகொள்ளுவோம்.

பழய சிறந்த தமிழகத்தை மீண்டும் உருவாக்குவதே புதிய தமிழகம்! பழய தமிழர்களின் சிறந்த பண்பாடுகளை இந்திய நாடு முழுவதும் பரப்புவதே புதிய தமிழகத்தின் நோக்கம். "எல்லோரும் இன்புற்றிருக்க வழி காண்பதே எங்கள் நோக்கம்" என்று முழங்கிய பண்டைத் தமிழனுடைய குறிக்கோளை உலகுக்குப் பறை சாற்றுவதே புதிய தமிழகத்தின் அடிப்படைக் கொள்கை.

புதிய தமிழகத்திற்குச் சென்னையே தலைநகரம், தமிழகத்தின் நடுப்பாகத்திலே தலைநகரை மாற்றிக் கொள்ளும்படி நேர்ந்தாலும் சென்னை தமிழ் நாட்டைச் சேர்ந்ததாகவே இருக்கும்.

சென்னை நகரை ஆந்திர மாகாணத்துடன் சேர்க்க முடியாது. சென்னை நகரை இரு துண்டாக வெட்ட வேண்டும் என்பது வெறும் பேச்சு.

சென்னை நகரைத் தனி மாகாணமாக்க வேண்டும் என்பது பொறாமைப் பேச்சு. சென்னை நகரம் தனி மாகாணமாவது புதிய தமிழகத்துக்குப் புற்று நோய்.

புதிய தமிழகத்திலே அயல்நாட்டு ஏகாதிபத்திய அரசு நிலைத்திருக்க முடியாது; நிலைத்திருக்க இடங் கொடுத்தால் அது புரையோடிய புண்ணாகவே யிருக்கும். இன்று பிரஞ்சு ஏகாதிபத்தியத்தின் கீழ் புதுச்சேரி, காரைக்கால் என்ற இரண்டு நிலப் பகுதிகள் இருக்கின்றன. இவைகள் தமிழகத்துடன் இணைக்கப்படவேண்டும்,

அவை தாயகத்தோடு இணையவேண்டும். இது அப்பகுதி மக்களின் ஆவல்; துடிதுடிப்பு. இதற்கு ஆதரவளித்து அவர்களின் ஆவலை நிறைவேற்றுவது புதிய தமிழகக் கிளர்ச்சிக்காரர்களின் கடமை.

திருவாங்கூர்—கொச்சி ராஜ்யத்தில் நீண்ட நெடுங் காலமாக அடங்கிக் கிடக்கும் தமிழ் மக்களும் தமிழ்த் தாயகத்தோடு இணையப் போராடிக் கொண்டிருக்கின்றனர். அவர்களுடைய போராட்டத்திற்கும் ஆதரவளித்தாக வேண்டும். அவர்களையும் அவர்கள் வாழும் நிலப்பகுதி யையும தமிழ்த் தாயகத்தோடு இணைத்தாக வேண்டும்

இந்தத் தமிழகத்துடன் சித்தூர் மாவட்டத்தைச் சேர்ந்த சில நிலப் பகுதிகளையும் சேர்க்கவேண்டும் என்ற கிளர்ச்சி தமிழகத்திலும் இருந்து வருகிறது. சித்தூர் மாவட்டத் தமிழ் மக்களிடையும் இருந்து வருகிறது

திருத்தணி, புத்தூர், சித்தூர், கங்குந்திருப்பம் ஆகிய சித்தூர் மாவட்டத்தைச் சேர்ந்த நான்கு தாலுக்காக்களி லும தமிழர்களே பெரும்பான்மையோர். ஆகையால் அந்த வட்டாரங்களையும் தமிழகத்தோடு இணைக்கவேண் டும் என்று கூறுகின்றனர். இந்த இணைப்பை வரவேற்க வேண்டும்.

இதனை ஒரு எல்லை வரையறுப்புக் குழுவின் மூலம் முடிவு செய்துகொள்ளலாம்; அல்லது அந்த வட்டார மக் களின் வாக்கெடுப்பின் மூலம் முடிவு செய்துகொள்ளலாம்; ஆகையால் புதிய தமிழகம் உருவாவதற்குச் சித்தூர் மாவட்டப் பகுதிகளையும் இணைக்கவேண்டும் என்பதைத் தற்போது ஒரு நிபந்தனையாக வைத்துககொள்ள வேண் டாம். இதுவே ஐக்கிய தமிழக இயக்கத்தாரின் விருப்பம்.

சித்தூர் மாவட்டத்தைச் சேர்ந்த மேலே கூறிய நான்கு தாலுக்காக்களில் உள்ள மக்களும் தமிழகத்தோடு இணைந்தே தீரவேண்டும் என்று முடிவு செய்வார்களானல் அந்த முடிவுக்கு எவரும் முட்டுக்கட்டை போட முடியாது.

நமது நாட்டின் தெற்கு எல்லையில் உள்ள இலங்கை ஒரு சிறு தீவு. அத்தீவின் ஒரு பகுதியான யாழ்ப்பாணத்

தில் பரம்பரையாகத் தமிழர்கள் வாழ்ந்து வருகின்றனர். அவர்களுக்கும் தமிழ் நாட்டுத் தமிழர்களுக்கும் பண்பாட்டில் வேற்றுமை யில்லை.

இலங்கைக்கும் தமிழகத்திற்கும் சரித்திர உறவுண்டு; கலை உறவுண்டு: பண்பாட்டு உறவுண்டு; அங்கு வாழும் சிங்களவர்களுக்கும் தமிழர்களுக்கும் நெடுங்கால உறவுண்டு.

இன்று அங்கு முளைத்திருக்கும் சிங்களவர் தமிழர் வெறுப்பு—சிங்களவர் இந்தியர் வெறுப்பு—இயற்கையாக் மூண்டதல்ல. இவை அந்த நாட்டிலே இன்னும் ஆதிக்கம் பெற்றிருக்கும் வெள்ளையர் வைத்த நெருப்பு.

இலங்கையிலிருந்து வெள்ளையர் ஆதிக்கம் அறவே ஒழிந்தால்—நிலப் பிரபுத்துவம் ஒழிந்தால்—அந்நியர் மூலதனமும் அவர்கள் வியாபாரமும் ஒழிந்தால் அங்கு இன்று பற்றியெரியும் வெறுப்புத் தீ அணைந்து சாம்பலாகிவிடும். சிங்களவர்—தமிழர் உறவு மீண்டும் வளரும்.

இந்த இலங்கைத் தீவும் தமிழகத்தோடு இணைய விரும்பினால் அதற்கும் யாரும் அணைபோட முடியாது.

ஆகவே நமது புதிய தமிழகம், வடவேங்கட முதல் தென் குமரிவரை, இலங்கையும் சேர்ந்த பரந்த தமிழகமாக விளங்கக்கூடிய காலம் வந்தால் அதில் வியப்பில்லை. வரலாம். வருவதற்கு இடம் உண்டு.

## உடனடிக் கோரிக்கை

இத்தகைய பரந்த தமிழகம் ஏற்படுவது உடனடியாக முடியாத செயல். இத்தமிழகத்தை உருவாக்க வேண்டுமானால் பல்லாண்டுகளாகலாம். அதுவரையிலும் தமிழகம் உருவாகாமல் தயங்கி நிற்கவும் முடியாது. தமிழகம் உருவாகாமல் தயங்கி நிற்குமானால் தமிழர்களின் முன்னேற்றமும் தடைப்பட்டே நிற்கும். தமிழர்க்குள் பிளவும் பிரிவினையும் வளர்ந்துகொண்டே போகும். பிற்போக்கு சக்திகள் தலையெடுத்து இன்றுள்ள தமிழர்கள் வாழ்வை இன்னும் அலங்கோலமாக்கி அல்லற்படுத்தும். ஆகை

யால் உடனடியாக உருவாகக்கூடிய ஒரு தமிழகத்தை உண்டாக்கித் தீரவேண்டும். இதுவே ஐக்கிய தமிழகக் கிளர்ச்சியின் உடனடியான குறிக்கோள்.

சென்னை நகரம், செங்கற்பட்டு, வட ஆற்காடு, தென்னாற்காடு, தஞ்சாவூர், ராமநாதபுரம், மதுரை, திருநெல்வேலி, கோயம்புத்தூர், நீலகிரி, சேலம் ஆகிய தமிழ் ஜில்லாக்கள்; பிரஞ்சு ஆதிக்கத்தில் உள்ள காரைக்கால், புதுச்சேரி பகுதிகள்; திருவாங்கூரில் தமிழர்கள் வாழும் பகுதிகள்; இவைகளை ஒன்றுசேர்த்து, உடனடியாக தமிழகம் அமைக்க வேண்டும்.

சித்தூர் மாவட்டத்தில் தமிழர் வாழும் பகுதிகளைப் பற்றி ஒரு எல்லைக் கமிட்டியின்மூலம் முடிவு செய்துகொள்வது, அல்லது பொது மக்கள் வாக்களிப்பின் மூலம் முடிவு செய்து கொள்ளுவது என்ற நிபந்தனையையும் புதிய தமிழக அமைப்பிலே ஏற்படுத்திக் கொள்ளலாம். இதுவே புதிய தமிழகக் கிளர்ச்சிக்காரர்கள் குறிப்பிடும் தமிழகத்தின் எல்லை.

இத்தகைய புதிய தமிழகக்கிளர்ச்சியுடன் கீழ்க்கண்ட கொள்கைப் போராட்டமும் நடந்தே தீரவேண்டும்.

1. தமிழ் நாட்டில் உள்ள வெள்ளையர் மூலதனத்தை—அவர்கள் நடத்திவரும் தொழில்களை எவ்வித கைமாறும் தராமல் தேசீய மயமாக்குவது; அதாவது தமிழகத்துக்கு உரிமையாக்குவது.

2. வெள்ளையர் முதலீட்டையும், தொழில்களையும் பறிமுதல் செய்து தேசீய மயமாக்குவதன் மூலம் தமிழ் நாட்டிலே தொழில் வளர்ச்சியைப் பெருக்குவது. இதன்மூலம் அன்னியர் சுரண்டலுக்கும் முடிவு கட்டுவது.

3. நிலப் பிரபுக்கள், மடங்கள், கோயில்கள், ஆகியோரின் நிலங்களை கைமாறின்றிப் பறிமுதல் செய்து அவைகளை நிலத்திலே உழைக்கும் உழவர்களுக்கு உரிமையாக்குவது.

4. ஆங்கில ஆதிக்கத்தை அரசாங்கத்தி லிருந்து விரைவில் விரட்டி, தமிழ் மொழியை அர சாங்க மொழியாக்குவது.

5. தமிழ் நாட்டின் உயர்ந்த கலாசாரத்தை வளர்ப்பது. மேலே கூறிய எல்லையையும் கொள்கை களையும் உடைய புதிய ஐக்கிய தமிழகத்தை உடனடி யாக உருவாக்கத் தமிழர்கள் ஒன்றுபட்டுக் கிளர்ச்சி செய்தாக வேண்டும்.

புதிய—ஐக்கிய தமிழகம் சுய நிர்ணய உரிமையுடன் விளங்கவேண்டும். சுய நிர்ணய உரிமை என்பது தன்னு டைய ஆட்சி முறையைத் தானே வகுத்துக்கொள்ளும் உரிமை, இந்த ஐக்கிய தமிழகம் இந்திய யூனியனுடன் இணைந்தே நிற்கும். ஆனால் " தமிழர்களின் உரிமையிலே தலையிடாமலிருந்தால் இணைந்திருப்போம்; தலையிட்டால் உறவை அறுத்துக் கொள்ளுவோம்" என்று சொல்லும் உரிமையும், செய்யும் உரிமையும் ஐக்கிய தமிழகத்திற்கு உண்டு.

புதிய—ஐக்கிய தமிழகக் கிளர்ச்சியுடன் நிலப் பிரபுத் துவ ஒழிப்புக் கிளர்ச்சி, அந்நிய மூலதன ஒழிப்புக் கிளர்ச்சி இரண்டையும் இணைத்தே நடத்தியாகவேண்டும்.

இந்த இரண்டு ஒழிப்பும் ஏற்படாமல் உருவாகும் தமிழகத்தால் பயனில்லை. நிலப் பிரபுத்துவ நிலைப்பும், அந்நிய மூலதன ஆதிக்கமுங் கொண்ட தமிழகத்தில் தமிழ் மக்களின் உண்மையான ஆட்சி ஏற்பட முடியாது. அந்த ஆட்சி இன்றைய ஆட்சியைப் போலவேதான் இருக்கும்; நிலப் பிரபுக்களையும், முதலாளி வர்க்கத்தை யும், அந்நியர் ஆதிக்கத்தையும் கொண்ட ஆட்சியாகவே தான் இருக்கும்.

ஆகையால் நிலப் பிரபுத்துவ ஒழிப்பைப்பற்றிப் பேசாமல்—அந்நியர் மூலதன ஒழிப்பைப்பற்றிப் பேசாமல் நாட்டுப் பிரிவினையைப்பற்றி மட்டும் பேசுவோர் யாராக யிருந்தாலும் சரி! அவர்கள் உண்மையான மக்கள் ஆட் சியை விரும்புகிறவர்கள் அல்லர்; அவர்கள் சர்வாதிகார

வெறியர்கள் ; அல்லது வெறும் கலகக்காரர்கள் என்று தான் பொது மக்கள் முடிவு கட்டுவார்கள்.

மக்கள் பகுத்தறிவு வளர்ந்தோங்கி வருங் காலம் இது. பொது மக்களிடையிலே சுயேச்சையான எண்ணங் களும், கொள்கைகளும் பரவி வரும் காலம் இது. பொது மக்கள் எடுப்பார் கைப்பிள்ளைகளாக இருந்த காலம் மலை யேறிக் கொண்டிருக்கிறது. தாமாகவே சிந்திக்கும் திறமை பெற்று வருகின்றனர் மக்கள். இந்த நிலைமை யில் ஒரு தனி மனிதனால் எதையும் சாதித்துவிட முடி யாது. பொது மக்களின் விருப்பத்திற்கு மாருக எந்த மனிதனாலும் எதுவும் செய்துவிட முடியாது. இது இன்றுள்ள உண்மை நிலைமை.

ஆகையால் மக்களின் ஒன்றுபட்ட கிளர்ச்சியினால் தான்—போராட்டத்தினால் தான்—புதிய ஐக்கிய தமிழ கத்தை உருவாக்க முடியும். இந்த உண்மையைத் தமிழ் மக்கள் அறியாதவர்கள் அல்லர். ஆகையால் ஐக்கிய தமிழகத்தை உருவாக்கத் தமிழர்கள் அனைவரும் கட்சி வேறுபாடின்றி ஒன்றுபட வேண்டும். ஒன்றுபட்டால் தான் உண்டு புதிய வாழ்வு.

அரசியலே ஒரு நாட்டு மக்களின் உயிர்! அரசியலின் மூலந்தான் தங்கள் வாழ்வை நல்வாழ்வாக்கிக் கொள்ள முடியும். இதுவே பண்டைத் தமிழர் கொள்கை. இன் றைய அரசியல் தத்துவமும் இதுதான். இந்த உண்மையை உணர்ந்துகொண்ட எவரும் சுய நிர்ணய உரிமையோடு கூடிய புதிய தமிழகத்தை வாழ்த்தி வர வேற்றே தீர்வார்கள்.

# 2. ஆட்சியே மக்களுயிர்

## தமிழர் கொள்கை

அரசாட்சியே நாட்டின் உயிர் நாடி. அரசாட்சியினால் தான் மக்கள் வாழ்வை நல்வாழ்வாக்க முடியும். ஆட்சி சீர்கெட்டிருந்தால் மக்கள் வாழ்வும் சீர்கெட்டிருக்கும். நல்ல ஆட்சிமுறை இருந்தால்தான் நாடும், நாட்டு மக்களும் நல்ல முறையில் வாழ முடியும்.

இந்த உண்மையைத் தமிழர்கள் அறிந்தவர்கள். இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட தமிழர்கள் இதை அறிந்திருந்தனர். இதனையே எல்லாவற்றிலும் முதன்மையான கொள்கையாகக் கொண்டிருந்தனர். பண்டைத் தமிழ் இலக்கியங்கள் இவ்வுண்மையை நமக்குப் பறை சாற்றுகின்றன.

"நெல்லும் இவ்வுலகமக்களின் உயிரைக் காப்பாற்றுவதன்று; தண்ணீரும் இவ்வுலக மக்களின் உயிரைக் காப்பாற்றுவதன்று. அரசியலையே இவ்வுலகம் உயிராகக் கொண்டிருக்கின்றது. ஆகையால், "நாமே இவ்வுலகத்திற்கு உயிர்" என்பதை அறிந்திருத்தல் ஆட்சியாளரின் கடமை" என்பது புறனூற்றுப் பாட்டு ஒன்றின் கருத்து.

> நெல்லும் உயிர் அன்றே, நீரும் உயிர் அன்றே,
> மன்னன் உயிர்த்தே மலர் தலை உலகம்,
> அதனால், யான் உயிர் என்பது அறிகை,
> வேல் மிகுந்தானை வேந்தற்குக் கடனே.

இதுதான் அந்தப் பாடல். இப்பாட்டு தனிப்பட்ட ஒரு அரசனைக் குறிப்பதாயினும், இதில் உள்ள அரசன் என்பதை அரசியல் என்று மாற்றிக் கொண்டால் போதும்.

நில வளம் பொருந்திய நாடாகட்டும்; நீர் வளம் நிறைந்த நாடாகட்டும்; நல்ல ஆட்சி இல்லாவிட்டால் அவைகளால் பயனில்லை. மக்களுடைய—வாழ்வை முன்

வைத்து நடத்தாத ஆட்சியில் நிலவளமும் பயன்படாது; நீர் வளமும் பயன்படாது.

உழவர்களுக்குப் பாதுகாப்பளிக்கவேண்டும்; உற்பத்தியைப் பெருக்க ஊக்க மூட்டவேண்டும்; அப்பொழுது தான் நெல் முதலிய உணவுப் பண்டங்கள் மிகுதியாக விளையும். விளைவது மட்டும் போதாது: விளைந்த தானியங்களை நாடெங்கும் உள்ள மக்களுக்குக் கிடைக்கும்படி செய்யவேண்டும். அதற் கேற்ற சாலைகளும் போக்குவரத்துச் சாதனங்களும் இருக்கவேண்டும். இவைகள் இல்லாவிட்டால் விளைந்த தான்யங்கள் விளைந்த இடங்களிலே தான் கிடக்கும். அவைகளால் யாருக்கு என்ன பயன்?

இதைப் போலவே நாட்டிலே பெய்யும் மழை நீரைத் தேக்கி வைக்க ஏரிகள்—கண்மாய்கள் அமைக்கப்பட்டிருக்க வேணடும். ஆற்றிலே ஓடி வரும் நீரைத் தடுத்து வாய்க்கால்களின் வழியே செலுத்தி வயல்களுக்குப் பாய அணைக்கட்டுகள் கட்டப்பட வேண்டும்; வாய்க்கால்கள் வெட்டப் படவேண்டும். புதிய ஆறுகள் அமைக்கப்பட வேண்டும்.

இவைகளைத் தனிப்பட்ட மனிதர்கள் செய்வதைவிட, மக்களின் கூட்டுறவைக் கொண்ட அரசாங்கத்தால் தான் திறம்படச் செய்ய முடியும். இவைகளைச் செய்ய வேண்டியதே அரசாங்கத்தின் முதற் கடமை. இதனுல் தான் நெல்லைக் காட்டிலும், நீரைக் காட்டிலும் அரசாட்சியே நாட்டின் உயிர் என்று கூறினர்.

தமிழன் எந்தக் காலத்திலும் அரசியலைப் புறக்கணித்தவன் அல்லன்; என்றும் அவன் அரசியலிலே கவலை கொண்டவன். "இராமன் ஆண்டால் என்ன? இராவணன் ஆண்டால் என்ன?" "நாட்டுக்கு நல்ல துரை வந்தாலும் தோட்டிக்கு நல்வாழ்வில்லை" என்ற பழமொழிகள் — இடைக்காலத்திலே எழுந்தவை. தமிழர்களை அரசியலிலே பங்கெடுத்துக் கொள்ள ஒட்டாமல் தடை செய்வதற்கே இப்புதுமொழிகள் எழுந்தன. தன்னலத்தைக் குறிக்கோளாகக் கொண்ட நிலப் பிரபுக்

களின் ஆட்சியின் ஆரம்ப காலத்தில் தான் இத்தகைய பழமொழிகள் தோன்றின.

## நாட்டைக் காக்கவே மக்கள்

தமிழர்கள் எந்தக் காலத்திலும் அன்னியர்களுக்கு அடிமைப்பட்டு வாழ விரும்பியதே இல்லை. பண்டைத் தமிழர்கள் தம் நாட்டை அன்னியர்கள் கைக்கொள்ளாமற் காப்பாற்றுவதற்காகவே பிள்ளைப் பேறு வேண்டுமென்று விரும்பினர்.

தாம் சேர்த்துவைக்கும் செல்வத்தை ஆள—கட்டி வைத்திருக்கும் மாளிகையிலே வாழ—வாங்கிவைத்திருக்கும் நில புலன்களை அனுபவிக்கப் பிள்ளை பிறக்க வேண்டும் என்று இக்காலத் தமிழர்கள் விரும்புகின்றனர்; தாம் இறந்த பின் தமக்குக் கொள்ளிவைத்துக் குடமுடைக்கப் பிள்ளை வேண்டுமென்று விரும்புகின்றனர்.

நாட்டின் மேல் மாற்றான் படைதிரட்டி வந்தால் தங்கள் பிள்ளைகள் அஞ்சாமல் போர்க்களத்திலே குதிக்க வேண்டும். எதிரிகளின் படைகளை விரட்டி யடித்து நாட்டைக் காப்பாற்ற வேண்டும். இது தான் பண்டைத் தமிழர்கள் விருப்பம். இதுவே தங்கள் மக்களின் கடமை: இதற்காகவே "மக்கட்பேறு" வேண்டும் என்று கருதினர்.

இதனை "ஒளிறுவாள் அரும் சமம் முருக்கிக்,
களிறு எறிந்து பெயர்தல் காளைக்குக் கடனே"

என்ற புற நானூற்றுப் பாடல் வரிகளால் அறியலாம்.

"ஒளி பொருந்திய வாளைக் கையிலே கொண்டு, அரிய போர்க்களத்திலே புகுந்து, எதிரிகளை அழித்து, அவர்களுடைய யானைகளையும் கொன்று வெற்றியுடன் திரும்புதல் தான் என்னுடைய மகன் கடமை" என்பதே இதன் பொருள்.

அன்னியன் ஆட்சி நமது நாட்டிலே நிலைத்த பின்—நிலப்பிரபுத்துவ ஆட்சி நிலைத்து வேரோடிய பின் தமிழர்

கள் தங்கள் உரிமைக்குப் போராட வல்லமையற்றுக் கிடந்தனர். அந்நியரை இந்நாட்டில் நிலைக்கவிடமாட்டேன் என்று மூச்சுள்ள வரையிலும் போராடிய கட்டபொம்மன் போன்றவர்கள் துரோகிகளின் துணை கொண்டு அன்னியர்களால் அடக்கப்பட்டனர்.

வெள்ளையர்கள் தமிழர்களை அடக்க எவ்வளவோ அடக்கு முறைகளை யெல்லாம் கையாண்டனர். அவர்களால் தமிழர்களின் உரிமைப் போராட்டத்தைத் தடுத்து நிறுத்தத்தான் முடிந்தது. ஆனால் அவர்கள் உள்ளத்திலே பொங்கிக் கொண்டிருந்த சுதந்தர தாகத்தை அடக்க முடிய வில்லை; அழிக்கமுடியவில்லை.

தமிழர்களின் சுதந்தர தாகத்தின் சின்னந்தான் கப்பலோட்டிய தமிழன் வீரச் சிதம்பரனாரின் சாதனை; யார் தடுத்தாலும் தாயின் மணிக்கொடியை விடேன் என்று உயிர் நீத்த திருப்பூர்க் குமரனின் தியாகம்.

"செந்தமிழ் நாடெனும் போதினிலே,
இன்பத்தேன் வந்து பாயுது காதினிலே"

என்று பாரதி முழங்கியது பண்டைத் தமிழர்களின் தேசப்பற்றின் பிரதி பலிப்பே.

புதிய தமிழகத்தை அமைப்போம்! தமிழ் நாடு தமிழருக்கே! திராவிட நாடு திராவிடருக்கே! தமிழரசு வேண்டும்!

இந்த முழக்கங்கள் இன்று தமிழ் நாட்டிலே எத்திசையிலும் ஒலிக்கின்றன. இவைகள் தமிழ் மக்களின் பரம்பரை உரிமை வேட்கையிலிருந்து உதித்த முழக்கங்களே.

நமது நாட்டை நாமே ஆள வேண்டும் என்ற உணர்ச்சி—முழக்கம் தமிழ்நாட்டில் மட்டிலும் இல்லை. இந்திய நாடெங்கும் வேரோடிவிட்டது. தமிழரைப் போலவே ஒவ்வொரு மொழியினரும் தாங்கள் வாழும் வட்டாரத்தைத் தாங்களே ஆளவேண்டும் என்று விரும்புகின்றனர்; கேட்கின்றனர்.

ஒவ்வொரு மொழியினரிடையும் தோன்றியுள்ள இந்த உணர்ச்சி வரவேற்கத் தக்கது. ஒவ்வொரு மொழியினரும் ஒன்றுபட்டுநின்று தங்கள் வட்டாரத்தைத் தாங்களே ஆளக்கூடிய உரிமையை அடைய வேண்டும். அவ்வுரிமையை அடைந்தால் தான் இந்தநாட்டிலே நீண்டநாளாக நிலைத்திருக்கும் நிலப்பிரபுத்துவக் கொடுமை நீங்கும். சுரண்டல் கொள்ளை ஒழியும்; அந்நிய நாட்டினரின் ஆதிக்கம் அழியும், பல்லாண்டுகளாக நசுங்குண்டு கிடக்கும் பாட்டாளிகளும், விவசாயிகளும் மனிதர்களாக வாழ முடியும்.

இதற்காகவே தான் "நாம் இருக்கும் நாடு நமதென்பது அறிந்தோம்; இது நமக்கே உரிமையாம் என்பதுணர்ந்தோம்" என்று முழங்கினான் பாரதி.

எதற்காக மொழி வாரி மாகாணம் வேண்டும்? மக்கள் ஏன் மொழி வாரி மாகாணம் கேட்கின்றனர்? இதை மறுப்போர் யார்? அவர்கள் உள் எண்ணம் என்ன? என்பவைகளை இனி விளக்கிக் கூறுவோம்.

# 3. மொழிவாரி மாகாணக் குறிக்கோள்

## பாரதியின் கனவு.

மொழிவாரி மாகாணம் பிரிவினை உணர்ச்சியை உண்டாக்குவது, மாகாணப் பற்றையும், மாகாண வெறுப்பையும் வளர்ப்பது; இந்தியாவின் ஒற்றுமைக்கு ஊறு விளைப்பது; இந்தியாவின் பாதுகாப்புக்கு ஏற்றதல்ல; என்று பிதற்றுகின்றனர் சிலர்.

'இப்படிப் புலம்புகின்றவர்கள் யார்? இன்று மத்திய அரசாங்கத்திலே அதிகாரம் வகிப்பவர்கள்தான் இதைப்பற்றி அடிக்கடி அலறுகின்றனர். இன்றைய அரசியல் சட்டப்படி மத்திய அரசாங்கம் சர்வாதிகாரம் படைத்தது. மாகாண அரசாங்கங்கள் வெறும் ஸ்தல ஸ்தாபனங்கள் போன்றவை. மத்திய அரசாங்கத்தின் கருணைகடாட்சமின்றி மாகாண அரசாங்கங்கள் நிர்வாகம்

நடத்தமுடியாது. ஆகையால் மத்திய அரசாங்கத்திலே அதிகாரம் வகிப்பவர்கள் மொழிவாரி மாகாணப் பிரிவினைக்கு முட்டுக்கட்டையாயிருப்பதில் வியப்பில்லை.

இந்நாட்டின் புல்லுருவிகளான நிலப் பிரபுக்கள், ராஜப் பிரமுகர்கள், இந்நாட்டிலே பல பெரிய தொழில்களை நடத்திக் கொள்ளையடிக்கும் அந்நியர்கள், அவர்களுடன் சேர்ந்து கூட்டுக் கொள்ளையடிக்கும் கும்பல்கள், ஆகியவர்களும் மொழிவாரி மாகாணப் பிரிவினையை எதிர்க்கின்றனர், இவர்கள் மத்திய அரசாங்கத்தின் எதிர்ப்புப் பல்லவிக்கு ஏற்றவாறு மத்தளம் அடிக்கின்றனர்.

ஆனால் இந்த நாடெங்கும் உள்ள எல்லாத் தனித் தனி மொழி பேசும் மக்களும் தனித்தனி மொழிவாரி மாகாணம் வேண்டுமென்றே கேட்கின்றனர். இவர்கள் இவ்வாறு கேட்பதற்குக் காரணம் என்ன?

இந்த நாடு குடி அரசு நாடு; ஜனநாயக நாடு; சுதந்தர நாடு; என்று காங்கிரஸ் தலைவர்கள் முழங்குகின்றனர்.

'எங்கும் சுதந்தரம் என்பதே பேச்சு,
நாம் எல்லோரும் சமம் என்பது உறுதியாச்சு"

என்று உரத்துப் பாடுகின்றனர்.

ஆனால் சுதந்தரம் வந்தது என்பதற்கான அறிகுறி ஒன்றுமே காணப்படவில்லை.

சுதந்தர நாட்டிலே மக்கள் வாழ்க்கை எப்படி யிருக்க வேண்டும் என்பதைப்பற்றிப் பாரதி பாடினர்.

ஏழையென்றும் அடிமையென்றும்
எவனும் இல்லை; சாதியில்
இழிவு கொண்ட மனிதர் என்பது
இந்தியாவில் இல்லையே;

வாழி! கல்வி செல்வம் எய்தி
மனமகிழ்ந்து கூடியே
மனிதர் யாரும் ஒரு நிகர்
சமானமாக வாழ்வமே.

இந்தப் பாட்டைப் பாடாத காங்கிரசுக்காரர்கள் இல்லை. ஆனால் சுதந்தரம் வந்த பின்னும் இந்தப் பாட்டைப் பாடுகின்றனர். இந்தப் பாடலை அர்த்த மற்ற பாடலாக ஆக்கிவிட்டனர். இந்தப் பாடலை அர்த்தம் உள்ள பாட்டாக்குவதற்கு ஆளுவோர் ஒன்றுமே செய்யவில்லை.

உழவுக்கும் தொழிலுக்கும்
வந்தனை செய்வோம்!

என்று வானதிர முழங்கினர். இன்று என்ன நடக்கிறது? உழவர்கள் உயிருக்குப் போராடுகின்றனர். தொழிலாளர்கள் வாழ்வுக்குப் போராடுகின்றனர். உழவும் தொழிலும் உயர்ந்தோங்கவேண்டுமானல் உழவர்களும் தொழிலாளர்களும் நல் வாழ்வு வாழவேண்டாமா?

இனி யொரு விதி செய்வோம்—அதை
எந்த நாளும் காப்போம்;
தனி யொருவனுக்கு உணவில்லை எனில்
ஜகத்தினை அழித்திடுவோம்.

என்று பாடினர் பாரதி. இதை எல்லாத் தேச பக்தர்களும் பாடினர்கள். ஆனல் நடப்பதென்ன?

வெள்ளைக்காரன் காலத்தில் நடந்த அதிகார தர்பார் தான் இன்றும் நடை பெறுகின்றது.

அடக்கு முறைக் கொடுமையில் வெள்ளைக்காரன் கெட்டான் என்று பெயர் எடுத்துவிட்டனர் காங்கிரசுக்காரர்கள்.

இந்த நாட்டு மக்களிலே நூற்றுக்குத் தொண்ணூற்றெண்பது பேர் விவசாயிகள்- பாட்டாளிகள்; இவர்கள் வாழ்க்கையிலே எந்த மாறுதலும் ஏற்படவில்லை. வெள்ளைக்காரன் ஆண்ட காலத்தில் இருந்ததைவிட பாட்டாளி விவசாயிகளின் இன்றைய வாழ்வு படுமோசம்.

இந்த நாட்டு விவசாயம் வளர்ச்சியடையவில்லை. நாளுக்கு நாள் நாசமடைந்து வருகிறது.

இந்த நாட்டிலே இந்த நாட்டு மக்களுக்குச் சொந்தமான பெரிய தொழிற்சாலைகள் எதுவும் ஏற்படவில்லை.

அந்நிய நாட்டு மூலதனம்—அதுவும் ஆதிக்க வெறி கொண்ட அமெரிக்க மூலதனம் இந்த நாட்டிலே நுழைந்து கொண்டிருக்கிறது; நுழைக்கப்படுகிறது.

எந்தெந்தத் துறைகளில் அந்நியர்கள், வெள்ளையர் ஆண்ட காலத்தில் நம்மைச் சுரண்டிக்கொண்டிருந்தார்களோ அந்தத் துறைகளெல்லாம் அப்படியே இருக்கின்றன. இன்னும் எவ்வித மாறுதலும் ஏற்படவேயில்லை. அவர்களுடைய சுரண்டற் கொள்ளை ஒழியவேயில்லை.

## ஜனநாயகம் எங்கே?

இவைகளைப்பற்றிப் பிறகு பேசுவோம். ஜனநாயக அரசாங்கம் என்று சொல்லப்படும் இந்த ஆட்சியிலே எல்லா மக்களும் பங்குகொள்ளுவதற்காவது வழியிருக்கிறதா? அரசாங்க நடவடிக்கைகளை நாட்டு மக்கள் அனைவரும் தெரிந்துகொள்ள முடியுமா? பொது மக்களுடைய அன்றாட வாழ்க்கையில் தொடர்புகொண்டிருக்கும் ஸ்தல ஸ்தாபனங்கள்—நீதி மன்றங்கள்—சட்ட சபைகள்—இவைகளின் நடவடிக்கைகளைப் பற்றியாவது பொது மக்கள் புரிந்துகொள்ள முடியுமா?

முதலில் சட்ட சபையை எடுத்துக்கொள்ளுவோம், வெள்ளைக்காரன் போய்விட்டாலும் நடவடிக்கைகள் எல்லாம் அவனுடைய மொழியில்தான். இன்றைய சட்ட சபையில் ஆங்கிலந் தெரியாத அங்கத்தினர்கள் எத்தனையோ பேர் உள்ளனர். அவர்கள் அந்த நடவடிக்கைகளை எப்படிப் புரிந்துகொள்ள முடியும்?

இன்றைய சென்னைச் சட்ட சபையிலே மலையாளிகள், தமிழர்கள், தெலுங்கர்கள், கன்னடர்கள் இருக்கின்றனர். இவர்களிலே ஆங்கிலம் பேசினால் புரிந்துகொள்ள முடியாதவர்கள் உண்டு. தமிழிலே பேசினால் தமிழர் அல்லாத மற்றவர்களுக்குப் புரியாது. கன்னடத்திலே பேசினால் கன்னடியர் அல்லாத ஏனையோருக்குப் புரியாது. தெலுங்

கிலே பேசினல் தெலுங்கரல்லாத பிறருக்கு விளங்காது. ஆகவே இன்றைய சட்ட சபையின் நடவடிக்கைகளிலே எல்லா அங்கத்தினர்களும் எப்படிப் பங்கெடுத்துக்கொள்ள முடியும்? அங்கத்தினர்கள் எல்லோரும் பங்கெடுத்துக் கொள்ள முடியாத அளவுக்கு நடைபெறும் ஒரு சட்ட சபையை மக்களின் பூரண பிரதிநிதித்துவம் பொருந்திய சபை யென்று எப்படிச் சொல்ல முடியும்?

எல்லா மக்களுக்கும் புரியும் மொழியில்தான் சட்ட சபைகளின் நடவடிக்கைகள் இருக்கவேண்டும். இந்த நிலை ஏற்படவேண்டுமானல் மொழிவாரி மாகாணங்கள் பிரிக்கப்பட்டாகவேண்டும்.

சட்டங்கள் எல்லாம் மக்களுக்குப் புரியும் மொழியில் இருக்கவேண்டும். நீதிமன்ற நடவடிக்கைகள் எல்லாம் மக்களுக்கு விளங்கும் மொழியிலேயே நடைபெறவேண்டும்.

அரசாங்க நிர்வாக நடவடிக்கைகள், ஸ்தல ஸ்தாபன நடிவடிக்கைகள் எல்லாம் மக்கள் மொழியிலேயே நடத்தப் படவேண்டும்.

மக்கள் பேசும் மொழியிலேயே மக்களுக்குக் கல்விப் பயிற்சி அளிக்கப்படவேண்டும்.

இந்த மாதிரி மக்களுக்குப் புரியும் மொழியில்தான் எல்லா நடவடிக்கைகளும் இருக்கவேண்டும் என்று ஏற்பாடு செய்தால்தான் நாட்டு மக்கள் எல்லோரும் அரசாங்க நடவடிக்கைகளிலே பங்கு கொள்ள முடியும். இத்தகைய அரசாங்கந்தான் உண்மையான ஜனநாயக அரசாங்கமாக மிளிர முடியும்.

## புதிய தமிழகத்தில்

புதிய தமிழகம் உருவானல் எல்லாச் சட்டங்களும் தமிழில்தான் இருக்கும். சட்ட சபையின் நடவடிக்கை தமிழ், இயற்றப்படும் சட்டங்கள் தமிழ். நீதி மன்றங்களின் நடவடிக்கைகள் தமிழ்; நியாயாதிபதிகளின் தீர்ப்புக்கள் தமிழ்; சட்ட வல்லுநர்களின்

விவாதங்கள் தமிழ். கல்லூரிகள், கலாசாலைகள் எல்லாம் தமிழ் மயம்; இப்படி எல்லாம் தமிழாகவே விளங்கும்; எங்கும் தமிழே ஆட்சி செய்யும். தமிழ் நாட்டிலே தமிழ்த்தாய் தான் அரியணையிலே அமர்ந்து அரசு புரிவாள்.

இதுபோலவேதான் கன்னட நாட்டில் கன்னட மொழியே அரசாங்க மொழி: தெலுங்கு நாட்டில் தெலுங்கே அரசாங்க மொழி; கேரளத்தில் மலையாளமே அரசாங்க மொழி; மகாராஷ்டிரத்தில் மகாராஷ்டிரமே அரசாங்க மொழி. குஜராத்தில் குஜராத்தியே அரசாங்க மொழி. இவ்வாறே ஒவ்வொரு மாகாணத்திலும் அந்தந்த மாகாண மொழியே ஆட்சி செலுத்தும்.

ஒவ்வொரு மொழியினருக்கும் அவரவர்களுடைய மொழியிலேயே கல்விப் பயிற்சி அளிக்கவேண்டும். அது தான் அவர்களை விரைவிலே அரசியல் சமுதாயத் துறைகளிலே முன்னேறும்படி செய்யும். இத்தகைய கல்வியால் தான் அவர்களிடையிலே சுதந்தர ஆர்வத்தை வளர்க்க முடியும். அவர்கள் எடுப்பார் கைப்பிள்ளைகளாக இல்லாமல்—தங்கள் உழைப்பின் பயனைப் பிறர் கொள்ளை கொள்ள விட்டுவிட்டு ஏமாறுவோர்களா யில்லாமல் வாழவும் முடியும்.

இந்தக் காரணங்களரல் தான் சுய நிர்ணய உரிமையுள்ள மொழிவாரி மாகாணங்கள் அமைக்கப்பட வேண்டும் என்ற கிளர்ச்சி வலுத்து வருகிறது.

மொழிவாரி மாகாணம் வேண்டும் என்போர் எவரும் இதை மறுக்கவில்லை. வட்டார மொழியிலே சட்ட திட்டங்கள் வேண்டும்; அரசாங்க நடவடிக்கைகள் நடைபெறவேண்டும்; என்பதை அனைவரும் ஒப்புக்கொள்ளுகின்றனர். ஜனநாயகத்திலே நம்பிக்கையுடையவர்கள்—உண்மையான ஜனநாயக ஆட்சி தோன்றவேண்டும் என்று சொல்லுகிறவர்கள் இதை ஒப்புக்கொள்ளாமல் இருக்க முடியாது.

ஆகவே மொழிவாரி அடிப்படையில் மாகாணம் பிரிக்கவேண்டும் என்பவர்களின் முதல் நோக்கம் ஜன

நாயக ஆட்சிதான்; தேசத்தின் ஆட்சி உண்மையாகவே மக்கள் ஆட்சியாக இருக்கவேண்டும் என்பதுதான்.

"மொழிவாரி மாகாணம் கேட்போர் பிற்போக்காளர்கள். மொழிவாரி மாகாணம் கேட்போரும் காங்கிரசுக்காரர்களும் ஒன்றேதான்." என்று சிலர் நினைக்கின்றனர். இது தவருன கருத்து; காங்கிரசுக்காரர்கள் சொல்லிக்கொண்டு வந்த மொழிவாரி மாகாணம் வேறு. இன்று பொது மக்கள் கேட்கும் மொழிவாரி மாகாணம் வேறு; அடிப்படையிலேயே இரண்டுக்கும் வேற்றுமையுண்டு. இவ்வுண்மையை மொழிவாரி மாகாணக் கிளர்ச்சியைக் கண்டு நக்கல் செய்வோர் நன்ருக உணரவேண்டும்.

## 4. மக்கள் கேட்கும் மாகாணம்

### முப்பதாண்டுக் கிளர்ச்சி

மொழிவாரி மாகாணப் போராட்டம் இன்று நேற்றுத் தோன்றிய கிளர்ச்சியன்று. பல்லாண்டுகளுக்கு முன்பே ஜனநாயகத்தில் நம்பிக்கை கொண்டவர்களின் உள்ளத்திலே உதித்தது; பொது மக்களின் மனதிலே புகுந்திருப்பது. இன்று பொது மக்களின் கிளர்ச்சி வடிவத்தில் உருவாகியிருக்கிறது. பொது மக்கள் உள்ளத்தில் புகுந்து ஊன்றி நிலைத்த கிளர்ச்சி எதுவும் வெற்றி பெருமற் போனதில்லை.

மொழிவாரி மாகாணப் பிரிவினையை இந்திய அரசியல் சட்டம் ஒப்புக்கொள்ளுகிறது. ஆதலால் இதற்குச் சட்டம் குறுக்கே நிற்க முடியாது.

வெள்ளையர் அதிகாரம் இந்தியர் கைக்கு மாறுவதற்குமுன் இந்த நாட்டிலே பெரிய அரசியல் கட்சியாக் விளங்கியது காங்கிரசு. இந்திய சுதந்தரத்திற்காகக் காங்கிரசு நடத்திய போராட்டங்கள் பல. அந்தக் காங்கிரசு மொழிவாரி மாகாணப் பிரிவினையை ஒப்புக்கொண்டுள்ளது, இந்தியா விடுதலை அடைந்தபின் இப்பொழுதுள்ள மாகாண எல்லைகள் திருத்தி யமைக்கப்படும்;

மொழிவாரி அடிப்படையில்—மாகாணங்கள் திருத்தி அமைக்கப்படும்; என்று காங்கிரசு வாக்களித்தது. ஏறக் குறைய முப்பது ஆண்டுகளாக இந்த மொழிவாரி மாகாணப் பேச்சு வேரூன்றி வளர்ந்திருக்கிறது.

காந்தியடிகள் காங்கிரசிலே செல்வாக்குப் பெற்றபின் இந்த மொழிவாரி மாகாணப் பிரிவினை வலுவடைந்தது.

ஆனல் காங்கிரசுக்காரர்கள் ஒப்புக்கொண்ட மொழி வாரி மாகாண அமைப்பு வேறு. இன்று பொது மக்கள் கேட்கும் மொழிவாரி மாகாண அமைப்பு வேறு. இரண்டு கும் அடிப்படையிலே வேற்றுமையுண்டு.

புதிய தமிழகக் கோரிக்கையை அதிகார வெறி கொண்ட காங்கிரசுத் தலைவர்கள் ஒத்துக்கொள்ள முடி யாத அளவுக்கு வேற்றுமையுண்டு.

காந்தியடிகள் காலத்தில்தான் அகில இந்திய காங் கிரசு ஸ்தாபனத்தின் கிளைகள் மொழிவாரி மாகாண அடிப் படையில் திருத்தி அமைக்கப்பட்டன.

சென்னை மாகாணத்தை எடுத்துக் கொள்ளுவோம். தமிழ் நாடு காங்கிரசுக் கமிட்டி; கேரளா காங்கிரசுக் கமிட்டி; கர்நாடக காங்கிரசுக் கமிட்டி; ஆந்திரா காங் கிரசுக் கமிட்டி; என்று நான்கு கமிட்டிகளாக அமைக்கப் பட்டிருந்தன. இவைகள் மொழிவாரி மாகாணத்தை அடிப்படையாகக் கொண்டே அமைக்கப்பட்டவை.

இவைகளைத் தவிர, திருவாங்கூர் சமஸ்தான காங் கிரசுக் கமிட்டி, மைசூர் சமஸ்தானக் காங்கிரசுக் கமிட்டி, ஹைதராபாத் சமஸ்தானக் காங்கிரசுக் கமிட்டி என்பன வும் தனித்தனியாக இருந்தன.

மாகாணங்களில் மொழிவாரியாகத் தனித் தனிக் கமிட்டிகளும், சமஸ்தானங்களில் தனித் தனிக் காங்கிரசுக் கமிட்டிகளும் அமைக்கப்பட்டிருந்தது ஏன்? இதைப் பற்றி நாம் சிந்திக்கவேண்டும்.

மொழிவாரியாக மாகாணங்கள் பிரிக்கப்பட்டாலும் சமஸ்தானங்கள் அப்படியே இருக்கும் என்பதுதான்

இதன் பொருள். காங்கிரசால் ஒப்புக்கொள்ளப்பட்ட மொழிவாரி மாகாணத்தில் இந்திய சமஸ்தானங்களுக்கு எவ்வித ஆபத்துமில்லை.

ஆனல் இன்று பொது மக்கள் கேட்கும் மொழிவாரி மாகாணத்தில் சமஸ்தானங்கள் சாய்ந்தே போய்விடும்; மகா ராஜாக்களின் ராஜப் பிரமுகர் பதவிகளும் மறைந்து போய்விடும். இதனல் இந்த நாட்டின் நிலப் பிரபுத்துவத்தைக் காப்பாற்றிக் கொண்டிருக்கும் பல தூண்கள் சுக்கு நூருக்ச் சிதறிவிடும்.

## சமஸ்தானங்கள் ஒழியும்

இன்று சென்னை மாகாண மக்கள் கேட்கும் மொழிவாரி மாகாணங்களைப்பற்றி மட்டும் ஆராய்வோம். ஆராய்ந்தால்தான் காங்கிரசார் ஒப்புக்கொண்டிருக்கும் மொழிவாரி மாகாணம் எப்படிப்பட்டது? இவை இரண்டிற்கும் உள்ள அடிப்படை வேற்றுமை என்ன? என்பவை நன்ருக விளங்கும்.

தனி ஆந்திர மாகாணம் வேண்டுமென்று ஆந்திர மக்கள் பல்லாண்டுகளாகக் கிளர்ச்சி செய்து வருகின்றனர். ஆந்திர மகாசபை தோன்றிய கால முதல் இக்கிளர்ச்சியுந் தோன்றி வலுத்து வருகின்றது. தனி ஆந்திர மாகாணக் கிளர்ச்சி இன்று விசால ஆந்திரக் கிளர்ச்சியாக உருவாகி விட்டது.

ஆந்திர மொழி பேசும் மக்கள் வாழும் வட்டாரங்கள் அத்தனையையும் ஒன்றுசேர்த்து ஆந்திர மாகாணமாக அமைக்கவேண்டும் என்பதுதான் விசால ஆந்திரக் கிளர்ச்சி.

ஹைதராபாத் நைசாமின் கொடுங்கோல் ஆட்சியிலே லட்சக் கணக்கான ஆந்திரர்கள் பல்லாண்டுகளாக நசுங்குண்டு கிடக்கின்றனர். அந்த மக்கள் தங்கள் ஆந்திரத் தாயகத்துடன் சேரவேண்டுமெனத் துடி துடிக்கின்றனர்.

ஆகவே விசால ஆந்திரக் கிளர்ச்சியிலே ஹைதராபாத்தில் உள்ள ஆந்திர மக்கள் வாழும் வட்டாரத்தைச் சேர்க்கும் கொள்கை அடங்கிக் கிடக்கிறது.

சம் யுக்த கர்நாடக மாகாணம் கேட்கின்றனர் கன்னடியர்கள். சம் யுக்த கர்நாடக மாகாணத்தில்—அல்லது ஐக்கிய கன்னடத்தில் மைசூர் சமஸ்தானம் அப்படியே மறைந்து விடும். ஹைதரா பாத்தில் அகப்பட்டுக் கொண்டிருக்கும் கர்நாடக மொழி பேசும் மக்கள் வாழும் வட்டாரங்களும் சம்யுக்த கர்நாடகத்தில் இணைந்து விடும்.

கேரள மக்கள் கேட்கும் ஐக்கிய கேரளத்தில் திரு—கொச்சி ராஜ்யம் மறைந்து விடும். கேரள மொழி பேசும் மக்கள் வட்டாரம் அத்தனையும் ஒன்று சேர்ந்தால் தான் ஐக்கிய கேரளமாக முடியும்.

புதிய ஐக்கிய தமிழகத்தில், தமிழகத்தின் கிழக்குக் கடற்கரையிலே சுமார் முந்நூறு ஆண்டுகளாக உட்கார்ந்திருக்கும் பிரஞ்சு ஏகாதிபத்திய நிலப் பகுதிகள் தாயத் தமிழகத்துடன் சேர்ந்து விடும்.

புதுவை, காரைக்கால் வட்டாரத்தில் வாழும் தமிழர்கள் தாயகத்துடன் சேரத் துடித்துக் கொண்டிருக்கின்றனர். இது போலவே திருவாங்கூர் ராஜ்யத்தின் கீழ் பன்னெடுங் காலமாக வாழ்ந்து வரும் பத்து லெட்சத்திற்கு மேற்பட்ட தமிழர்களும் தாய்த் தமிழகத்துடன் ஒன்று சேருவார்கள்; ஒன்று சேர வேண்டும் என்று அவர்கள் செய்து வரும் கிளர்ச்சி வெற்றி பெறும். சித்தூர் மாவட்டத்தில் உள்ள திருத்தணி, புத்தூர், சித்தூர், கங்குந்தி குப்பம் ஆகிய தாலுக்காக்களில் உள்ள மக்களும் தமிழகத்தோடு சேர முடிவு செய்வார்களானல் அதை யாரும் தடுக்க முடியாது.

விசால ஆந்திரம் அமைந்தால்—சம்யுக்த கன்னடம் அமைந்தால் ஹைதராபாத் ராஜ்யம் மறைந்து விடும். மைசூர் ராஜ்யமும் மறைந்து விடும். ஐக்யகேரளம் அமைந்தால்—ஐக்கிய தமிழகம் உருவானல் திரு—கொச்சி ராஜயம் மறைந்து விடும். தமிழகத்தில் பிரஞ்சு ஏகாதிபத்தியமும் ஒழிந்து போய்விடும்.

இந்த நாட்டின் உழவர்களை நசுக்கிப் பிழிந்து அவர்களை நடைப் பிணமாக வைத்திருப்பது நிலப் பிரபுத்துவ

அமைப்பு. நிலப்பிரபுத்துவ அமைப்பு இந்த நாட்டில் நிலைத்திருக்கும் வரையிலும் விவசாயமும் வளராது; தொழிலும் வளர்ச்சியடையாது. நிலப்பிரபுத்துவ அமைப்பின் அடிப்படையாக விளங்குகிறவர்கள் ராஜப்பிரமுகர்கள்; அவர்களை அண்டிப் பிழைக்கும் கையாட்கள். இன்றைய ஆட்சியும் நிலப்பிரபுக்களின் செல்வாக்குப் பெற்ற ஆட்சிதான்.

இத்தகைய நிலப்பிரபுத்துவத்தின் அடிப்படையைத் தகர்க்க வேண்டுமானால் சமஸ்தானங்கள் மறைந்தொழிய வேண்டும். ராஜப் பிரமுகர்கள் பொது மக்களோடு கலந்துவிட வேண்டும். இதற்கு வழி மொழிவாரி மாகாணங்கள் அமைக்கப்படுவது தான்.

## ஒத்துழைப்பே வேண்டும்.

ஒவ்வொரு மொழி பேசும் மக்களும் தாங்கள் வாழும் பகுதிகளைத் தாங்களே ஆளக்கூடிய சுய நிர்ணய உரிமையுடன் கூடிய தனித்தனி மாகாணங்களாக அமைத்துக் கொள்ள வேண்டும். இவர்கள் ஒன்று பட்டுத் தங்கள் விருப்பப்படி நடக்கக் கூடிய ஒரு மத்திய அரசாங்கத்தையும் அமைத்துக் கொள்ள வேண்டும்.

இந்தியா முழுவதிலும் உள்ள ஒவ்வொரு மொழியினரும் இத்தகைய தனி மாகாணம் வேண்டுமென்றே விரும்புகின்றனர். ஆகவே இந்த மொழிவாரி மாகாணக் கிளர்ச்சி ஒரு அகில இந்தியக் கிளர்ச்சியாக உருவாகிக் கொண்டு வருகிறது. இந்த அகில இந்தியக் கிளர்ச்சியின் ஒரு பகுதிதான் புதிய தமிழகக் கிளர்ச்சியுமாகும்.

மொழிவாரி மாகாணம் கேட்கும் ஒவ்வொரு இன மக்களும் தங்களுக்குள் ஒத்துழைக்க வேண்டும். வங்கத்து மக்கள் மொழிவாரி மாகாணம் கேட்கின்றனர். ஆந்திர மக்கள் மொழிவாரி மாகாணம் கேட்கின்றனர். ஒரியர், மராட்டியர், குஜராத்தியர், கன்னடர், தமிழர், கேரளர் அனைவரும் மொழிவாரி மாகாணம் கேட்கின்றனர். இவர்கள் எல்லோரும் இணைந்து நின்று போராட வேண்டும். இந்த இயக்கம் ஒரு அகில இந்திய இயக்கமாகிப் பொது

மக்களை ஒன்று திரட்டினால் தான் வெற்றிக் கொடியை நாட்ட முடியும்.

"எந்த அகில இந்திய இயக்கத்துடனும் கலக்க மாட்டோம். நாங்கள் தனித்து நின்றே மொழிவாரி மாகாணத்துக்குப் போராடுவோம். நாட்டைத் துண்டு போடப் போராடுவோம். அகில இந்திய மக்களின் தயவும் எங்களுக்கு வேண்டாம். ஆதரவும் எங்களுக்கு வேண்டாம். நாங்கள் பரம்பரை வீராதி வீரர்கள். எங்கள் கோரிக்கை தான் எங்களுக்குப் பெரிது; மற்ற மக்களின் கோரிக்கைகளைப் பற்றி நாங்கள் ஏன் கவலைப்பட வேண்டும்?"

என்று யாரேனும் சொல்லுவார்களானால் அவர்கள் வெறும் ஆர்ப்பாட்டக்காரர்கள் தான். அவர்கள் பொது மக்களின் இன்பதுன்பங்களைப் பற்றிக் கவலைப் படாதவர்கள். அவர்களால் செயலாற்றவே முடியாது. மொழிவாரி மாகாணப் பிரிவினைக் கிளர்ச்சிக்குக் கொஞ்சம் முட்டுக் கட்டை போடத்தான் அவர்களால் முடியும். மொழிவாரி மாகாணத்திற்கு முட்டுக்கட்டை போட வேண்டும் என்ற எண்ணம் அவர்களிடம் இல்லாமல் இருக்கலாம். ஆனால் அவர்களைப் போலவே உரிமை வேட்கையுடைய மற்ற மக்களுடன் கூட்டுறவு கொள்ள மறுப்பது, அவர்களை அறியாமலே அவர்கள் முயற்சிக்குத் தடையாகத் தான் நிற்கும். இந்த உண்மையை மாகாணப் பிரிவினை வேண்டுவோர் உணர்ந்தாக வேண்டும்.

இந்த மொழிவாரி மாகாணப் போராட்டத்திலே அந்நிய மூலதன ஒழிப்பும் அடங்கியிருக்கிறது. அந்நிய நாட்டினர் நமது நாட்டிலே பல பெரிய தொழில்களை நடத்துகின்றனர். இதன் மூலம் நமது நாட்டில் தொழில் வளர்ச்சி குன்றுகிறது, நமது நாட்டுச் செல்வம் அந்நிய நாடுகளுக்குக் கொள்ளை போகிறது. இதன் மூலம் அந்நியர் ஆதிக்கமும் இங்கு நிலை கொள்ளுகிறது. இதைப்பற்றிப் பின்னால் விரிவாகக் கூறுவோம்.

ஆக்வே "ஐக்கிய தமிழகக் கிளர்ச்சி" வெறும் மொழிவாரி மாகாணக் கிளர்ச்சி யல்ல. பிரிந்து கிடக்கும் தமிழர்களை ஒன்று சேர்ப்பது; நிலப்பிரபுத்து

வத்தின் ஆணி வேரைக் கல்லி யெறிவது; அந்நியர் சுரண்டலையும், ஆதிக்கத்தையும் ஒழிப்பது; இந்த மூன்றும் அடங்கியதே புதிய தமிழகக் கிளர்ச்சி.

விசால ஆந்திரம்; சம்யுக்த கன்னடம்; ஐக்கிய கேரளம் ஆகிய இயக்கங்களிலும் இந்த மூன்று கொள்கைகளும் அடங்கிக் கிடக்கின்றன.

மகாராஷ்டிரம், கூர்ஜரம், பஞ்சாப், வங்கம், அசாம், பீகார், ஒரியா போன்ற தனித்தனி மாகாணங்கள் அமைக்க வேண்டும் என்பதும் இந்தத் தத்துவத்தை அடிப்படையாகக் கொண்டது தான்.

இதே காரணத்தால் தான் சென்ற முப்பதாண்டுகளாக மொழிவாரி மாகாண அமைப்பை ஒப்புக்கொண்டிருந்த வர்கள் இன்று ஏதேதோ கூறித் தட்டிக் கழிக்கின்றனர். காங்கிரசுத் தலைவர்கள் இன்று மொழிவாரி மாகாணப் பிரிவினையின் பால் அணுகுவதற்கு அஞ்சுகின்றனர். இதற்குக் காரணம் காங்கிரசு கருதிய மொழிவாரி மாகாணத்துக்கும், இன்று பொது மக்கள் கோரும் மொழிவாரி மாகாணத்திற்கும் உள்ள அடிப்படை வேற்றுமை தான்.

இந்த அடிப்படை வேற்றுமையை அறியாதவர்கள் தான்—அல்லது அறிந்தும் மறைப்பவர்கள் தான்—காங்கிரசின் திட்டமான மொழிவாரி மாகாணமும் பொது மக்கள் கோரும் மொழிவாரி மாகாணமும் ஒன்றெனக் கூறுவர். மொழிவாரி மாகாணக் கிளர்ச்சிக்கு முட்டுக்கட்டை போட முனைவர்.

# 5. நிலப்பிரபுத்துவ ஒழிப்பு

## உழவன் உரிமை.

மொழிவாரி மாகாணங்கள் பிரிந்தால்தான் விவசாயம் வளரும்; உணவுப் பொருள் உற்பத்தி பெருகும்; பட்டினிப் பேய் பறந்தோடும். மக்களிடையிலே வாங்கும் சக்தி வளரும். உள் நாட்டுக் கைத்தொழில்கள் ஓங்கும்.

மொழிவாரி மாகாணப் பிரிவினைக் கிளர்ச்சியுடன் நிலப்பிரபுத்துவ ஒழிப்புக் கிளர்ச்சியும் இணைந்துள்ளது என்பதை முன்பே குறிப்பிட்டுள்ளோம்.

நிலம் உழவர்களுக்கு உரிமையாக இருக்கவேண்டும். அல்லது நிலத்திலே வேலை செய்யும் விவசாயிக்கு அந்த நிலத்திலே இணைப்பிருக்கவேண்டும். நிலத்திலே இறங்கி வேலை செய்யாத ஒருவன் நிலம் எனக்குத்தான் உரியது என்று சொல்லிக்கொள்ளுகிறான். தலைமுறை தலைமுறையாக—அல்லது பல்லாண்டுகளாக அந்த நிலத்திலே பாடுபடுகின்றவனை நிலத்தைவிட்டு வெளியேற்றுகிறான். இது இன்றையநிலை. இது அநியாயம்; அக்கிரமம். இது ஒழிய வேண்டும்.

நீதி முறைப்படி பார்த்தால் நிலத்தோடு தொடர்பில்லாமலிருக்கும் "நிலச் சொந்தக்காரன்" தான் வெளியேற்றப்படவேண்டியவன். எந்தக் கைமாறும் கொடுக்கப்படாமல் வெளி யேற்றப்படவேண்டியவன் அவனே தான்.

எந்த நிலப் பிரபுவும் பாடுபட்டு உழைத்துப் பணம் சேர்த்து நிலம் வாங்கியவன் அல்லன். சும்மாகிடந்த நிலத்தைத் தன்னுடைய தடியடி தர்பாரின் மூலம் வளைத்துக் கட்டிக்கொண்டவன்தான் நிலப்பிரபு. அல்லது ஏழைக் குடியானவர்களின் உழைப்பைச் சுரண்டி, அந்தச் சுரண்டற் பொருளைச் சிறிய நிலக்காரர்களுக்குக் கடன் கொடுத்து வட்டியைப் பெருக்கி அந்தக் கடனுக்கு ஈடாக அவர்கள் நிலங்களைப் பறித்துக் கொண்டவன்தான் நிலப்பிரபு. அல்லது இந்த நாட்டை—இந்த நாட்டு மக்களை

வெள்ளையர்கள் சுரண்டுவதற்கு ஆதரவாயிருந்து, அவர்களின் கைக் கூலியாகி, அவர்கள் தயவினால் புறம் போக்கு நிலங்களை யெல்லாம் தனதாக்கிக்கொண்டவன் தான் நிலப்பிரபு.

கையும் களவுமாகப் பிடிபட்டுவிட்டான் கள்வன். அவனிடமிருந்து திருடப்பட்ட பொருள் பறிக்கப்படுகிறது. அச்சமயத்தில் "என்னிடமிருந்து பறிக்கப்படும் பண்டங்களுக்காக எனக்கு விலை கொடுத்தாக வேண்டும்" என்று அந்தத் திருடன் வீணே வாதாடுகின்றான். இந்த வாதத்தை எவராவது ஏற்றுக்கொள்ள முடியுமா? அத் திருடனுக்காகப் பரிவு கொண்டு "அவனுக்கு நஷ்ட ஈடு கொடுக்கத்தான் வேண்டும்." என்று யாராவது வழக்காட முன் வருவார்களா?

> திருடனிடமிருந்து பறிக்கப்படும் பொருளுக்கு ஈடு கொடுக்கவேண்டுமென்று எவரேனும் கூறினால் அதைப்போன்ற விதண்டாவாதம்—திமிர்வாதம் ஒன்றும் இருக்கவே முடியாது. இதற்கும் நிலப் பிரபுக்களுக்கு நஷ்ட ஈடு தரவேண்டும் என்பதற்கும் எவ்வித வேற்றுமையும் இல்லை. நிலப் பிரபுக்களுக்காகப் பரிந்து பேசுவோர் இதைப்பற்றி நிதானமாகச் சிந்திக்கவேணடும். நடு நிலைமையிலிருந்து சிந்தித்தால் உண்மை விளங்காமற் போகாது.

உழுது பயிர்செய்து பண்டத்தை உற்பத்தி செய்கின்றவனுக்கு நிலத்திலே நிலையான உரிமை இருக்க வேண்டும். உற்பத்தி செய்யும் பண்டத்திலே அவனுக்குச் சரியான பங்கிருக்கவேண்டும். அவனுடைய குடும்ப வாழ்க்கையை நடத்துவதற்குப் போதுமான பங்கிருந்தால் தான் அவன் உற்சாகத்துடன் உற்பத்தியைப் பெருக்குவான். இந்த முறை இன்று நமது நாட்டில் இல்லை.

> "பாடுபட்டுப் பண்டத்தை உற்பத்தி செய்வது நமது கடமை. அந்தப் பலனை அனுபவிக்க முடியாமல் அவதிப்படுவது நமது தலைவிதி. பாடுபடாதவன் அந்தப் பண்டங்களை அள்ளிக்கொண்டுபோய் அனுப

விப்பது அவன் செய்த புண்ணியம்" என்று எண்ணி யிருந்தகாலம் மலையேறிவிட்டது.

உழுது பாடுபடுகின்ற விவசாயிகளிலே சிலர் மிகக் குறைந்த நிலத்தை யுடையவர்கள்; பலருக்கு நிலமே சொந்த மில்லை; பலருக்கு உழுகின்ற நிலத்தில் எத்தகைய உரிமையும் இல்லை. அவர்கள் வெறும் கூலிக்காரர்கள். "கூலிப்படை ஏறி வெட்டாது" என்பது நமது நாட்டுப் பழமொழி. "கூத்தாடிக்குக் கிழக்கே கண்; கூலிக்கார னுக்கு மேற்கே கண்" என்பதும் ஒருபழ மொழி, கூலிக் காரனுக்கு உற்பத்தியிலே உற்சாகம் இருக்காது என்ப தற்கு இப்பழமொழிகளே போதும்.

## புள்ளி விவரம்

சென்னை மாகாணத்தை எடுத்துக்கொண்டு மொத்த மாகப் பார்த்தால் 94 சத விகித விவசாயிகளுக்கு 54 சத விகித நிலந்தான் சொந்தமாக உள்ளது. ஆனல் 6 சத விகிதம் உள்ள பட்டாதாரர்களுக்கு—அதாவது மிராசு தாரர்களுக்கு 46 சத விகித நிலம் சொந்தம்.

தமிழ் நாட்டில் மாத்திரம் எடுத்துக்கொண்டால் 95 சத விகித விவசாயிகளுக்கு 56 சத விகித நிலம் சொந்தம். மீதம் 44 சத விகித நிலம் 5 சத விகித மிராசுதார்களுக்குச் சொந்தம்.

நமது நாட்டிலே 84 சத விகித மக்கள் கிராமப் புறங் களில் வசிக்கின்றனர். 95 சத விகித விவசாயிகள் அத் தனை பேருக்கும் நிலம் இருக்கிறது என்று வைத்துக் கணக்குப் பார்த்தால் கூட ஆளுக்கு இரண்டு ஏக்கர் நிலந் தான் வரும். இந்த இரண்டு ஏக்கர் நிலத்திலே கிடைக்கும் வருமானத்தைக் கொண்டு ஒரு குடும்பம் எப்படி வாழமுடி யும்?

தமிழ் நாட்டிலே நெற்களஞ்சியம் என்று சொல்லப் படும் தஞ்சை ஜில்லாவைமட்டும் எடுத்துக்கொண்டால் போதும். அந்த ஜில்லாவின் பெரும்பாலான நிலங்கள் ஒரு சிலருக்கே சொந்தம்.

தர்மபுரம் மடத்திற்கு மட்டும் 70 ஆயிரம் ஏக்கர் சொந்தம். திருப்பனந்தாள் மடத்திற்கு 30 ஆயிரம் ஏக்கர்; வடபாதி மங்கலம் முதலியாருக்கு 12 ஆயிரம் ஏக்கர்; பூண்டிவாண்டையார் குடும்பத்திற்கு 6 ஆயிரத்திற்கு மேற்பட்ட ஏக்கர்; கபிஸ்தலம் மூப்பனர் குடும்பத்திற்கு 5 ஆயிரம் ஏக்கருக்குமேல் சொந்தம். இன்னும் சீர்காழி முதலியார், குன்னியூர் அய்யர், திருவாவடுதுறை ஆதீனம் நெடும்பலம் முதலியார், கோட்டூர் முதலியார், உக்கடை தேவர்போன்ற ஆயிரக் கணக்கான ஏக்கர் நிலங்களுக்குச் சொந்தக்காரர்கள் இருக்கின்றனர்.

தஞ்சை ஜில்லாவிலே எண்ணற்ற விவசாயிகளுக்குச் சொந்த நிலமில்லை. அங்கே நிலத்தில் வரும் லாபத்தை விவசாயிகளுக்கும் நிலப்பிரபுக்களுக்கும் இடையிலே உள்ள பலர் கொள்ளையடிக்கின்றனர்.

இதே நிலைமை தஞ்சை ஜில்லாவில் மட்டும் இல்லை; தமிழ் நாடெங்கும் இருக்கின்றது. தமிழ் நாட்டில் மாத்திரம் இல்லை; எல்லா மாகாணங்களிலும் இருக்கின்றது. இந்தியா முழுவதிலும் இந்த நிலைமைதான். இந்தக் கொள்ளை முறை மாற்றப்படவேண்டாமா?

மக்கள் ஆட்சி ஏற்பட்ட எந்த நாட்டிலும் நிலச் சீர்திருந்தான் முதன் முதலிற் செய்யப்பட்டது. ரஷியாவிலே நிலப் பிரபுத்துவ முறை ஒழிக்கப்பட்டு, விவசாயிகளுக்கு உரிமை வழங்கும் முறையில் நிலச் சீர்திருத்தம் செய்யப்பட்ட பிறகுதான் உணவுப் பஞ்சம் ஒழிந்தது. புதிய சீனத்திலே முதன் முதல் நிலப் பிரபுத்துவத்தை ஒழித்து நிலச் சீர்திருத்தம் செய்த பிறகுதான் அந்நாட்டு உணவுப் பஞ்சமும் ஒழிந்தது.

ஈரானிலே நிலச் சீர்திருத்தம்! எகிப்தில் நிலச் சீர்திருத்தம்! பர்மாவிலே நிலச் சீர்திருத்தம்! நேப்பாளத்திலே நிலச் சீர்திருத்தம்! நிலப் பிரபுத்துவ நெடும் பூதத்தை வெட்டி வீழ்த்துவதே இவைகளின் நோக்கம்.

இந்திய யூனியனுக்குள் இணைந்திருக்கும் காஷ்மீரத்திலே நிலப் பிரபுத்துவம் ஒழிக்கப்பட்டு விட்டது. அங்

குள்ள விவசாயிகள் இன்று சுதந்தர புருஷர்களாய் விளங்குகின்றனர்.

இந்திய யூனியனுக்குள் அமைக்கப்படும் ஒவ்வொரு மொழிவாரி மாகாணத்திலும் நிலப் பிரபுத்துவம் ஒழிக்கப் படவேண்டும்; நிலச் சீர்திருத்த முறை நடை முதலுக்குக் கொண்டுவரப்பட வேண்டும்; இது மொழிவாரி மாகாணம் கேட்கும் பொது மக்கள் கொள்கை.

## வாங்கும் சக்தி வளர வேண்டுமானுல்?

நாட்டிலே 84 சத விகிதமுள்ள விவசாயிகள் மகிழ்ச்சியுடன் வாழவேண்டும். வறுமையின்றி வாழவேண்டும். பணப் புழக்கமுடையவர்களாய் வாழவேண்டும்.

விவசாயிகள் வாங்கும் சக்தி படைத்தவர்களாய் இருந்தால்தான் நெசவாலைகளிலே உற்பத்தியாகும் துணிகள் விலை போகும். நெசவுத் தொழிலாளர்களின் வேலைக்கு நிலையான உத்தரவாதமளிக்க முடியும்.

விவசாயிகள் படித்தவர்களாகவும், பணமுள்ளவர்களாகவும் இருந்தால்தான் பத்திரிகைகள், புத்தகங்கள் ஏராளமாக விற்பனையாகும்; அச்சுக்கலை வளர்ச்சியடையும்.

பெரும்பான்மை மக்களான விவசாயிகள் கையிலே பணவோட்டம் இருந்தால்தான் நாடகம், சினிமா, பாட்டு, நடனம் போன்ற கலைகள் வளர்ச்சியடையும், பெரும்பான்மை மக்களால் கலைகள் ஆதரிக்கப்படாவிட்டால் கலைஞர்கள் வாழ்வு சிறக்காது.

விவசாயிகள் வாங்கும் சக்தி படைத்தவர்களாயிருந்தால்தான் செம்பு, பித்தளை, வெள்ளி, அல்மோனியம் போன்ற பாத்திரத் தொழில்கள் வளர்ச்சி யடையும். தோலால் செய்யப்படும் பண்டங்கள், மரத்தால் செய்யப்படும் பண்டங்கள், தயாரிக்கப்பட்ட ஆடைகள், தின்பண்டங்கள், சிறு யந்திரங்கள் எல்லாம் விற்பனையாக வேண்டுமானுல் மக்களிடம் வாங்கும் சக்தியிருக்க வேண்டாமா?

தச்சு வேலை, கொத்து வேலை போன்ற தொழில்களைச் செய்வோர்க்கும், கல்லறுத்து, ஓடறுத்து அவைகளைச் சூளையிலே வேக வைக்கும் வேலை செய்வோர்க்கும் நிரந்தரமான வேலை கிடைக்க வேண்டுமாயின் கிராமாந்தர விவசாயிகள் கையிலே பணம் நடமாடவேண்டும். அப்பொழுதுதான் அவர்களால் புது வீடுகள் கட்டவோ இடிந்த வீடுகளைச் செப்பனிடவோ முடியும்.

> ஆகவே உழவர்களின் வாழ்க்கைத்தரம் உயராத வரையில் இந்த நாட்டில் எந்தக் கைத்தொழிலும் ஏற்றமடையாது; எந்த வியாபாரமும் வளர்ச்சியடையாது; பாட்டாளிகளின் வாழ்க்கையும் உயராது. வாங்குவோர் இருந்தால்தானே பண்டங்கள் உற்பத்திக்குப் பலன் உண்டு. உற்பத்தி செய்யப்படும் பண்டங்கள் விற்பனையாகாமல்—அல்லது மக்களுக்குப் பங்கிட்டுக் கொடுக்கப்படாமல் அப்படியே குவிந்து கிடக்குமானல் மேலும் மேலும் பண்டங்களை உற்பத்தி செய்வதால் என்ன பயன்?

மடங்கள், கோயில்க்ள், பெருநிலச் சுவான்தார்கள் ஆகியோரின் நிலங்களை நஷ்டயீடு தராமல் பறிமுதல் செய்தாக வேண்டும். அவைகளை பற்றுக்குறை நிலமுடைய விவசாயிகளுக்கும், நிலமற்ற விவசாயிகளுக்கும் பங்கிட்டுக் கொடுக்கவேண்டும். இத்திட்டம் மொழிவாரி மாகாணக் கோரிக்கையுடன் பின்னிப் பிணைந்து கிடக்கின்றது.

## வெறிகள் தணியும்

மொழிவாரி மாகாணம் பிரிக்கப்படாமலே நிலப் பிரபுத்துவ முறையை ஒழித்துவிட முடியாதா? இதற்காக ஏன் மொழிவாரி மாகாணங்களாக இந்தியாவைத் துண்டாட வேண்டும்? என்று கேட்கலாம். இது ஒரு கேள்விதான், பல மொழிகள் அடங்கிய இந்திய யூனியனில்—மொழிவாரி மாகாணம் இல்லாவிட்டால் எல்லா மக்களும் அரசியலில் பங்கு கொள்ள முடியாது. ஜனநாயக முறையில் நாட்டின் அரசியலை நடத்த முடியாது.

சட்டசபை நடவடிக்கைகளை எந்த மொழியிலே நடத்துவது? நீதி மன்றங்கள் போன்ற அரசாங்க நடவடிக்கைகளை யெல்லாம் எந்த மொழியிலே எழுதி வைப்பது? இவ்வித வழக்குகள்—சண்டைகள்—விவாதங்கள் தொடர்ந்து நடந்துகொண்டுதான் இருக்கும்.

இன்றுள்ள மொழிச் சண்டை—வகுப்பு வெறுப்பு—முடிவுக்கு வராமல் வளர்ந்துகொண்டே போகும். இந்த மொழிச் சண்டைக்கும், வகுப்பு வெறுப்புக்கும், வகுப்புச் சண்டைக்கும் முற்றுப் புள்ளி வைக்க வேண்டுமானல் மொழிவாரி மாகாணம் பிரிந்தேயாக வேண்டும்.

வகுப்புச் சண்டையும், மொழிச் சண்டையும் நீடித்திருக்க வேண்டும் என்று விரும்புகிறவர்கள்தான் நிலப் பிரபுத்துவ ஒழிப்புக்கும் மொழிவாரி மாகாணப் பிரிவுக்கும் என்ன சம்பந்தம் என்ற கேள்வியைக் கிளப்புவார்கள்.

இந்தக் கேள்வியும் நிலப் பிரபுத்துவத்தைக் காப்பாற்றும் எண்ணங் கொண்டவர்களால் கிளப்பி விடப்படும் கேள்வியே என்பதை மறந்துவிட வேண்டாம். ஏன்? மக்களுக்குள் ஒற்றுமை யின்மையும், மொழிச் சண்டை, வகுப்புச் சண்டை போன்ற வெறிகளும் தாண்டவமாடுகின்ற வரையிலுந்தான் நிலப் பிரபுத்துவம் வாழ முடியும். இவ்வுண்மை அவர்களுக்குத் தெரியும், ஆகையால் நிலப் பிரபுக்களால் தந்திரமாகக் கிளப்பிவிடப்படும் கேள்விகளைக் கண்டு ஏமாந்து விடவேண்டாம்!

## 6. அன்னியர் சுரண்டல்

### கொள்ளை! கொள்ளை!

இந்தியா சுதந்தர நாடு என்று சொல்லுகின்றனர் வெள்ளையர் வெளியேறி விட்டனர் என்று முழங்குகின்றனர் இவை மக்களை ஏமாற்றும் மாய்மால வார்த்தைகள்.

" நமது நாட்டுச் செல்வத்தை அந்நியர்கள் அள்ளிக் கொண்டு போகின்றனர். இதனாலேயே இந் நாட்டில் தொழில் துறை முன்னேறவில்லை. மக்கள் வாழ்க்கைத் தரம் உயரவில்லை. ஏழ்மையும், ஏகாதிபத்தியப் பிடிப்பும் ஏழை மக்களை இன்னற் கடலிலும், ஏக்கக் குழியிலும் தள்ளித் தத்தளிக்கச் செய்கின்றன. ஆகையால் அந்நியர் ஆட்சி அழியவேண்டும். மக்கள் ஆட்சி மலரவேண்டும்" இவ்வாறு சுயராஜ்யப் போராட்ட காலத்தில் அனைவரும் சொல்லிக்கொண்டு வந்தார்கள்.

ஆனால் "விடுதலை பெற்றுவிட்டோம்; வெள்ளையர்கள் போய்விட்டார்கள்" என்று சொல்லும் இக்காலத்தில் நமது நாட்டில் என்ன நடக்கின்றது?

இந்தியாவிலே வெள்ளையர்களின் மூலதனம் சுமார் 500 கோடி ரூபாய் இன்னும் இருக்கின்றது, அவர்கள் பல தொழில்களை நடத்திக் கொண்டிருக்கின்றனர்.

சுரங்கத் தொழில்கள்; எண்ணெய்க் கிணறுகள்; எண்ணெய்ச் சுத்திகரிப்புத் தொழிற்சாலைகள், சணல் ஆலைகள், இஞ்சினீரிங் தொழிற்சாலைகள், நூல் ஆலைகள், நெசவாலைகள், பாங்குகள், இன்ஷ்யூரன்ஸ் கம்பெனிகள், ஏற்றுமதி இறக்குமதி வியாபாரங்கள் எல்லாம் இன்னும் வெள்ளையர்களின் ஆதிக்கத்திலேயே கிடக்கின்றன.

வெள்ளையர்கள் இந்தியாவில் நடத்திவரும் தொழில்களின் மூலம்—வியாபாரங்களின் மூலம்—அவர்கள் இந் நாட்டில் வைத்திருக்கும் மூலதனங்களின் மூலம் ஒவ்வோராண்டும் கோடிக்கணக்கான ரூபாய்களைச் சுரண்டிக் கொண்டிருக்கின்றனர்.

இது போதாதென்று அமெரிக்காவிலிருந்து கம்பெனிகளும், தொழிற்சாலைகளும் மூலதனங்களும் இன்னும் இறக்குமதியாகிக் கொண்டிருக்கின்றன.

ஒவ்வோராண்டும், நமது நாட்டிலிருந்து, சுமார் 100 கோடி ரூபாய் வெளிநாடுகளுக்குப் போய்க்கொண்டிருக்கின்றது. இந்த நிலையிலே இந்நாட்டில் தொழில்கள் வளர்ச்சியடைவது எப்படி?

தமிழ் நாட்டை மட்டும் எடுத்துக் கொள்வோம், பக்கிங்காம் கர்னாட்டிக் மில், ஹார்வி மில், பாரி கம்பெனி, போன்றவைகள் தமிழ் மக்களின் உழைப்பையும், தமிழ் நாட்டின் செல்வத்தையும் கொள்ளையடித்துக் கொண்டிருக்கின்றன.

எஸ். ஓ. சி. என்ற அமெரிக்க எண்ணெய்க் கம்பெனி, பி. ஓ. சி. என்ற பிரிட்டிஷ் எண்ணெய்க் கம்பெனி, ஜார்ஜ் ஒக்ஸ் என்ற மோட்டார் கம்பெனி, பல வியாபாரங்களைச் செய்யும் அடிசன் கம்பெனி, குரோம் லெதர் கம்பெனி, கிராம்டன் கம்பெனி போன்ற இன்னும் பல கம்பெனிகள் தமிழ் நாட்டின் செல்வத்தைச் சுரண்டிக் கொண்டிருக்கின்றன.

சென்னையில் உள்ள பக்கிங்காம் கர்நாட்டிக் மில் மட்டும் 1951 ஆம் ஆண்டில்சுமார் 41 லட்சத்து 52 ரூபாய் லாபம் அடித்திருக்கிறது.

மதுரை ஹார்வி மில்காரர்கள் செந்தமிழ்ப் பாண்டி நாட்டின் செல்வத்தைப் பல வழிகளில் வாரிக் குவிக்கின்றனர். பஞ்சு வியாபாரம், நூல் வியாபாரம், காகித உற்பத்தி, பாங்க், இன்ஷியூரன்ஸ் கம்பெனி, சிமென்ட் கம்பெனி ஆகிய பல துறைகளிலும் அவர்கள் புகுந்து சுரண்டிக் கொண்டிருக்கின்றனர்.

பாங் ஆப் இந்தியா, இம்பீரியல் பாங்க், நாஷனல் பாங்க், மர்க்கென்டைல் பாங்க், லாயிட்ஸ் பாங்க் போன்ற பல பாங்குகளில் வெள்ளையர் ஆதிக்கமே வேரோடியிருக்கிறது.

## இதுவா சுதந்திரம் ?

சென்னை மாகாணத்தில் உள்ள காபித் தோட்டங்கள், தேயிலைத் தோட்டங்கள் பெரும்பாலும் வெள்ளைக்காரர்களுக்குச் சொந்தமானவை. 10 ஆயிரம் ஏக்கர் நிலங்களுக்கு மேற்பட்ட தோட்டங்கள் வெள்ளையர்களுக்கு ஏகபோக உரிமை யுள்ளவை.

தேயிலை, காப்பித் தோட்டங்களில் ஏக்கர் ஒன்றுக்கு 800 ரூபாய் முதல் 1500 ரூபாய் வரை வருமானம் கிடைக்கின்றது. ஆனால் ஏக்கர் ஒன்றுக்கு 8 அணு முதல் 2-8-0 ரூபாய் வரையில் தான் வரி வாங்கப்படுகின்றது.

தமிழ் நாட்டு விவசாயிக்கு ஒரு ஏக்கரில் ரூபாய் 100, 200 தான் வருமானம். இதற்கு ஏக்கர் ஒன்றுக்கு 5 ரூபா முதல் 25 ரூபாய் வரையில் வரி.

1500 ரூபாய் லாபந் தரும் வெள்ளைக்கார முதலாளி நிலத்திற்கு $2\frac{1}{2}$ ரூபாய் வரி. 200 ரூபாய் லாபந் தரும் தமிழ் நிலச்சுவான் தாருக்கு 25 ரூபாய் வரி. இந்த அநியாயத்தை எங்கே போய் எடுத்துச் சொல்லுவது?

வெள்ளைக்காரர்கள் இந்த நாட்டிலே நடத்தி வரும் தொழில்களை யெல்லாம் தமிழ் நாட்டுக்குச் சொந்தமாக்கித் தீர வேண்டும். வெள்ளைக்காரர்களுக்குச் சொந்தமான தோட்டங்களை யெல்லாம் அத்தோட்டங்களில் வேலை செய்யும் தோட்டக்காரர்களுக்குச் சொந்தமாக்க வேண்டும்.

> இந்தியாவிலே மூலதனம் போட்டுத் தொழில் நடத்தும் வெள்ளைக்காரர்கள் அவர்கள் போட்ட மூலதனத்திற்கு மேல் எத்தனையோ மடங்கு சம்பாதித்து விட்டார்கள். தோட்ட முதலாளிகளும் அவர்கள் போட்ட மூலதனத்திற்கு மேல் எத்தனையோ பங்கு சம்பாதித்து விட்டார்கள் ஆகையால், அவர்களுக்குநஷ்ட ஈடு தரவேண்டிய அவசியமே யில்லை. தமிழ் நாட்டில் உள்ள வெள்ளையர் தொழிற்சாலைகளும், தோட்டங்களும் நஷ்டஈடு கொடுக்கப்படாமல் புதிய ஐக்கிய தமிழகத்திற்குச் சொந்தமாக்கப்பட வேண்டும்,

## தமிழ் நாட்டின் செல்வம்

தமிழ் நாட்டிலே ஏராளமான இயற்கைச் செல்வம் உண்டு. தமிழ்த் தாய் தன் மடியிலே நமக்குத் தேவையான செல்வங்கள் அவ்வளவையும் வைத்துக் கொண்

டிருக்கிருள். அவற்றை எடுத்து அனுபவிக்கும் அறிவும் திறமையும் நமக்கு இல்லே.

தென்னுற்காடு மாவட்ட நெய்வேலிப் பகுதியிலே நிலக்கரியிருக்கிறது. அது பழுப்பு நிலக்கரி. உலகத்திலே உயர்ந்த நிலக்கரி. ஜெர்மனியின் ரூர்ப்பிரதேசத்திலே உள்ள நிலக்கரியைத் தான் உயர்ந்த நிலக்கரி என்று கூறுவார்கள். முதலாவது யுத்த முடிவிலே அந்த ரூர்ப் பிரதேசம் ஜெர்மனியிடமிருந்து பிடுங்கப்பட்டது. இரண்டாவது யுத்தம் தோன்றுவதற்கு அந்த ரூர்ப் பிரதேச நிலக்கரிதான் காரணம் என்று கூடச் சொல்லிவிடலாம். அத்தகைய ரூர்ப் பிரதேச நிலக்கரியைக் காட்டிலும் தமிழ் நாட்டுத் தென்னுற்காட்டு நெய்வேலிப் பகுதி நிலக்கரி உயர்ந்தது: சிறந்தது; இது நிலக்கரி நிபுணர்களின் தீர்ப்பு.

இன்னும் சேலம் மாவட்டத்திலே மலேயடி வாரங்களிலும், மற்றும் பல இடங்களிலும் இரும்புச் சுரங்கங்கள் இருக்கின்றன. இரும்பும் நிலக்கரியும் உள்ள இடங்களில் இன்னும் எத்தனேயோ செல்வங்கள் உண்டு. இன்று உலகத்தை ஆட்டிவைப்பவை இரும்பும் நிலக்கரியுந்தான். இரும்பின் உதவியைக் கொண்டும், நிலக்கரியைக் கொண்டும் இந்த உலகத்தையே எப்படி வேண்டுமானுலும் மாற்றியமைத்து விடலாம்,

## பணமில்லேயா ?

இத்தகைய தொழில்களே வளர்க்க நமக்கு வலிமையில்லே; வசதியில்லே. நமது செல்வம் அந்நிய நாட்டுக்குக் கொள்ளே போய்க்கொண்டிருந்தால் நமக்கு வலிமை ஏற்படுவது எங்கே? வசதி ஏற்படுவது எப்படி?

அமெரிக்கர், ஆங்கிலேயர், ஜப்பானியர் மூலதனங்கள் நகது நாட்டுக்கு வந்துகொண்டிருக்கின்றன. நிலக்கரிச் சுரங்கங்களும், இரும்புச் சுரங்கங்களும் அவர்கள் வசம் போய்க்கொண்டிருக்கின்றன. நமது நாட்டுத் தங்கச் சுரங்கங்களும் வெள்ளேயர்களின் ஆதிக்கத்தில்தான்.

ஏன் இவைகளில் அன்னியர்களின் ஆதிக்கம் வர வேண்டும்? நமது அரசாங்கமே ஏன் இவைகளை நடத்தக் கூடாது? என்று கேட்டால் பணம் இல்லை; இயந்திர வசதிகள் இல்லை; நிபுணர்கள் இல்லை; என்று கூறுகின்றனர். எதற் கெடுத்தாலும் இப்படியே இல்லை, இல்லை, இல்லையே. என்று பல்லவி பாடுகின்றனர்.

அந்நிய நாட்டுக்குக் கொள்ளை போகும் லாபங்களைத் தடுத்து நிறுத்தினல்—அந்நியர் மூலதனங்களை—அந்நியர் தொழிற்சாலைகளை—தோட்டங்களையெல்லாம் நமது நாட்டுக்குச் சொந்தமாக்கி விட்டால் பணமில்லை என்ற பல்லவி பறந்து போய்விடும். பணத்தை வீசி யெறிந்தால் எந்த நாட்டிலிருந்தும் தற்காலிகமாக இயந்திரங்களையும், நிபுணர்களையும் வரவழைத்துக் கொள்ளலாம். கூடிய விரைவில் நாமே—நமது நாட்டிலேயே நமக்குத் தேவையான பெரிய இயந்திரங்களையும்—நிபுணர்களையும் உற்பத்தி செய்து கொள்ள முடியும்.

இது போலவே தான் ஒவ்வொரு மொழிவாரி மாகாணத்திலும்—செய்யப்பட வேண்டும். அந்நியர் சுரண்டலை அப்படியே வைத்துக் கொண்டு மொழிவாரி மாகாணம் பிரிக்கப்படுவதனுல் எந்தப் பயனும் ஏற்படாது. ஆகையால் தான் புதிய—ஐக்கிய தமிழகக் கிளர்ச்சியுடன் அந்நியர் மூலதன ஒழிப்புக் கிளர்ச்சியும் அடங்கியிருக்கின்றது,

ஒவ்வொரு மொழிவாரி மாகாணமக்களும் அந்நிய மூலதனங்களைத் தேசிய மயமாக்க வேண்டும்" என்று ஒன்றுபட்டுக் கிளர்ச்சி செய்தால் வெற்றி கிடைப்பது நிச்சயம்.

அந்நிய மூலதனம் ஒழிந்தால்,தான்—அதாவது அந்நிய மூலதனமும்—அதன் மூலம் நடைபெறும் தொழில்களும் நமது நாட்டுக்குச் சொந்தமானுல் தான் நமது நாட்டு இயற்கைச் செல்வங்களை நாம் எடுத்து அனுபவிக்க முடியும். இதை ஒவ்வொரு தமிழ் மகனும் உணர வேண்டும்,

இந்திய யூனியனுக்குள் மொழிவாரியாக—அல்லது தேசீய இனவாரியாக மாகாணங்கள் ஏற்பட வேண்டிய அவசியத்தைப் பற்றியும், அதற்காகச் செய்ய வேண்டிய ஒன்றுபட்ட கிளர்ச்சியைப் பற்றியும் இனி ஆராய்வோம்.

# 7. வெற்றிக்கு வழி

### கிளர்ச்சி புதிதல்ல

இந்தியாவைப் பதினேழு மொழிவாரி மாகாணங்களாகப் பிரிக்க வேண்டும் என்ற திட்டத்தை 1946 ஆம் ஆண்டிலேயே இந்நாட்டு ஜனநாயக வாதிகள் வெளியிட்டனர். இக்கொள்கையை அவர்கள் தங்கள் தேர்தல் திட்டமாகவும் அறிவித்தனர்.

அந்தப் பதினேழு மாகாணங்களும் தங்கள் அரசியல் நிர்ணய சபையைத் தாங்களே தேர்ந்தெடுத்துக்கொள்ள வேண்டும். வயது வந்தோர் அனைவருக்கும் வாக்குரிமையளித்து அவர்களால் தேர்ந்தெடுக்கப்படும் அங்கத்தினர்களே அரசியல் நிர்ணய சபையில் இடம் பெறுவர். இந்த மாகாணங்கள் சுய நிர்ணய உரிமையுள்ள மாகாணங்களாக இருக்கும்.

இந்தக் கொள்கையைக் காங்கிரசுத் தலைவர்கள் ஒப்புக் கொண்டிருந்தால் இன்றைய இந்தியாவின் நிலைமையே வேறு விதமாக இருந்திருக்கும். பாக்கிஸ்தான் பிரிவினை கூட ஏற்பட்டிருக்காது. நமது நாடு இன்றைய பிளவுபட்ட இந்தியாவாக இல்லாமல் ஒரே இந்தியாவாகக் காட்சியளிக்கும்.

இது மட்டும் அல்ல; இந்த மொழிவாரி மாகாணக் கொள்கை ஒப்புக் கொள்ளப்பட்டிருந்தால் இன்றைய சர்வாதிகார மத்திய அரசாங்கம் தோன்றியிருக்க முடியாது. மாகாணங்களுக்குக் கட்டுப்பட்டு நடக்கும் ஒரு ஜனநாயக மத்திய அரசாங்கந்தான் ஏற்பட்டிருக்க முடியும்.

ஜனநாயகக் கட்சிகளின் இன்றைய கொள்கையும் இந்திய யூனியன் 15 மொழிவாரி மாகாணங்களாகப் பிரிக்கப்பட வேண்டும் என்பது தான்.

1. ஐக்கிய தமிழகம்
2. ஐக்கிய கேரளம்
3. சம்யுக்த கன்னடம்
4. விசால ஆந்திரம்
5. மகாராஷ்டிர மாகாணம்
6. கூர்ஜர மாகாணம்
7. ராஜஸ்தான் மாகாணம்
8. மத்திய பாரத் மாகாணம்
9. ஒரிசா மாகாணம்
10. பீகார் மாகாணம்
11. வங்காள மாகாணம்
12. அசாம் மாகாணம்
13. உத்தர பிரதேச மாகாணம்
14. பஞ்சாப் மாகாணம்
15. காஷ்மீர் மாகாணம்

இவைகள் ஜனநாயக அரசியல் வாதிகள் கோரும் மாகாணங்கள்.

மொழிவாரி மாகாணம் என்றாலும் தேசிய இனவாரி மாகாணம் என்றாலும் ஒன்றே தான்.

இந்தியாவில் உள்ள மக்கள் அனைவரும் மொழிவாரி அல்லது தேசிய இனவாரி மாகாணங்களைத் தான் விரும்புகின்றனர்.

இத்தகைய மாகாணப் பிரிவினையை அகில இந்திய இயக்கங்கள் எல்லாம் ஒத்துக்கொண்டிருக்கின்றன. கம்யூனிஸ்டுக் கட்சி, அகில இந்திய சோஷலிஸ்டுக் கட்சி, இந்து மகாசபை, முன்னேற்றக் கட்சி, ஆகியவைகள் சுய நிர்ணய உரிமையோடு கூடிய மொழிவாரி மாகாணத்தை ஒத்துக் கொண்டிருக்கின்றன.

இந்த மொழிவாரி—மாகாணப் பிரிவினைக் கிளர்ச்சி யென்பது ஒரு அகில இந்தியக் கிளர்ச்சி ; இந்திய மக்கள் எல்லோராலும் வரவேற்கப்படும் கிளர்ச்சி; இந்திய அரசியல் கட்சிகள் எல்லாவற்ருலும் ஒப்புக் கொள்ளப் படும் கிளர்ச்சி.

சுமார் முப்பது ஆண்டுகளாக மொழிவாரி மாகாணக் கொள்கையை ஒப்புக் கொண்ட காங்கிரசு ஒன்று தான் இன்று இந்தப் பிரச்னையைத் தட்டிக் கழிக்கிறது. அகில இந்திய காங்கிரசுத் தலைவர்கள் அதிகார வெறி காரண மாகத் தங்கள் வாக்குறுதியைக் காற்றிலே பறக்க விட்டு விட்டனர். மொழிவாரி மாகாண அமைப்பைத் தள்ளி வைப்பதற்கு ஏதேதோ சாக்குப் போக்குகள் சொல்லு கின்றனர்.

## வெள்ளையர் செய்த சூழ்ச்சி.

இன்றுள்ள மாகாண அமைப்புக்களை அப்படியே வைத்துக் கொண்டால் மக்களுக்கு ஒரு நன்மையும் ஏற் படாது. மத்திய அரசாங்கத்தை இறுகப் பிடித்துக் கொண்டிருக்கும் சர்வாதிகாரிகள் தங்கள் அதிகார அட்ட காசத்தை நடத்திக் கொண்டிருக்கத்தான் உதவும்.

> இன்றுள்ள மாகாண அமைப்பு நம்மை அடக்கி ஆண்ட அந்நியர்களால்—வெள்ளையர்களால் ஏற் படுத்தப்பட்டது. வேண்டு மென்றே—ஒரு மொழி பேசும் மக்கள் ஒன்று சேராமல் இருக்க வேண்டு மென்பதற் கென்றே பிரிக்கப்பட்டது. ஒரே இன மக்கள் ஒன்று கூட இடமில்லாமல் இருக்கவேண் டும் என்பதற்காகவே அமைக்கப்பட்டது.

ஒரே இன மக்கள் ஒன்று சேர்ந்து விட்டால்—ஒரு மொழி பேசும் மக்கள் ஒன்று சேர்ந்து விட்டால் தங்கள் சுரண்டலும் சூழ்ச்சியும் செல்லாது என்பது வெள்ளையர் களுக்கு நன்ருகத் தெரியும். ஆகையால் தான் அவர்கள் பலமொழி பேசும் மக்களைக்கொண்ட பலப்பல மாகாணங்க ளாகப் பிரித்தனர். தங்கள் ஆங்கில மொழியை அரசியல் மொழியாக்கி மக்களையும் நாட்டையும் அடிமைப் படுத்தி

னர். பொது மக்களுக்கு அரசியல் நடப்புகள் தெரியாத படி செய்து விட்டனர். ஆங்கிலம் படித்தவர்களைத் தங்கள் கையாட்களாக வைத்துக் கொண்டு யதேச்சாதிகாரம் புரிந்தனர்.

சுயராஜ்யம் என்றால் அது உண்மையான மக்கள் ஆட்சியாக விளங்க வேண்டாமா? மொழிவாரியாக மாகாணங்களைப் பிரித்து, மக்களுக்குப் புரியும் மொழியிலே அரசாங்கத்தை நடத்தினால் தானே பாட்டாளியும் விவசாயியும் அரசாங்கத்தை நடத்துவதிலே பங்கு கொள்ள முடியும்? காங்கிரசுக் காரர்களாகட்டும், மற்ற எந்தக் கட்சியினராகட்டும் மொழிவாரி மாகாணத்தை எதிர்ப்பார்களாயின் அவர்களை ஜனநாயக வாதிகள் என்று நாம் எப்படி ஒப்புக்கொள்ள முடியும்?

சுய நிர்ணய உரிமையோடு கூடிய மொழிவாரி மாகாணக் கிளர்ச்சியை வேண்டாம் என்று வெறுப்போர் யாரும் இல்லை. இந்திய யூனியனில் உள்ள எல்லா மொழியினரும் வரவேற்கின்றனர். ஆதலால் எல்லா மக்களும் சேர்ந்து நின்று தான் இதற்குப் போராட வேண்டும். இத்தகைய !அகில இந்தியப் போரரட்டந்தான் வெற்றியளிக்கும்.

இந்திய மக்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து நடத்தும் போராட்டத்தை அதிகார வர்க்கம் அலட்சியம் செய்து விட முடியாது. எந்த வித அடக்குமுறைகளினாலும் நசுக்கிவிடவும் முடியாது. விட்டுக் கொடுத்தே தீரவேண்டும். அகில இந்திய மக்களின் கோரிக்கையை ஒரு சிறு அதிகாரக் கும்பல் எதிர்க்குமானால் அந்தக் கும்பல் முறியடிக்கப்படும். மக்கள் தாங்களே தங்கள் கோரிக்கையை நிறைவேற்றிக் கொள்ளும் உரிமையைப் பெற்று விடுவார்கள். உலக வரலாறு நமக்கு எடுத்துச் சொல்லும் உண்மை இது தான்

நம்முடைய மாகாண உரிமையைப் பெற—மொழிவாரி மாகாணம் அமைக்க—நாமே தனித்து நின்று போராடி வெற்றி பெறுவோம். இதற்கு மற்றவர்களின் துணை நமக்கு வேண்டாம். முஸ்லிம்கள் தனித்து நின்று போரா

டிப் பாக்கிஸ்தான் பெறவில்லையா? இன்று காஷ்மீர மக்கள் தனித்து நின்று போராடி உரிமை பெறவில்லையா? என்று சிலர் கேட்கின்றனர்.

### பாக்கிஸ்தான் கிடைத்தது.

முஸ்லிம்கள் பாக்கிஸ்தான் பெற்றுவிட்டனர். இந்திய யூனியனுக்குள்ளேயே—இன்றுள்ள அரசியல் சட்டத்தை வைத்துக்கொண்டே காஷ்மீர மக்கள் சுய நிர்ணய உரிமையுள்ளதுபோன்ற தனி மாகாணம் பெற்றுவிட்டனர். இவை உண்மைதான். ஆனால் இவர்கள் வெற்றியின் இரகசியத்தைக் கொஞ்சம் எண்ணிப் பார்த்தால்தான் உண்மை விளங்கும்.

ஒரு நாட்டின் சுதந்தரப் போராட்டத்திலே பக்கத்து நாடுகள் பரிவு காட்டவேண்டும். அந்தச் சுதந்தரப் போராட்டத்திலே நீதியிருக்கிறது, உண்மை யிருக்கிறது என்பதை உலக மக்கள் ஒப்புக்கொள்ளவேண்டும். இத்தகைய சுதந்தரப் போராட்டங்கள்தான் வெற்றி பெற்றிருக்கின்றன. தன் பக்கத்தில் உள்ளவர்களின் அன்பை-ஆதரவை—அனுதாபத்தைப் பெறாத எந்தப் போராட்டமும் வெற்றி பெறாது. இது சுதந்தரப் போராட்டத்தில் அடங்கி யுள்ளதொரு தத்துவம். இதனால்தான் சுதந்தரப் போராட்டத்திலே ஈடுபட்டிருக்கும் ஒவ்வொரு இயக்கத்தினரும் தங்கள் கோரிக்கைகளைப் பக்கத்து நாட்டினரும், வெளி நாட்டினரும் அறியும்படி செய்கின்றனர்.

பாக்கிஸ்தான் பெற காலஞ்சென்ற ஜின்னா அவர்கள் நடத்திய போராட்டத்திலே இந்தியா முழுவதும் பங்கு கொண்டது. இந்தியாவின் மூலை முடுக்குகளிலே வாழ்ந்த முஸ்லிம்கள் அவ்வளவு பேரும் "பாக்கிஸ்தான் ஜிந்தாபாத்" என்று ஒரே குரலாக முழக்கமிட்டனர்.

இந்தியாவின் வட பகுதியிலே பாக்கிஸ்தான் என்ற ஒரு முஸ்லிம் ராஜ்யம் ஏற்படுவதனால் தமக்கு ஒரு நன்மையும் இல்லை என்பது தஞ்சாவூர் முஸ்லிம்களுக்குப் புரியாததல்ல; திருநெல்வேலி முஸ்லிம்களுக்குத் தெரியாததல்ல; சென்னை முஸ்லிம்களுக்கு விளங்காததல்ல. ஆயினும்

முஸ்லிம்கள் பெரும்பான்மையாக வாழும் மாகாணங்கள் முஸ்லிம்களின் ஆட்சியிலேதான் இருக்கவேண்டும் என்ற கோரிக்கையிலே நியாயமுண்டு என்பதை இந்தியாவில் உள்ள முஸ்லிம்கள் அனைவரும் ஆதரித்தனர். காசி முதல் கன்னியாகுமரி வரையுள்ள அத்தனை முஸ்லிம்களும் பாக்கிஸ்தான் இயக்கத்திற்கு ஆதரவாய் நின்றனர். வெளி நாட்டு முஸ்லிம்களும் அனுதாபம் காட்டினர். இதனா லேயேதான் பாக்கிஸ்தான் போராட்டத்திலே வெற்றி கிடைத்தது. இந்த உண்மையை மறப்பதோ, மறைப்பதோ சரியல்ல.

## பாக்கிஸ்தான் வேண்டாம்

பாக்கிஸ்தான் பிரிவினைக் கிளர்ச்சி வெறும் இன வெறியையும் மத வெறியையும் அடிப்படையாகக்கொண்ட கிளர்ச்சிதான். அந்தக் கிளர்ச்சியிலே நிலப் பிரபுத்துவ ஒழிப்புக் கிளர்ச்சி புகுத்தப்படவில்லை. அன்னிய நாட்டு மூலதன ஒழிப்புக் கிளர்ச்சியும் இணைக்கப்படவில்லை. ஆயினும் முஸ்லிம் பொது மக்களின் நன்மைக்காகவே—வாழ்வுக்காகவேதான் பாக்கிஸ்தான் வேண்டும் என்று முஸ்லிம் பொது மக்களின் உள்ளத்தைக் கவரும்படி பிரிவினைக் கிளர்ச்சிக்காரர்கள் பேசினார்கள். இந்தப் பேச்சுதான் அவர்களுக்குப் பொது மக்களின் ஆதரவைத் திரட்டித் தந்தது.

ஆனால் இன்றைய பாக்கிஸ்தான் நிலைமை யென்ன? பாக்கிஸ்தானில் உண்மையான பாட்டாளி—விவசாயிகளின் ஆட்சி நிலவுகிறதா? பாக்கிஸ்தானத்தில் மக்கள் ஆட்சி நிலவுகிறதா? இல்லை, அங்கே நிலப் பிரபுத்துவ—முதலாளித்துவ நவாப் தர்பார்தான் நடந்துகொண்டிருக்கிறது. ஜனநாயக ஆட்சிக்கு—மக்கள் ஆட்சிக்குப் பாடுபடும் முற்போக்கு இயக்கங்கள் நசுக்கப்படுகின்றன; முற்போக்கு சக்திகள் குலைக்கப்படுகின்றன; முற்போக்குவாதிகள் பலர் சிறைக்குள் பூட்டப்பட்டுக் கிடக்கின்றனர் இந்திய யூனியனில் உள்ள பிரஜா உரிமைகள்கூட அங்கில்லை,

நிலப் பிரபுத்துவத்துவ ஒழிப்புக்கு வழி தேடாமல்—அன்னிய மூலதன ஒழிப்புக்கு வழி தேடாமல் தனி நாடு பெற்ற தன் பலனைப் பாக்கிஸ்தானத்திலே பார்க்கிறோம். அத்தகைய தனி நாடு பெறுவதனால் யாருக்கு என்ன பலன்? பாக்கிஸ்தானத்திலே விவசாயிகளும் பாட்டாளிகளும் வேதனைப்பட்டு வெந்து மடிகின்றனர். நிலப் பிரபுக்களும், தாய் நாட்டை அந்நிய நாட்டுக்கு அடிமைப் படுத்தும் முதலாளிக் கும்பல்களும் பொது மக்களின் இரத்தத்தை உறிஞ்சிக் குதூகலித்துப் பேயாட்டம் ஆடுகின்றனர். இத்தகைய தனி நாடு வேண்டுமா?

நிலப் பிரபுத்துவ ஒழிப்பைப்பற்றியும், அன்னிய மூலதன ஒழிப்பைப்பற்றியும் கவலைப்படாமல் தனி நாடு கேட்பவர்கள் யாராயிருந்தாலும் சரி அவர்களை ஜனநாயக வாதிகள் என்று ஒப்புக்கொள்ள முடியாது. அவர்கள் பாக்கிஸ்தான் பிரிவினைக்காரர்களைப் போன்ற மதவெறியர்களாகத்தான் இருக்கவேண்டும். அல்லது இனப்பித்தர்களாகத்தான் இருக்கவேண்டும். அல்லது மொழி வெறியர்களாகத்தான் இருக்கவேண்டும்.

வடநாட்டார் தொடர்பற்ற திராவிட நாடு வேண்டும் என்று கேட்கின்றனர் திராவிட இயக்கத்தினர். வடநாட்டார் ஆதிக்க ஒழிப்பு என்ற ஒன்றைமட்டும் அடிப்படையாக வைத்துக்கொண்டு திராவிட நாடு தனியாகப் பிரிவதாகவே வைத்துக்கொள்ளுவோம். அல்லது தமிழ் நாடு தனியாகப் பிரிவதாகவே வைத்துக்கொள்ளுவோம். பிரிந்தால் இந்த நாட்டிலே யாருடைய ஆட்சி நடக்கும்? கண்டிப்பாக நிலப் பிரபுத்துவ ஆட்சிதான் நடக்கும். அன்னிய நாட்டினருக்கு இந் நாட்டைக் காட்டிக்கொடுக்கத் துடிதுடித்துக்கொண்டிருக்கும் துரோகிகளின் ஆட்சிதான் நடக்கும். திராவிட இயக்கத்தார் விரும்பும் ஆட்சி முறை ஏற்பட முடியாது.

நிலப் பிரபுத்துவ முறைக்கு உலை வைக்காமல் அந்நிய மூலதனத்தைப் பறிப்பதற்கு அடி கோலாமல் ஏற்படும் திராவிட நாட்டிலோ—அல்லது தமிழகத்

திலோ இன்றைய இந்தியஆட்சியைப்போன்ற ஆட்சி தான் நடக்கும். பாக்கிஸ்தானத்து ஆட்சியைப் போன்ற ஆட்சிதான் நடக்கும். நிலப் பிரபுக்களும், மடாதிபதிகளும், அன்னிய நாட்டு முதலாளிகளுந் தான் ஆட்சியை நடத்துவார்கள். நாட்டுப் பிரிவினைக்குப் பாடுபட்டவர்களே நசுக்கப்பட்டாலும் படலாம். முற்போககுச் சக்திகளெல்லாம் சிதைக்கப் படும். இத்தகைய கொடுங்கோ லாட்சிக்கு வழி கோலும் நாட்டுப் பிரிவினை வேண்டுமா?

## காஷ்மீர் வெற்றி

காஷ்மீரத்தின் வெற்றியைக் கவனித்தால் பல உண்மைகள் விளங்கும். காஷ்மீர் முதல் மந்திரி ஷேக் அப்துல்லாவுக்கு மக்களின் பேராதரவு இருந்தது ஒன்று. இரண்டாவது; பாக்கிஸ்தான் காஷ்மீரத்தை அடிமைப்படுத்த நினைக்கிறது; நாங்கள் காஷ்மீர மக்களின் சுதந்தரத்தைக் காப்பாற்ற விரும்புகிறோம்; என்று இந்திய அரசாங்கம் சொல்லிக்கொண்டதை மெய்ப்பித்துக் காட்டியாக வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுவிட்டது. இத்தகையை சிக்கலான நிலைமையை ஷேக் அப்துல்லா உண்டாக்கிவிட்டார். காஷ்மீர மக்களின் கோரிக்கையை—ஷேக் அப்துல்லாவின் கோரிக்கையை—இந்திய அரசாங்கம் ஒப்புக்கொள்ளாவிட்டால், இந்திய அரசாங்கத்தை உலகம் பழிக்கும். பாக்கிஸ்தான் அரசாங்கத்தின்மேல் சுமத்தும் அதே ஆக்கிரமிப்புக் குற்றச் சாட்டை இந்திய அரசாங்கத்தின் மீதும் உலகம் சுமத்தும். ஆகையால் இந்திய அரசாங்கம் ஷேக் அப்துல்லாவுக்கு இணங்கும்படி நேர்ந்தது.

காஷ்மீரத்தின் வெற்றியிலே அடங்கியுள்ள மற்றொரு உண்மையை மறந்து விடக்கூடாது. காஷ்மீர விவசாய மக்கள் நிலப்பிரபுத்துவ அமைப்பை ஒழித்துக்கட்ட ஒன்றுபட்டு நின்றனர். தங்கள் உரிமையைப் பெற்றே தீருவதென்ற பிடிவாதத்துடன் பல்லாண்டுகளாகப் போராட்டம் நடத்தினர். அந்தப் போராட்டத்திலே அவர்கள் தங்கள் பச்சை இரத்தத்தையும் பரிமாறினர். அவர்களுடைய உறுதியும் போராட்டமுமே ஷேக் அப்

துல்லாவுக்குப் பலத்தையும் ஊக்கத்தையும் ஊட்டின. இதனுல் தான் அவர் இந்திய அாசாங்கத்துடன் வாதிட்டு வெற்றி பெற முடிந்தது.

ஆகவே எந்தச் சுதந்தரப் போராட்டமும் உள்நாட்டு மக்களின் ஆதரவையும் பெறவேண்டும். உலக மக்களின் ஆதரவையும் பெற வேண்டும். இந்த முறையிலே நடத் தப்பட்டால் தான் விரைவில் வெற்றியடைய முடியும். உலகின் பல பகுதிகளில் நடந்த ஒவ்வொரு சுதந்தரப் போராட்டங்க்ளும் இந்த முறையிலே நடந்து தான் வெற்றி பெற்றன. இந்த உண்மையைத் தனித்து நின்று போராடியே தனி நாடு பெறுவோம் என்போர் உணர வேண்டும்.

மாகாணங்கள் ஒன்றுக்கொன்று தொடர்பின்றித் தனித்தனியே நிற்கவேண்டுமா? அல்லது தங்களுக்குள் உடன்படிக்கை செய்து கொண்டு அந்த உடன்படிக் கையை நடத்திவைக்க ஒரு மத்திய அரசாங்கத்தின் கீழ் இருக்க வேண்டுமா? என்பதை இனி ஆராய்வோம்.

## 8. தனித்து நிற்க வேண்டுமா?

### சென்னை மாகாணத்தில்

தனி மொழி மாகாணம் வேண்டும் என்ற கிளர்ச்சி இன்று சென்னை மாகாணத்தில்।தான் தீவிரமாகி யிருக்கின் றது. இதற்கு அடுத்தபடியாக வங்காளத்தைக் கூறலாம், இதற்குக் காரணம் உண்டு. வடநாட்டு மாகாணங்கள் பெரும்பாலானவை ஏறக்குறைய மொழிவாரி அடிப்படை யிலேயே அமைந்திருக் கின்றன. தென்னுட்டில் இருப் பது போன்ற அவ்வளவு சிக்கல்கள் அங்கில்லை. சில சிறு மாறுதல்கள் மூலம் அவைகளைத் திருத்தி விட லாம்.

ஆனுல் சென்னை மாகாணம் முக்கியமாக நான்கு மொழி பேசும் மக்களைப் பிணைத்து வைத்துக் கொண்

டிருக்கிறது. தமிழர், கேரளர், கர்நாடகர், ஆந்திரர் ஆகிய நால்வரே இவர்கள். இவர்கள் தனித்தனி மாகாணங்களாகப் பிரிந்து தங்கள் ஆட்சியைத் தாங்களே நடத்த விரும்புகின்றனர்.

ஆந்திர மாகாணக் கிளர்ச்சி நீண்ட நாட்களாக நடந்து வருகின்றது. சம்யுக்த கன்னடம், ஐக்கிய கேரளம் ஆகிய கோரிக்கைகளும் இன்று வளர்ந்து வலுத்து வருகின்றன.

தமிழ் நாட்டைத் தமிழரே ஆள வேண்டும் என்ற கிளர்ச்சியும் நீண்ட காலைய கிளர்ச்சிதான். ஆயினும் அது ஒரு பொது ஜனக் கிளர்ச்சியாக உருவெடுத்தது 1938 ஆம் ஆண்டில் தான். அப்பொழுது இந்த மாகாணத்தில் திரு. ராஜகோபாலாச்சாரியாரின் காங்கிரசு மந்திரி சபை இருந்தது. அவர் எல்லா உயர்தரக் கலாசாலைகளிலும் முதல் பாரத்திலிருந்து மூன்றும் பாரம் வரையிலும் இந்தியைக் கட்டாய பாடமாக்கினர்.

இதனைக் காங்கிரசின் எதிர்க்கட்சியினர், காங்கிரசை எதிர்ப்பதற்கு ஒரு கருவியாகப் பயன்படுத்திக் கொண்டனர். ஜஸ்டிஸ் கட்சியினரும் அவர்களை ஆதரித்து நின்ற பெரியார் ஈ. வெ. ரா. அவர்களைத் தலைமையாகக்கொண்ட சுயமரியாதைக் கட்சியினரும் "இந்தியைக் கட்டாய மாக்காதே" என்று போராடினர். தமிழ்நாடெங்கும் மாநாடுகள், பொதுக் கூட்டங்கள், ஊர்வலங்கள் நடத்தினர். முதல் மந்திரி ராஜகோபாலாச்சாரியாரின் வீட்டின் முன்னே மறியல் செய்தனர். பின்னர் சென்னையில் இந்து தியாலாஜிகல் உயர்தரக் கலாசாலையின் முன்னே மறியல் செய்தனர். இத்தகைய இந்தி எதிர்ப்புக் கிளர்ச்சியின் மூலம் ஆயிரக்கணக்கான தமிழர்கள் சிறைப்பட்டனர்.

கட்டாய இந்தி எதிர்ப்புக் கிளர்ச்சி மொழி வெறுப்புக் கிளர்ச்சியாக மாறியது; வடநாட்டினரை வெறுக்கும் கிளர்ச்சியாகவும் உருவெடுத்தது. மொழி வெறுப்புக் கிளர்ச்சி இன வெறுப்புக் கிளர்ச்சியாக மாறும்படி நேர்ந்தது வருந்தக் கூடியதே. மக்களையே மக்கள் வெறுக்கும்

மனப்பான்மை தவறானது. இந்த மனப்பான்மை மறைவதற்கான வழிகாண வேண்டுவது அறிஞர்கள் கடமை.

இச்சமயத்தில் தான் தமிழ் நாடு தமிழருக்கே என்ற ஓசை பிறந்தது. சில மாதங்களில் இந்த ஓசை திராவிட நாடு திராவிடர்க்கே என்று உருவெடுத்தது.

## வெறுப் புணர்ச்சி வேண்டுமா?

இக்காலத்தில் திராவிட நாடு வேண்டும் என்றவர்கள் இந்திய அரசாங்கத்துடன் தொடர்பில்லாத தனித் திராவிட நாடு வேண்டும் என்றனர். ஆனால் நேரே இங்கிலாந்துடன் சம்பந்த மிருக்கலாம் என்று கூறினர். வட நாட்டினர் ஆதிக்கம் தமிழ் நாட்டில் கூடாது என்பதற்காகவே இவ்வாறு கேட்டனர்.

"திராவிட நாடு திராவிடர்க்கே" என்று முழங்கியவர்கள் பாக்கிஸ்தான் இயக்கத்தை ஆதரித்து நின்றது குறிப்பிடத்தக்கது.

திராவிட நாடு கேட்போர் இன்னும் தனித்திராவிடமே கேட்கின்றனர். மத்திய அரசாங்கத்திலிருந்து தனியாக நிற்கும் திராவிடமே இவர்கள் வேண்டுவது.

ஆனால் திராவிட நாடு என்றால் என்ன? அதன் எல்லையாது? என்றால் சரியான பதில் இல்லை. கன்னியா குமரியிலிருந்து விந்தியமலை வரையிலும் திராவிட நாடு என்பர் சிலர், சென்னை மாகாணமே திராவிடநாடு என்பர் சிலர். தமிழ் நாடே திராவிடநாடு என்பர் சிலர்; தமிழ் நாட்டில் ஒரு ஜில்லாவை—அதாவது தஞ்சாவூர் ஜில்லாவை மட்டும் தனியாகப் பிரித்துக் கொடுத்தாலும் போதும். அதுவே திராவிட நாடு என்றும் கூறுவர்,

இவர்கள் வேண்டும் திராவிடநாடு மத்திய அரசாங்கத்தின் இணைப்பிலிருந்து பிரிந்து தனித்திருக்கவேண்டும். மத்திய அரசாங்கம் வட நாட்டினரின் ஆதிக்கத்தில் இருப்பது. ஆகையால் அதன் நாற்றமே கூடாது; என்பதுதான்.

இத்தகைய திராவிட நாட்டுக் கோரிக்கையிலே சுதந்தர உணர்ச்சி முன்னிற்கின்றது; யாருக்கும் தலைவணங்கோம் என்ற தன மான உணர்ச்சி தலைதூக்கி நிற்கின்றது. இது தமிழரின் பரம்பரைப் பண்பாடு. மதியாதார் தலைவாசல் மிதிக்கவேண்டாம் என்று பள்ளிககூடப் பிள்ளைகளுக்குப் பாடம் போதிப்பவன் அல்லவா தமிழன்? ஆகையால் இத்தகைய உணர்ச்சி பாராட்டற்குரியது தான்.

திராவிட இயக்கத்தாரைப் போலவே தனித் தமிழகம் வேண்டுவோரும் தமிழ் நாட்டில் உண்டு. இவர்கள் "தமிழ் நாடு தனியாகப் பிரியவேண்டும். மத்திய அரசாங்கத்தின் தொடர்பின்றி வாழ வேண்டும்" என்று கூறுகின்றனர். ஆனால் தனித் தமிழகத்தின் ஆட்சி எப்படியிருக்கும் எனபதைப்பற்றி இவர்கள் சரியான பதில் சொல்லுவதில்லை.

## தமிழரின் தனிச் சிறப்பு

தமிழ்நாடு, அல்லது திராவிட நாடு தனித்திருக்க வேண்டும் என்று கூறுவோர் சிறிது சிந்தனை செய்து பார்க்க வேண்டும். தமிழரின் பண்டைப் பண்பாட்டை எண்ணிப்பார்க்கவேண்டும். இது நமது வேண்டுகோள்,

தமிழன் எக்காலத்திலும் தனிவாழ்வை விரும்பியவன் அல்லன். தமிழன் எதைப்பற்றிப் பேசினாலும் உலகத்தையும் சேர்த்தே தான் பேசுவான், உலகத் தொடர்பை அறுத்துக் கொண்டு, தன்னந்தனியனாய் வாழ வேண்டுமென்று எக்காலதிலும் தமிழன் எண்ணியதே யில்லை. உலக உருண்டையிலிருந்து தமிழகத்தைத் தனியே கிள்ளி எடுத்துவிட முடியாது என்ற உண்மையைத் தமிழன் மறந்தவன் அல்லன்.

"யாதும் ஊரே
யாவரும் கேளிர்"

என்பது திருவள்ளுவருக்கு முன்னிருந்த தமிழன் பேச்சு. எல்லா ஊர்களும் நம்முடைய ஊர்கள் தாம்; எல்லா மக்களும் நம்முடைய உறவினர்கள் தாம். இதுவே அந்தவரியின் பொருள்.

தாம் இன்புறுவது உலகு இன்புறக் கண்டு
காம் உறுவர்கற்றறிந்தார்

என்பது திருவள்ளுவர் கூற்று, "தாம் இன்பம் அடைவதைப்போல உலகமும் இன்பம் அடைவதற்கு வழி கண்டு, அதைச் செய்வதற்கே விரும்புவார்கள் கல்வியும் அறிவும் உடையவர்கள்" என்பதே இந்தக் குறளின் பொருள்.

பின்னாள் தமிழர்களும்

"எல்லோரும் இன்புற்றிருக்க நினைப்பதுவே
அல்லாமல் வேறு ஒன்று அறியேன்"

என்றுதான் கூறினார்கள்.

ஆகவே முன்னாள் தமிழர்களும் பின்னாள் தமிழர்களும், இடைக்காலத் தமிழர்களும் உலகத்தை மறந்தவர்கள் அல்லர். இதுதான் தமிழர் சமுதாயத்திற்குள்ள ஒரு தனிச் சிறப்பு. இன்றைய தமிழர்களும் இந்தப் பரம்பரைப் பண்பை மறந்துவிடக்கூடாது,

புதிய—ஐக்கிய தமிழகத்திலே, மக்கள் வாழ்க்கை எவ்வாறு அமைந்திருக்கவேண்டும் என்று விரும்புகின்றோமோ அவ்வாறே மற்றய தனித் தனி மொழிவாரி மக்களின் வாழ்க்கையும் அமைந்திருக்கவேண்டும். அதற்காகத் தமிழன் பாடுபடவேண்டும் "யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்" என்ற தமிழனுடைய கொள்கையைச் செயலிலே காட்டவேண்டுமானால் மற்ற மொழிவாரி மக்களுடன் கூட்டுறவு கொண்டிருக்கத்தான்வேண்டும். இந்தக் கூட்டுறவை வளர்ப்பதற்கு — இந்தக் கூட்டுறவுக்குத் துணை செய்வதற்குத்தான ஒரு மத்திய அரசாங்கத்தின் கீழ் எல்

லோரும் ஒத்த சகோதரர்களாய் இணைந்து நிற்க வேண்டும் என்று கூறுகிறோம்.

வட நாட்டினருக்குக் கால் பிடிக்கவேண்டும் என்பதோ மத்திய அரசாங்கத்துக்கு அடிமைப்பட்டுக் கிடக்கவேண்டும் என்பதோ ஐக்கிய தமிழகம் வேண்டுவோரின் நோக்கம் அல்ல. இந்திய யூனியன் முழுவதிலும் உள்ள ஒவ்வொரு மொழிவாரி மக்களும் சுய நிர்ணய உரிமை பெற்ற தனித் தனி மாகாண அரசு பெற்று வாழவேண்டும் என்பதே ஐக்கிய தமிழகம் வேண்டுவோரின் கொள்கை. ஒரு மொழி மாகாணம் மற்றொரு மொழி மாகாணத்தைச் சுரண்டுவதற்கு இடமிருக்கக்கூடாது என்ற கொள்கையும் மொழிவாரி மாகாணப் பிரிவினையுள் அடங்கியுள்ளது. இத்தகைய கொள்கைக்கு ஆதரவு தரும் ஒரு மத்திய அரசாங்கத்துடன் இணைந்திருப்பதில் தவறென்ன?

## சர்வாதிகாரமற்ற மத்திய அரசாங்கம்

சுய நிர்ணய உரிமையுள்ள மொழிவாரி மாகாணங்கள் ஏற்பட்ட பின்னும் இன்றுள்ள மாதிரியான மத்திய அரசாங்கமே நிலைத்திருக்கும் என்று சிலர் நினைக்கின்றனர்; மத்திய அரசாங்கத்திற்கு இன்றுள்ள சர்வாதிகாரம் அப்படியே ஒட்டிக்கொண்டிருக்கும் என்று எண்ணுகின்றனர். இது தவறு.

> சுய நிர்ணய உரிமையோடு கூடிய மொழிவாரி மாகாணங்கள் ஏற்பட்டபின் இயங்கும் மத்திய அரசாங்கத்தின் அமைப்பு வேறு. அது இன்றுள்ள சர்வாதிகாரம் படைத்த—ஏதேச் சாதிகாரங்கொண்ட மத்திய அரசாங்கம்போல இயங்கமுடியாது. மாகாண அரசாங்கங்களின்மேல் தான் எண்ணியபடியெல்லாம் அதிகாரம் செலுத்த முடியாது. மாகாண அரசாங்கங்களின் விருப்பத்திற்குக் கட்டுப்பட்டே தான் நடந்து கொள்ளவேண்டும்,

இப்பொழுது மாகாண அரசாங்கங்களை ஆக்கும் சக்தியும், அழிக்கும் சக்தியும் மத்திய அரசாங்கத்தினிடம் இருக்கிறது. இத்தகைய அதிகாரத்தை மத்திய அரசாங்கம்

598

EXTENSION

சட்டத்தின் மூலம் பறித்து வைத்துக்கொண்டிருக்கின்றது. ஆனால் சுய நிர்ணய உரிமையோடு கூடிய மொழிவாரி மாகாணங்கள் ஏற்படும்போது மத்திய அரசாங்கத்தை இயக்கும் சக்தி மாகாணங்களுக்கு மாறிவிடும். மாகாண அரசாங்கங்களின் முடிவின்படிதான் மத்திய அரசாஙகம் நடந்தாக வேண்டும். இதை மத்திய அரசாங்கத்தின் தொடர்பற்ற தனி நாடு வேண்டும் என்போர் எண்ணிப் பார்க்கவேண்டும்.

ஆகவே மத்திய அரசாங்கத்தின் சேர்க்கையே கூடாது என்று இப்பொழுது பிடிவாதம் செய்யவேண்டிய அவசியமே இல்லை. இந்திய யூனியனில் உள்ள எல்லாத் தேசிய மக்களும் தனித்தனி மொழிவாரி மாகாணம் பெற்று வாழவேண்டும் என்னும் கொள்கையை ஒப்புக் கொளளாவிட்டால்—இக்கொள்கைக்கு ஆதரவளிக்காவிட்டால்தான் மத்திய அரசாங்கத்தின் கூட்டுறவற்ற தனி மாகாணம் கேட்கலாம். தமிழ் மாகாணம்—அல்லது திராவிட நாடு பிரிய வேண்டும் என்று விரும்பும் எவரும் மற்ற தேசிய இன மக்களின கோரிக்கைக்குக் குறுக்கே நிற்கவில்லை. அவர்களின் கோரிக்கைகளையும் ஆதரித்தே நிற்கின்றனர். ஆகையால் மத்திய அரசாங்கத் தொடர்பே கூடாது என்பதைப்பற்றிப் பிடிவாத மின்றி அவர்கள் ஆலோசிக்கவேண்டும். ஆதலால் மத்திய அரசாங்கத்தின் கூட்டுறவே கூடாது என்ற பேச்சு அவசிய மற்றதென்பதே நமது கருத்து. மத்திய அரசாங்கத்துடன் சேர்ந்திருக்க விருப்ப மில்லாவிட்டால் பிரிந்துகொள்ளும் உரிமை எந்தச் சுய நிர்ணய உரிமையுள்ள மாகாணத்திற்கும் உண்டு என்பதையும் மறந்துவிடக்கூடாது.

மத்திய அரசாங்கத்துடன் இணைந்திருந்தால் மாகாணங்களில் அந்நியர் சுரண்டலை ஒழிக்கமுடியாது; அந்நியர் சுரண்டலை ஆதரிப்பவர்களே மத்திய அரசாங்கத்தின் கீழ் மொழிவாரி மாகாண கேட்கின்றனர்; என்று கூறுவோர் கூற்றும் சரியானதல்ல என்பதை விளக்குவோம்.

# 9. சுரண்டல் ஏது?

## அடிமையில்லை சுரண்டல் இல்லை

ஒரு மத்திய அரசாங்கத்தின் கீழ் தனித்தனி மொழிவாரி மாகாணங்கள் அமையவேண்டும்; அவைகள் சுய நிர்ணய உரிமை பெற்றவைகளாக இருக்கவேண்டும்; என்று கூறுவோரை வட நாட்டுக் கூலிகள்; வட நாட்டுக் கங்காணிகள்; என்று வசைபாடுவதில் அர்த்தமில்லை. மத்திய அரசாங்கத்தோடு இணைந்து நின்றால் வட நாட்டினர் தமிழ் நாட்டைச் சுரண்டியே தீர்வார்கள் என்பதே இவர்களுடைய வாதம்.

இந்த வாதம் சரிதானா? இதில் உண்மையுண்டா? என்பதை நாம் கவனித்துத்தான் ஆகவேண்டும். இவர்கள் வாதத்தில் உண்மையில்லை என்பதை நாம் எடுத்துக் காட்டக் கடமைப்பட்டிருக்கின்றோம்.

யாரும் யாரையும் சுரண்டுவதற்கு இடமில்லாத அரசியல் அமைப்பே அந்தச் சுய நிர்ணய உரிமையுள்ள மாகாணங்களின் அரசியல் அமைப்பாக இருக்கும். ஒரு இனத்தினர் மற்றொரு இனத்தினர் மீது ஆதிக்கம் செலுத்தக் கூடாது என்பதற்காகவே மொழிவாரி மாகாணம் கேட்கப்படுகின்றது.

மொழிவாரி மாகாண அமைப்பினால் முதலில் நீண்ட நெடுங்காலமாக உழவர்களின் இரத்தத்தை உறிஞ்சிக் கொழுக்கும் நிலப் பிரபுத்துவத்துக்குப் பாதுகாப்பு அளித்துவரும் சமஸ்தானங்கள் ஒழிக்கப்படுகின்றன; ராஜப் பிரமுகர்களுக்கு நிரந்தரமான ஓய்வு கொடுக்கப்படுகின்றது. அவர்கள் நிலைமாறி சாதாரண குடி மக்களாகி விடுகின்றனர்

இரண்டாவது, நிலப் பிரபுத்துவமுறை அடியோடு ஒழிக்கப்பட்டு விவசாயிகளின் நிலை உயர்த்தப்படுகின்றது. இதன் மூலம் 84 சத விகிதமுள்ள விவசாய மக்கள் நீண்டகால அடிமையிலிருந்து நீங்கு

கின்றனர். அவர்கள் நிலப்பிரபுத்துவச் சுரண்டலி லிருந்து நிலையான விடுதலை பெறுகின்றனர். துன்ப வாழ்விலிருந்து, இன்ப வாழ்வுக்குத் திரும்புகின்றனர்.

மூன்றாவது, அன்னிய நாட்டு மூலதனங்கள் பறி முதல் செய்யப்பட்டு அவைகள் அரசாங்க உடைமை யாக்கப்படுகின்றன. இதைச் செய்வதன் மூலம் ஒவ் வொரு மாகாணத்திலும் தேசியத் தொழில்கள் வளர்ச்சியடையும். தொழிலாளர்களுக்கு வாழ்க்கைக் குப் போதுமான வருமானத்திற்கு உத்தரவாதம் அளிக்கப்படும். பாட்டாளி மக்களின் உழைப்பை யாரும் சுரண்ட முடியாது.

நான்காவது, முதலாளிகளின் லாபம் வரையறுக் கப்படும். இவ்வளவுதான் லாபம் பெறலாம் என்று திட்டம் வகுக்கப்படும். ஆகையால் யாரும் தங்கள் மனம்போனபடி லாபம் என்ற பெயரால் ஏழை மக்க ளின் இரத்தத்தை உறிஞ்ச முடியாது.

தொழிலாளர்களின் வேலைக்கு உத்தரவாதம்; அவர்கள் சம்பள நிர்ணயம்; முதலாளிகளின் லாபக் கொள்ளைக் கட்டுப்பாடு; இவைகள் எல்லாம் ஏற் பட்டால் சுரண்டல் பூதம் மாண்டு மடிந்து போகும்.

ஐந்தாவது, ஒவ்வொரு மொழிவாரி மாகாணத்தி லும் அந்தந்த மாகாண மக்களுக்குத் தான் வியாபா ரம்—கைத்தொழில் முதலியவைகளை நடத்துவதில் முதல் உரிமையும், பாதுகாப்பும் அளிக்கப்படும்.

சமஸ்தானங்கள் கலைக்கப்பட்டு, நிலப்பிரபுத்துவம் ஒழிக்கப்பட்டு, அந்நியநாட்டு மூலதனங்களும் தொழில் களும் மாகாண அரசாங்கத்தின் வசமாக்கப்பட்டு, முத லாளிகளின் லாபக் கொள்ளையும் வரையறுக்கப்பட்டு விட் டால் சுரண்டல் நிலைத்திருக்க முடியுமா? வட நாட்டினர் தென்னாட்டைச் சுரண்டுவது, தென்னாட்டினர் வட நாட் டைச் சுரண்டுவது என்ற பேச்சுக்கே இடமில்லை. எந்த

மாகாணத்திலும் சுரண்டுவோர்க்கும் இடமில்லை; சுரண்டப்படுவோர்க்கும் இடமில்லை,

ஆகவே, ஐக்கிய தமிழகம் வேண்டுமென்போர் வடநாட்டு அடிமைகள் என்று கூறுவதிலே அர்த்தமில்லை. மொழிவாரி மாகாணங்கள் வேண்டு மென்போர்—தனித் தமிழகத்தின் எதிரிகள்—தனித்திராவிடத்தின் எதிரிகள் என்று வசை கூறுவதிலும் நீதியில்லை; நேர்மையில்லை; உண்மையும் இல்லை.

## வர்க்க பேத மற்ற ஆட்சியே

ஒவ்வொரு மொழியினரும் கேட்பது எத்தகைய சுரண்டலு மற்ற தனி மாகாண அமைப்புத் தான்.

இன்றுள்ள மத்திய அரசாங்கம் சுரண்டல் கூட்டத்தாரால் ஆட்டிவைக்கப்படுவது; நிலப்பிரபுக்களின் தயவையும், அந்நிய நாட்டினரின் தயவையும் நாடி நிற்பது.

எந்த அந்நிய நாட்டுடனும் நாங்கள் சேரமாட்டோம்! நடுநிலைமையிலேயே இருப்போம்! என்று இந்திய அரசாங்கம் பறைசாற்றுகிறது. ஆனால் ஏகாதிபத்திய வெறி கொண்ட பிரிட்டன், அமெரிக்கா, அவைகளை ஆதரிக்கும் நாடுகள் ஆகியவைகளுடன் தான் அதிகமான ஏற்றுமதி இறக்குமதி வியாபாரங்கள் செய்து வருகின்றது. இந்தப் பிற்போக்கு நாடுகளுடனேயே இந்திய அரசாங்கம் அதிக்மாக உறவாடிக் கொண்டிருக்கிறது. இந்திய அரசாங்கத்தின் இத்தகைய பிறபோக்குத் தன்மையை ஒவ்வொரு மொழிவாரி மக்களும் வெறுக்கின்றனர். இந்திய அரசாங்கத்தின் இன்றைய போக்கினால் இந்தியா முன்னேற முடியாது; இந்தியாவிலே வர்க்கபேத மற்ற சமுதாயம் ஏற்பட முடியாது; இதுவே பொது மக்களின் நம்பிக்கை. ஆதலால் தான் மத்திய அரசாங்கத்தின் சர்வாதிகாரத்தைச் சிதைக்க வேண்டும் என்ற நோக்கத்துடனேயே ஒவ்வொரு மொழிவாரி மக்களும் சுய நிர்ணய உரிமையோடு கூடிய தனி மாகாணம் கோருகின்றனர்.

திராவிட இயக்கத்தாரின் திராவிட நாட்டுக் கோரிக்கையிலும் இந்தத் தத்துவம் அடங்கியிருக்கின்றது. தமி

முரசுக் கிளர்ச்சிக்காரர்களின் தமிழகக் கோரிக்கையிலும் இந்தத் தத்துவம் அமைந்திருக்கிறது. தனித் தமிழகம் வேண்டுவோரின் கோரிக்கையிலும் இந்தத் தத்துவம் மறைந்திருக்கிறது.

மொழிவாரி மாகாணம் கேட்கும், சோஷலிஸ்டுகள், பிரஜா கட்சியினர், முன்னேற்றக் கட்சியினர் எல்லோருடைய கோரிக்கையும் மேலே கூறிய தத்துவத்தை அடிப்படையாகக் கொண்டதுதான்.

## குறைகூறிக் கொள்ள வேண்டாம்

ஆகையால் மொழிவாரி மாகாணம்—தனி நாடு கேட்போர் யாரும் ஒருவரை ஒருவர் கூறை கூற வேண்டிய அவசியமே யில்லை. ஒருவரை ஒருவர் சந்தேகிக்க வேண்டியதும் இல்லை. எல்லோரும் ஒன்று பட்டுக் கிளர்ச்சி செய்ய வேண்டியது தான் மொழிவாரி மாகாணத்தை அடைவதற்கான வழி.

இத்தகைய கிளர்ச்சியிலே ஈடுபடாமல் ஒதுங்கி நிற்போர்—ஐக்கிய தமிழகக் கிளர்ச்சிக்காரர்களின் மீது வசை மொழி பாடுவோர்—ஐக்கிய தமிழகக் கிளர்ச்சி முயற்சிக்கு இடையூறு செய்வோர் யாராயிருந்தாலும சரி! அவர்கள் உண்மையில் மாகாணப் பிரிவினையை விரும்புகிறவர்களா என்பதைப்பற்றி சந்தேகிக்கத்தான் வேண்டும்.

ஒன்றுபட்ட கிளர்ச்சிதான் வெற்றிதரும் என்ற உண்மையை உணர்ந்தவர்கள் ஐக்கிய தமிழகக் கிளர்ச்சியில் ஒன்றுபட்ட தமிழகக் கிளர்ச்சியில்—புதிய தமிழகக் கிளர்ச்சியில் பங்கெடுத்துக் கொள்ளாமல் ஒதுங்கி நிற்க மாட்டார்கள்.

தமிழர்கள் எந்தக் கட்சியிலே யிருந்தாலும் சரி அவர்கள் ஐக்கிய தமிழகக் கிளர்ச்சியிலே பங்கு கொள்ளவேண்டும். மற்ற மொழிவாரி மாகாணக் கிளர்ச்சியினருக்கும் ஆதரவு காட்ட வேண்டும். மகாராஷ்டிரர்களின் கிளர்ச்சியை—குஜராத்திகளின் கிளர்ச்சியை—தெலுங்கர்களின் கிளர்ச்சியை—கர்நாடகர்களின் கிளர்ச்சியை—கேரளர்களின்

கிளர்ச்சியைத் தமிழர்களும் ஆதரிக்க வேண்டும்; தமிழர்களின் கிளர்ச்சியை அவர்களும் ஆதரிக்க இதுதான் வழி. இது போன்ற ஒன்றுபட்ட கிளர்ச்சியினுல் தான் மொழி வாரி மாகாணக் கிளர்ச்சி வெற்றி பெற முடியும்.

# 10. மத்திய அரசாங்கம் வேண்டுமா?

## தனித்து நின்ருல் என்ன?

ஒவ்வொரு மொழிவாரி மாகாணமும் சுயநிர்ணய உரிமை பெற்று ஆட்சி புரியுமானுல் மத்திய அரசாங்கந்தான் எதற்கு? அந்த மத்திய அரசாங்கம் மாகாணங்களுக்கெல்லாம் ஒரு சுமை தானே? அந்த மாகாணங்கள் மத்திய அரசாங்கத்திலிருந்து பிரிந்து—வெட்டிக் கொண்டு, தனித் தனியாக இயங்கினுல் என்ன? சுயநிர்ணய உரிமையுள்ள தனி மாகாணம் என்று சொல்லிவிட்டுப் பிறகு மத்திய அரசாங்கத்தின் கீழ் இருப்பது என்பது அடிமைப் புத்தி அல்லவா? என்று பல கேள்விகளை வாரி வீசலாம்.

இக்கேள்விகளைக் கேட்பவர்கள் இன்னும் சிலகேள்விகளையும் கேட்கின்றனர். அல்லது கேட்கலாம்.

ஐரோப்பாவிலே பல சிறு சிறு நாடுகள் தனித் தனி அரசுகளாக இல்லையா? அந்தச் சிறு சிறு தனித்தனி அரசுகள் பெரும்பாலும் மொழியையும் இனத்தையும் அடிப்படையாகக் கொண்டு அமைந்த நாடுகள் தானே? அவைகளைப் போலவே நாமும் ஏன் சிறு சிறு தனித் தனி நாடுகளாக இருக்கமுடியாது?

ஆயிரக் கணக்கான ஆண்டுகளாக நமது நாடு ஐம்பத்தாறு தேசங்களாக இருக்க வில்லையா? அந்த ஐம்பத்தாறு தேசங்களும் தனித் தனி வல்லரசுகளாகத் தானே இருந்தன?

தமிழ் நாடு மட்டும் சேரநாடு, பாண்டிய நாடு, சோழ நாடு என்று மூன்று தனித்தனி வல்லரசு நாடுகளாக ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக இருக்கவில்லையா?

ஆகையால் மத்திய அரசாங்கம் ஒன்று வேண்டும் என்பது பொருளற்ற பேச்சு. தமிழ் நாட்டை—திராவிட நாட்டை வட நாட்டார் கைப்பிடியில் அடக்கிவைப்பதற்காகவே மத்திய அரசாங்கம் வேண்டும் என்று கூறுகின்றனர். இவர்கள் திராவிடர்களுக்கு—தமிழர்களுக்கு நன்மை செய்கிறவர்கள் அல்லர்; திராவிடர் சமுதாயத்தின் துரோகிகள்; தமிழர் சமுதாயத்தின் துரோகிகள்; என்று ஆத்திரத்துடன் பேசலாம் சிலர்.

மத்திய அரசாங்கம் ஏன் என்பது பற்றி இவர்களுக்கு நாம் தெளிவுபடுத்தியாக வேண்டும். "மத்திய அரசாங்கத்தின் நாற்றமே கூடாது; அந்தப் பிணைப்பை வெட்டிக் கொண்டே தீர வேண்டும்" என்று பிடிவாதம் பேசினால் எவ்வளவு சமாதானம் கூறினாலும் அவர்களை மாற்ற முடியாது. வாதத்திற்கு மருந்துண்டு; அதைக்கொடுத்து மக்கள் உடம்பில் ஏற்பட்ட வாத நோயைக் குணப்படுத்த முடியும். ஆனால் பிடிவாதத்திற்கு மருந்தில்லை. அது எந்த மருந்தாலும் குணப்படுத்த முடியாது. இது அனைவரும் அறிந்த செய்தி. ஆயினும் தனியாட்சிக்காரர்களின் கேள்விகள் சரியல்ல என்பதைப் பொது மக்கள் தெரிந்து கொள்ள வேண்டும் அல்லவா? அதற்காகவே சமாதானம் கூறுகின்றோம்.

## சர்வதேச சங்கம்

ஐரோப்பிய நாடுகளுக்கு எப்பொழுதுமே அந்நிய நாட்டுப் படையெடுப்புப் பயம் இருந்ததில்லை. ஆகையால் அவர்களுக்கு ஒரு மத்திய அரசாங்கம் வேண்டுமென்ற அவசியம் ஏற்படவில்லை. அப்படியிருந்தும் அவர்களுக்குள்ளேயே அடிக்கடி சண்டை சச்சரவுகள் ஏற்பட்டதைப் பார்த்தோம். தனித்தனி நாடுகளுக்குள் ஏற்பட்ட சச்சரவுகள் தான் உலக யுத்தமாக மாறியதையும் கண்டோம்.

ஐரோப்பிய சரித்திரம் பெரும்பாலும் யுத்த சரித்திர மாகத்தான் காணப்படுகிறது. இதற்குக் காரணம் என்ன? அவர்களுக்குள் சரியான உடன்படிக்கையில்லா மல் இருந்தது; உடன்படிக்கையைச் சில நாடுகள் மீறி நடந்தது; உடன்படிக்கையை மீருமல் பாதுகாப்பதற்கு ஒரு மத்திய ஸ்தாபனம் இல்லாமல் இருந்தது. இவைகள் தான் யுத்தத்திற்குக் காரணம்.

யுத்தத்தைத் தடுக்கவும், பல நாடுகளுக்குள் சமாதா னம் நிலவவுமே முதல் மகா யுத்தத்திற்குப்பிறகு சர்வதேச சங்கம் என்று ஒன்று ஏற்பட்டது. ஏறக் குறைய இது ஒரு மத்திய அரசாங்கத்தைப் போன்றது தான். இந்தச் சர்வதேச சங்கம் பாரபட்சமின்றி நடந்துகொள்ளாத காரணத்தால் உடைந்து விட்டது. இது உடைந் ததனுல் தான் இரண்டாவது யுத்தம் ஏற்பட்டது. இரண்டாவது யுத்தத்தின் முடிவிலும் உலக சமா தானத்தை நோக்கமாகக் கொண்டு ஐக்கிய நாடுகள் சங்கம் ஏற்பட்டிருக்கிறது. இதுவும் இன்று சரியாக நடைபெறவில்லை என்பதே பலர் கருத்து. பணக்கார நாடுகளே இந்தச் சங்கத்தில் ஆதிக்கம் செலுத்துகின் றன. உலக மத்திய அரசாங்கம் என்பதற்குப் பதிலாக ஏற்பட்டிருக்கும் இந்த ஐ. நா, சங்கமும் சரியான வழியில் நடந்துகொள்ளாவிட்டால் உடைந்து விடும். பழய சர்வதேச சங்கத்தின் கதியை அடைந்து விடும். இந்த நிலைமை ஏற்பட்டால் மூன்ருவது உலகப் போர் தோன்றி மீண்டும் உலகத்தை அல்லோல கல்லோலப்படுத்திவிடும். இதில் ஐயமில்லை,

ஐரோப்பாவில் அடிக்கடி சண்டை நடந்ததற் குக் காரணம், அந்த நாடுகளுக்குள் ஏற்படும் வழக்கு களைத் தீர்க்க ஒரு மத்திய ஸ்தாபனம் இல்லாமல் இருந்தது தான். இந்த உண்மையை அறிந்த பிறகு தான் அவர்கள் தங்கள் நன்மைக்காகவே முதல் பெரும் போருக்குப் பின் சர்வதேச சங்கத்தை நிறுவி னர்; அது கலைந்த பின் இரண்டாம் பெரும் போருக் குப் பின் ஐ, நா. வை நிறுவினர். இந்த உண் மையை மறந்துவிடக்கூடாது.

## உரிமை நிலைக்க வேண்டாமா?

இந்தியா பண்டைக் காலத்தில் பல நாடுகளாகப் பிரிந்து கிடந்ததனுல் தான் அந்நியர்களின் படையெடுப் புக்கு ஆளாயிற்று. அந்நியர்கள் இந்நாட்டை எளிதிலே கைப்பற்ற முடிந்தது.

இந்நாட்டு மன்னர்கள் ஒருவரோடு ஒருவர் ஒற்றுமை யின்றிப் போரிட்டுக் கொண்டிருந்தனர். இவர்களே இந் நாட்டின் மீது படை யெடுத்து வந்த அன்னியர்களுக்குப் போட்டி போட்டுக் கொண்டு உதவி செய்தனர். தமது பக்கத்து நாட்டு மன்னனைப் பழி வாங்குவதற்கு அந்நிய நாட்டானுக்கு உதவி செய்தனர், இத்தகைய துரோகச் செயல்கள் நிறைந்தவைகளே பிரிட்டிஷார் காலம் வரையி லும் உள்ள இந்திய சரித்திரம்.

பழய இந்திய நாட்டு மன்னர்களுக்குள் ஒற்றுமை யும், அவர்களுக்குள் ஏற்படும் வழக்குகளைத் தீர்த்து வைக்க எந்தப் பெயராலோ ஒரு மத்திய ஸ்தாபனமும் இருந்திருந்தால் இந்நாட்டில் அந்நியர் புகுந்து ஆதிக்கம் செலுத்தியிருக்கமுடியுமா?

தமிழ் நாட்டை முடியுடை மூவேந்தர்கள் தனித் தனி வல்லரசுகளாக இருந்து ஆட்சி செய்ததாகச் சரித்திரம் படிக்கிறோம். தமிழ் இலக்கியங்களும் இந்த வரலாற்றைக் கூறுகின்றன. ஆனுல் முடியுடை மூவேந்தர்களான சேர, சோழ, பாண்டியர்கள் ஆண்ட காலத்தில் தமிழ் நாட்டின் நிலைமை எப்படி யிருந்தது என்பதை ஆராய்ந்து பார்த்தால் உண்மை விளங்கும்.

சேர, சோழ, பாண்டியர்கள் தங்களுக்குள் சண்டை யின்றி ஒன்றுபட்டு வாழ்ந்த காலம் மிகக் குறைந்த காலமே யாகும். பெரும்பாலும் அவர்கள் ஒருவர் மீது ஒருவர் பகைமையும், பொருமையும் கொண்டு போர்செய்து கொண்டிருந்த காலந்தான் மிகுதி. இந்த உண்மையைக் காண வேறு சரித்திரச் சான்றுகளை வருந்தித் தேடவேண் டிய தில்லை. புற நானூறு, பதிற்றுப் பத்து, பத்துப் பாட்டுப் போன்ற சங்க இலக்கியங்களே இதற்கு ஆதா வளிப்பவை.

தமிழ் நாடு சிறு சிறு துண்டு துண்டு அரசாங்கங்களாகப் பிரியாமல் ஒரே ஆட்சியின் கீழ் இருந்திருக்குமானல் உள் நாட்டுப போர்களால் தமிழ் மக்கள் துன்புறிருக்கவே மாட்டார்கள். அல்லது சேர, சோழ, பாண்டியர் களுக்குள், பிணக்கோ பூசலோ ஏற்படும் போது, அதை வளர வொட்டாமல் சமாதானப் படுத்துவதற்கான ஒரு பொதுக் கழகம் அக்காலத்தில் இருந்திருந்தால் மூவேந்தர்களுக்குள் சண்டை சச்சரவே நேர்ந்திருக்காது. தமிழ் நாட்டில் சமாதானமே நிலவியிருந்திருக்கும். தமிழ் இலக்கிய ஆராய்ச்சியுடையோர் இவ்வுண்மையை மறுக்க மாட்டார்கள்.

ஐரோப்பாவில் தனித்தனி நாடுகள் இருப்பதைப் போல இந்தியாவிலும் ஏன் தனித்தனி நாடுகள் இருக்கக் கூடாது என்று கேட்கலாம். அத்தகைய தனித் தனி நாடு இருக்கலாம். இதை மறுப்பார் எவருமில்லை. ஆனல் அந்தத் தனித்தனிநாடுகளின் உரிமை நிலைத்துநிற்கவேண்டும். இந்தியாவுக்கு அந்நிய நாட்டுப் படையெடுப்பு பயம் இன்னும் இருக்கிறது. இந்தியா ஒன்ருக நின்று தற் பாதுகாப்புக்கான ஏற்பாடுகளைச் செய்து கொண்டால் தான் அந்நிய நாட்டினர் படை யெடுப்பைத் தடுக்க முடியும். அந்நியர் படையெடுத்தாலும் சமாளிக்க முடியும்.

மொழிவாரி மாகாணங்கள் அனைத்தும் சேர்ந்து தங்கள் பாதுகாப்புக்காக ஏற்படுத்திக் கொள்ளுகிற ஒரு இந்திய யூனியன்—அதாவது மத்திய அரசாங்கம் இல்லையென்று வைத்துக் கொள்ளுவோம். இந்தியாவின் இன்றைய அமைப்புக்கு ஏற்றபடி காஷ்மீரை உள்ளிட்ட தனித்தனி பதினைந்து அரசாங்கங்கள் ஆட்சி புரிகின்றன என்று வைத்துக் கொள்ளுவோம். இந்தப் பதினைந்து மாகாணங்களும் எல்லைப்புற சம்பந்த மாகவும், வியாபார சம்பந்தமாகவும், அந்நிய நாட்டுப் படையெடுப்பு சம்பந்தமாகவும் பல ஒப்பந்தங்கள் செய்து கொள்ளுவதாகவும் வைத்துக் கொள்ளுவோம்.

இந்த நிலையிலும் ஒரு மாகாணம் தான் செய்து கொண்ட ஒப்பந்தத்தை மீறி நடந்தால் என்ன செய்வது? அதை யார் கேட்பது? அந்நியப் படையெடுப்பு நேரும்

போது சில மாகாணங்கள் தேசத்துரோகமாக நடந்து கொண்டால் அதற்கென்ன செய்வது? அதை யார் கேட்பது? தர்மத்திற்கும் நியாயத்திற்கும் கட்டுப்பட்டு ஒவ்வொரு மாகாணமும் நடந்து கொண்டால் தான் அவைகளுக்குள் ஏற்பட்ட ஒப்பந்தங்களுக்கு மதிப்புண்டு, ஒவ்வொரு மாகாணங்களும், பேராசைக்கும் சுயநலத்திற்கும் ஆளாகி ஒப்பந்தங்களை மீறினல் அது இந்திய நாட்டுக்கே ஆபத்தல்லவா? இந்தியா ஐம்பத்தாறு தேசங்களாக் இருந்த காலத்தில் ஏற்பட்ட கதி மீண்டும் ஏற்படாமல் இருக்கும் என்பதற்கு என்ன உத்தரவாதம்?

## நாட்டின் பாதுகாப்பு

எல்லா வளங்களும் நிறைந்த நாடு இந்தியா. மற்ற நாட்டை எதிர் பார்த்து வாழ வேண்டிய நிலைமை இந்தியாவுக்கு இல்லை. மக்கள் வாழ்க்கைக்குத் தேவையான பண்டங்களை யெல்லாம் உற்பத்தி செய்து கொள்ளுவதற்கு வேண்டிய மூலப்பொருள்கள் எல்லாம் இந்தியாவில் இருக்கின்றன. இந்நாட்டின் ஆட்சி உண்மையான மக்கள் ஆட்சியாக மட்டும் இருந்தால் உலக மக்களுக்கு வேண்டிய பண்டங்களை யெல்லாம் இந்தியாவிலேயே செய்து குவித்து விட முடியும்.

நீர்வளம் நிலவளம் அற்ற நாட்டில் வாழ்வோர் இந்தியா போன்ற செல்வங் கொழிக்கும் நாட்டைச் சுரண்டுவதற்குத் தான் திட்ட மிடுவார்கள். உயர்ந்த பொருளுக்குக் கிராக்கி அதிகம் அல்லவா? இந்தியாவின் மேல் பல அந்நியர்களின் படை யெடுப்புக்கள் நேர்ந்ததற்குக் காரணம் இந்தியாவின் செல்வக் கொழிப்பே என்பதை மறுப்பவர் யார்?

இந்தியாவின் மூன்று பக்கமும் திறந்தவெளி. மூன்று பக்கமும் கடற்கரை. இவ்வளவு பெரிய நாட்டைப் பாதுகாப்பதற்குப் பலமான ஏற்பாடு வேண்டும். உதாரணமாக ஐக்கிய கேரளத்தை எடுத்துக் கொள்ளுவோம். ஐக்கிய கேரளம் ஒரு சிறு ராஜயமாகத்தான் இருக்கும். அது தனது பாதுகாவலுக்காக ஒரு பெரிய படையை வைத்துச் சமாளிக்க முடியுமா?

தமிழ் நாட்டையே எடுத்துக் கொள்ளுவோம்! தூத்துக் குடியிலிருந்து சென்னை வரையிலும் உள்ள நீண்ட கடற்கரைப் பகுதியைக் காப்பாற்றுவதற்கு எவ்வளவு படை பலம வேண்டும்? இதற்கு வேண்டிய தரைப்படை கடற்படை, விமானப் படைகளை வைத்துக் காப்பாற்றுவ தென்றால் அதற்கு எவ்வளவு செலவாகும்? நாட்டின் வருமானத்தில் பெரும் பகுதியை இத்தகைய படைப் பாதுகாப்புக்குச் செலவழித்தால், பொது மக்களின் வாழ்க்கையை உயர்த்துவதற்குப் பணம் செலவழிக்க முடியுமா? முடியாது.

இதைப் போலவே ஒவ்வொரு சிறு சிறு ராஜ்யங்களும் படைகளைப் பெருக்கிப் பாது காத்துக்கொள்ள முடியாது.

> **முதன்மையாக இந்தியாவின் பாதுகாப்புக்காகத் தான் மத்திய 'அரசாங்கம் வேண்டும் என்பது. இந்தியாவின் பாதுகாப்பு; அந்நிய நாட்டு உறவு; உள்நாட்டு அமைதி, ஆகிய மூன்றே காரியங்கள் தான் மத்திய அரசாங்கத்தின் முதன்மை யான வேலையாக இருக்கும்.** இவைகளிலும் மத்திய அரசாங்கத்தின் அல்லது இந்திய யூனியனின் அதிகாரம் சர்வாதிகாரமாக இல்லாமல், மாகாண அரசாங்கங்களின் சம்மதம் பெற்ற ஜனநாயகமாகத் தான் இருக்கும்

இத்தகைய இந்திய யூனிடனுடன் தான்—இத்தகைய மத்திய அரசாங்கத்துடன் தான் மொழிவாரி மாகாணங்கள் இணைந்திருக்க வேண்டு மென்பது இந் நாட்டு மக்களின் கோரிக்கை—இந்தக் கோரிக்கையை ஆதரிப்பது தான் புதிய —ஐக்கிய தமிழகப் போராட்டமும், ஆகவே புதிய—ஐக்கிய தமிழகம் மேலே கூறியபடி அமையும் இந்திய யூனியனோடு இணைந்திருப்பதால் தமிழகத்திற்கு என்ன நஷ்டம்? இத்தகைய ஐக்கிய தமிழகத்தை விரும்புவோர் தான் பாதுகாப்புடன்—சுதந்தரத்துடன் என்றும நிலைத்திருக்கக் கூடிய புதிய—ஐக்கிய தமிழகத்தை விரும்புகிறவர்கள். இவர்கள் தான் தமிழர் சமுதாயமும், மற்ற சமுதாயங்களும் வர்க்கபேத மற்ற சமுதாயங்களாக வாழ வேண்டும் என்று விரும்புகிறவர்கள்.

இவர்கள் யாருக்கும் யாரையும் அடிமைப்படுத்த விரும்புகிறவர்கள் அல்லர்; யாருக்கும் யாரையும் காட்டிக் கொடுக்க விரும்புகிறவர்களும் அல்லர்; இந்த உண்மையை மறுக்க முடியாது.

# 11. புதிய தமிழகத்தில் மக்கள் உரிமை

## எல்லோரும் சமம்

**பு**திய தமிழகத்திலே குடி உரிமை-அதாவது பிரஜா உரிமை பெற்றவர்கள் அனைவரும் சமமாகவே கருதப்படுவார்கள்.

தமிழைத் தாய் மொழியாகக் கொண்டவர்கள் அனைவரும் தமிழர்கள். தமிழ் நாட்டின் முன்னேற்றத்திலே கவலை கொண்டவர்கள் எல்லோரும் தமிழர்கள். தமிழர்கலையையும், பண்பாட்டையும் ஒப்புக்கொள்ளுகிறவர்கள், இவைகளை வளர்க்கப் பாடுபடுகிறவர்கள் அனைவரும் தமிழர்கள். விவசாயி—பாட்டாளி மக்களின் ஆட்சியே தமிழ் நாட்டு ஆட்சியாக விளங்கவேண்டும் என்பதை முழுமனதுடன் ஒப்புக்கொண்டு இதற்காகப் பணியாற்றுகிறவர்கள் எல்லோரும் தமிழர்கள். இவர்கள் தமிழ் நாட்டில் குடியுரிமை பெற்றுத் தமிழர்களாகவே வாழ்வார்கள். இவர்களிடையே சாதி, மதம் காரணமாக எவ்வித வேற்றுமையும் பாராட்டப்படமாட்டாது.

தமிழுக்கும் தமிழர் வாழ்வுக்கும் கேடு சூழ்பவர்கள் யாராயிருந்தாலும் அவர்கள் தமிழின் துரோகிகளாகவே, தமிழரின் எதிரிகளாகவே எண்ணப்படுவார்கள். அவர்களுடைய பிரஜா உரிமை பறிக்கப்படும்.

இன்றைய தமிழ் நாட்டிலே பல மதத்தினர் வாழ்கின்றனர். இவர்களுள் இந்துக்கள், முஸ்லிம்கள், கிறிஸ்துவர்கள் ஆகியோரை முதன்மையாகக் குறிப்பிடலாம். தமிழ் நாட்டில் வாழும் இந்துக்கள், முஸ்லிம்கள், கிறிஸ்துவர்கள் அனைவரும் தமிழையே தாய் மொழியாகக் கொண்டவர்கள்; தமிழ்க்கலையையோ, தமிழர் நாகரிகத்தையோ வெறுப்பவர்கள் அல்லர். இந்துக்களைப் போலவே முஸ்

லிம்களிலும், கிறிஸ்துவர்களிலும் தமிழ்ப் புலமைவாய்ந்தவர்கள் பலர் உண்டு. தமிழ்—தமிழ் மக்கள் முன்னேற்றத்திற்கு உழைபவர்கள் பலர் உண்டு. இவர்கள் மதத்தில் வேறுபட்டிருந்தாலும் இனத்தில் தமிழர்கள்தான். இவர்களுடைய மத சுதந்தரத்திற்கு தமிழகத்தில் யாதொரு ஆபத்தும் ஏற்படாது.

யாராயிருந்தாலும் தனிப்பட்ட முறையில் அவர்களுடைய மத நூல்களைப் படிக்கவும், மதக் கோட்பாடுகளைப் பின் பற்றவும், அவர்களுக்கு நம்பிக்கையுள்ள தெய்வங்களை வணங்கவும் முழு உரிமையுண்டு. இவைகள் ஒவ்வொரு மனிதரின் தனிப்பட்ட உரிமை. இந்தத் தனிப்பட்ட உரிமைகளிலே புதிய தமிழக ஆட்சி தலையிடக் கூடாது; தலையிடாது.

ஆனால் யாராயிருந்தாலும் சரி, சாதியின் பெயராலோ, மதத்தின் பெயராலோ, மற்ற மக்களைச் சுரண்டவோ, ஏமாற்றவோ, அடிமைப்படுத்தவோ புதிய தமிழகத்தில் இடமிருக்காது.

இந்து மதத்தின் பெயரால் இன்று நடைபெறும் பித்தலாட்டப் பிரசாரங்களுக்கு இடமிருக்காது. இந்து மதக் கோட்பாடுகளின் பெயரால்—புராணங்களின் பெயரால்—தெய்வங்களின் பெயரால் பொது மக்களை மூட நம்பிக்கைப் படுகுழியிலே தள்ளமுடியாது. பொது மக்களின் உழைப்பையும், செல்வத்தையும் சுரண்டமுடியாது.

முஸ்லிம்களும் மதத்தின் பெயரால் யாரையும் அடக்க முடியாது, சுரண்ட முடியாது. எந்தப் பொது மக்களின் முன்னேற்றத்தையும் தடைப்படுத்த முடியாது.

இதைப்போலவே கிறிஸ்தவர்களும் மதத்தின் பெயரால் பொது மக்களின் உழைப்பைக் கொள்ளை கொள்ள முடியாது.

சுருங்கக் கூறினல் மதச் சுரண்டல்களுக்குப் புதிய தமிழகத்திலே இடமில்லை. மதத்தின் பெயரைச் சொல்லிக்கொண்டு எவரும் உழைப்பற்ற சோம்பேறிகளாக உல்லாச வாழ்க்கை நடத்தப் புதிய தமிழகம் இடம் கொடுக்காது.

## திராவிட நாடு

திராவிட இயக்கத்தாரிலே சிலர் புதிய தமிழக இயக்கத்தைத் திராவிட நாட்டுப் பிரிவினை இயக்கத்திற்கு எதிரான இயக்கம் என்று எண்ணுகின்றனர். இப்படி எண்ணுவது சரியல்ல என்பதை அவர்களுக்கு எடுத்துக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறோம்.

"இன்றுள்ள சென்னை மாகாணம் தனியாகப் பிரிய வேண்டும். சென்னை மாகாணத்தில் தமிழர்களும், ஆந்திரர்களும், கேரளர்களும், கர்நாடர்களும் தனித்தனி ஆட்சி ஏற்படுத்திக்கொள்ளலாம் இந்த நான்கு ஆட்சியினரும் ஒன்று சேர்ந்து தங்களுக்குள் ஒரு மத்திய அரசாங்கத்தை ஏற்படுத்திக் கொள்ளவேண்டும். இத்தகைய திராவிடக் கூட்டுறவு ஆட்சிக்கே திராவிட நாடு என்று பெயர். இந்த திராவிட நாட்டுக்கும் இன்றுள்ள மத்திய அரசாங்கத்துக்கும் சிறிதும் தொடர்பே இருக்கக் கூடாது."

இதுதான் திராவிட இயக்கத்தார் கேட்கும் திராவிட நாடு. இத்தகைய திராவிட நாட்டுக் கிளர்ச்சி ஆந்திர நாட்டில் இல்லை; கன்னட நாட்டில் இல்லை; கேரள நாட்டில் இல்லை; தமிழ் நாட்டில் மட்டுந்தான் இருக்கிறது. அன்றியும ஆந்திரர்களோ, கன்னடர்களோ, கேரளர்களோ, தமிழ் நாட்டோடு இணைந்து வாழ விரும்பவில்லை; தனித் தனியாகப் பிரிந்து வாழவே விரும்புகின்றனர். ஆகையால் திராவிட இயக்கத்தார் கோரும் திராவிட நாடு எப்படி ஏற்பட முடியும?

இவ்வாறு கேட்டால் இதற்குத் திராவிட இயக்கத்தார் கூறும் விடை புதிய தமிழக அமைப்பை ஒப்புக் கொள்ளுவதாகவே இருக்கிறது.

நாங்கள் திராவிட நாடு கேட்கிறோம். திராவிட நாடு பிரிந்தாலும், அல்லது தமிழ் நாடு மட்டும் பிரிந்தாலும் சரி, அதற்குப் பெயர் திராவிட நாடு தான. தமிழர் என்றாலும் திராவிடர் என்றாலும் ஒன்றே தான், என்று கூறி விடுகின்றனர். இந்த விடைவரவேற்கத்தக்கது.

அன்றியும் திராவிட இயக்கததினர் மொழிவாரி மாகாணப் பிரிவினைக்கு எதிரிகள் அல்ல என்பதை மறந்து விடக்கூடாது. உடனடியாக எத்தகைய உருவில் மொழிவாரி மாகாணம் 'பிரிந்தாலும் அதை அவர்கள் எதிர்க்க மாட்டார்கள். வரவேற்றே தீர்வார்கள். திராவிட இயக்கத் தலைவர்கள் "மொழிவாரி மாகாணப் பிரிவினையை நாங்கள் எதிர்க்க வில்லை" என்பதை எத்தனையோ மேடைகளில் பேசியிருக்கிறார்கள். அவர்களுடைய பத்திரிகைகளிலே எழுதியிருக்கிறார்கள்.

புதிய தமிழக மக்களும், விசால ஆந்திர மக்களும், சம்யுக்த கர்நாடக மக்களும், ஐக்கிய கேரள மக்களும் தங்களுக்குள் ஒரு மத்திய அரசாங்கம் அமைத்துக் கொள்ளுவது என்று முடிவு செய்வார்களானால் அதை யாரும் தடுக்க முடியாது! அந்த மத்திய அரசாங்கம் "இன்றுள்ள வடநாட்டு மத்திய அரசாங்கத்துக்கு அடங்கியிருக்க முடியாது; சம வுரிமையோடு தான் தொடர்பு வைத்துக் கொண்டிருக்க முடியும்" என்று தீர்மானிக்குமானால் இதை எவரும் தடுக்க முடியாது.

இத்தகைய ஆட்சி அமையுமானல் இது தான் திராவிட நாடு ஆகும். இத்தகைய திராவிடநாடு ஏற்படுவதற்கு மொழிவாரி மாகாணப் பிரிவினை—புதிய தமிழக அமைப்பு எவ்வகையிலும் இடையூறல்ல என்பது திராவிட இயக்கத்தார்க்குத் தெரியாததல்ல.

ஆகையால் திராவிட நாட்டுக் கிளர்ச்சிக்குப் புதிய தமிழகக் கிளர்ச்சி எவ்வகையிலும் தடை செய்வதல்ல என்பதை அறிய வேண்டும்.

## மொழியுரிமை

புதிய தமிழகத்தில் தமிழ்மொழி தான் அரசாங்க மொழி. புதிய தமிழகத்தில் வாழும் குடி மக்கள் அனைவரும் தமிழ் மொழியைக் கட்டாயமாகப் படித்தே தீரவேண்டும். தமிழ் தெரியாதவர்களுக்குக் குடி மக்களுக்குரிய உரிமைகூட வழங்கப்பட மாட்டாது. அவர்கள் வேற்று நாட்டுக் குடிமக்களாகவே கருதப்படுவார்கள்.

இதைத் தவிர மக்கள் விருப்பத்திற்கு மாருக எந்த மொழியும் கட்டாயப்படுத்தப்பட மாட்டாது. இன்றிருப்பது போன்ற கட்டாய இந்தித் திணிப்புக்கு இடமே இராது. மக்கள் விரும்பினுல் எந்த மொழியையும் கற்கலாம்.

ஆகவே புதிய தமிழகத்தில் ஏமாற்றுக்காரர்களுக்கு இடமில்லை. சுரண்டல் கொள்ளைக்காரர்களுக்கு வழியில்லை. பிறர் உழைப்பில் வாழும் பித்தலாட்டக்காரர்களுக்கு வாழ்வில்லை. பொது மக்களை அடக்கி நசுக்கிக் கொண்டிருக்கும் அக்கிரமக்காரர்கள் ஆதிக்கம் செலுத்த முடியாது. இதைத்தவிர தனிப்பட்ட எந்த மக்களின் மத, கலை, நாகரிகக் கொள்கைகளுக்கும் எவ்விதத் தடையும் ஏற்படாது.

# 12. நமது குறிக்கோள் என்ன?

### வெறும் பிரிவினையால் விளையும் பலன்

இதுவவரையிலும் கூறிய வைகளைக் கொண்டு மொழி வாரி மாகாணங்களின் முக்கியத்துவத்தைஉணர்ந்து கொண்டிருக்கலாம். மொழிவாரி மாகாணங்களின் முதன்மையான குறிக்கோள் என்ன? எனபதை இப்பகுதியிலே முடிவாகத் தெரிந்து கொள்ளுவோம்.

மொழிவாரி மாகாணங்கள் எப்படி அமைக்கப்பட வேண்டும் என்பதில் இருவகையான கருத்துடையவர்கள் இருக்கின்றனர்.

1. அரசாங்க நடவடிக்கைகள் எல்லாம் மக்களுக்குத் தெரிந்த மொழியிலே நடைபெற வேண்டும். இதற்கேற்றவாறு தனித் தனி மொழி வழங்கும் வட்டாரங்களைத் தனித் தனி மொழிவாரி மாகாணங்களாகப் பிரித்து விட்டால் போதும்.

2. இந்த மொழிவாரி மாகாணங்கள் மத்திய அரசாங்கத்தின் கீழ் இன்றுள்ளது போலவே இருந்து வரலாம்.

3. பி. பிரிவு ராஜயங்களான ராஜப் பிரமுகர்களைக் கொண்ட சமஸ்தானங்கள் அப்படியே இருந்து வரலாம்.

அவைகளைக் கலைத்து மொழிவாரி மாகாணங்களுடன் சேர்க்க வேண்டும் என்ற கட்டாயம் இப்பொழுது இல்லை

4. நிலப் பிரபுத்துவ ஒழிப்பைப்பற்றியோ, அன்னிய நாட்டு மூலதனத்தைப் பறி முதல் செய்வதைப்பற்றியோ இப்பொழுது கிளப்ப வேண்டாம். மொழிவாரி மாகாணம் பிரிக்கப்பட்ட பிறகு இதைப்பற்றி முடிவு செய்து கொள்ள லாம்.

5. ஏ. பிரிவு ராஜ்யங்களை மட்டும் மொழிவாரி மாகா ணங்களாகப் பிரித்தால் போதுமானது. (ஏ பிரிவு ராஜ் யங்கள் என்ருல் இன்று மத்திய அரசாங்கத்தால் நிய மனம் செய்யப்படும் கவர்னர்களின் கீழ் இருந்து வரும் மாகாணங்கள்.)

இத்தகைய மொழிவாரி மாகாணப் பிரிவினையைக் கோருகின்றவர் ஒரு வகையினர். காங்கிரசுக் காரர்கள் வாக்களித்த மொழிவாரி மாகாண அமைப்பும் இது தான். பெரும்பாலும் காங்கிரசுக்காரர்கள் வேண்டும் மொழிவாரி மாகாணமும் இதுதான்.

“நாங்கள் கேட்கும் மொழிவாரி மாகாணத்தில்—இன வாரி மாகாணத்தில் ஒரு ஜில்லா அடங்கி யிருந்தாலும் போதும். அது மத்திய அரசாங்கத்துடன் இணைந்திருக் கக் கூடாது. சுதந்தரத் தனி நாடாக இருக்கவேண்டும் இது தான் எங்கள் கோரிக்கை” என்போரும் உண்டு.

இந்த முறையில் மொழிவாரி மாகாணமோ, தனி நாடோ பிரிககப்பட்டால் அதனல் பொது மக்கள் அடை யும் பயன் ஒன்றுமே யில்லை. இத்தகைய மாகாணங் களிலே ஜனநாயக ஆட்சி ஏற்பட முடியாது: மக்கள் ஆட்சி மலர இடமில்லை.

இத்தகைய மாகாணங்களிலே இரக்கமற்ற நிலப் பிர புக்கள், பிற்போக்கு முதலாளிகள், வெறிபிடித்த மதவாதி கள், தன்னலங்கொண்ட வகுப்பு வாதிகள் ஆகியோரின் கூட்டு முன்னணிதான் கொடுங்கோலாட்சி நடத்தும். இந்தியாவிலே இன்று ஆதிக்கம் பெற்றுள்ள அன்னிய நாட்டு முதலாளிகளால் ஆட்டி வைக்கப்படும் பதுமைக ளாகவே இந்த மாகாணங்கள் இருக்கும்.

மொழிவெறி—அல்லது இனவெறி ஒன்றையே அடிப்படையாகக்கொண்ட வெறும் நாட்டுப் பிரிவினை முற்போக்குச் சக்திகளை நசுக்குவதற்கே பயன்படும். பாட்டாளி, விவசாயி, ஏழை மக்களின் கிளர்ச்சிகளைப் பாழாக்குவதற்கே பயன்படும். சுருங்கக் கூறினால் ஜனநாயக சக்திகளை ஒடுக்கிப் பண நாயகத்தை நிலை நிறுத்தத்தான் இந்தப் பிரிவினை பயன்படும். இதற்குப் பாக்கிஸ்தான் ஆட்சியே போதுமான சான்றாகும்.

## மக்கள் விரும்பும் மாகாணம்

ஆகையால் பொது மக்கள் கேட்பது இத்தகைய வறட்டு மாகாணப் பிரிவினையல்ல. பொது மக்கள்கேட்கும் மொழிவாரி மாகாணம் இதற்கு முற்றிலும் மாறுபட்டது.

1. எந்த வகையிலும் ஒரு மொழி பேசும் மக்கள் மற்றொரு மொழி பேசும் மக்களின்மேல் ஆதிக்கம் செலுத்தக்கூடாது. அதாவது ஒரு தேசிய இனம் மற்றொரு தேசிய இனத்தை அடக்கி ஆளக்கூடாது; சுரண்டவும் கூடாது.

2. துண்டு துண்டாக, வேறு வேறு மொழியினரின் ஆதிக்கத்தின் கீழ் பிரிந்து கிடக்கும் ஒரே மொழி பேசும் மக்களையும் அவர்கள் வாழும் வட்டாரங்களையும் ஒன்றாக இணைக்கும் மொழிவாரி மாகாணங்கள் ஏற்படவேண்டும்.

3. ராஜப் பிரமுகர்களின் கீழுள்ள பி. பிரிவு ராஜயங்கள், அல்லது சமஸ்தானங்கள் கலைக்கப்பட்டு, அவைகள் மொழிவாரி மாகாணங்களுடன் இணைக்கப் படவேண்டும். சி. பிரிவு ராஜயங்களும் மறைந்தாக வேண்டும்.

4. நிலப் பிரபுத்துவ முறை அடியோடு ஒழிக்கப்படவேண்டும்.

5. இந்த நாட்டின் செல்வத்தைச் சுரண்டிக் கொண்டிருக்கும் அன்னிய நாட்டு மூலதனங்களையெல்லாம் கைமாறு தராமல் பறி முதல் செய்யவேண்டும்.

6. மொழிவாரி மாகாணங்களிலே நிலப் பிரபுத்துவ—முதலாளித்துவ ஆட்சி ஏற்பட இடமில்லாமல் முழு ஜனநாயக ஆட்சி நிலவவேண்டும்.

7. மொழிவாரி மாகாணங்களின் ஆட்சி மக்களுக்குப் புரியும மொழியிலே, மக்கள் நன்மைக்காகவே, மக்களுடைய ஆட்சியாகவே நடைபெற வேண்டும்.

8, ஆண்டான் ;—அடிமை ; முதலாளி—தொழிலாளி ; ஏழை—பணக்காரன் ; உயர்ந்தசாதி—தாழ்ந்த சாதி ; படித்தவன்—படிக்காதவன் ; ஆண் உயர்வு—பெண் தாழ்வு ; என்ற வேற்றுமையில்லாத சம தர்மச் சமுதாயம் ஏற்படவேண்டும என்பதே மொழிவாரி மாகாணங்களின் நோக்கம்.

9. சுய நிர்ணய உரிமையோடு இந்திய யூனியனுடன் கூட்டுறவு கொண்டு சம உரிமையுடன் இந்த மொழிவாரி மாகாணங்கள் இயங்கவேண்டும்.

இவைபோன்ற ஜனநாயகத் தத்துவங்களை அடிப்படையாகக் கொண்ட மொழிவாரி மாகாணங்கள்தான் மக்கள் கேட்கும் மொழிவாரி மாகாணங்கள்.

## ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு

தேசிய இனவாரி மாகாணம் என்றாலும் மொழிவாரி மாகாணம் என்றாலும் ஒன்றேதான். இந்நாட்டில் இன்று ஒவ்வொரு இனத்தினரும் அவரவர் பேசும் மொழியினாலேயே அழைக்கப்படுகின்றனர். தமிழ் பேசுவோர் தமிழர் ; தெலுங்கு பேசுவோர் தெலுங்கர் ; மலையாளம் பேசுவோர் மலையாளிகள் ; கன்னடம் பேசுவோர் கன்னடியர் ; மராட்டி பேசுவோர் மராட்டியர் ; குஜராத்தி பேசுவோர் குஜராத்தியர் ; ஒரியா பேசுவோர் ஒரியர் ; வங்காளம் பேசுவோர் வங்காளிகள் ; இந்த நாட்டில் மட்டும் அல்ல ; மற்ற நாடுகளிலும் பெரும்பாலும் இப்படித்தான் மொழியின் பெயரே மக்கள் இனத்தைக் குறிக்கும் பெயராக வழங்குவதைக் காணலாம். ஒவ்வொரு மொழி பேசுவோரையும் ஒவ்வொரு இனத்தினராகக் கொள்ளுவதுதான் நடைமுறைக்கும் ஏற்றதாகும். நடைமுறையில் உள்ளதுமாகும்.

தேசிய இனத்தைப்பற்றி முடிவுகட்ட பழம் புராணங்களைத் துருவிக்கொண்டிருக்க வேண்டாம்.

தமிழ் நாட்டில் இன்று வளர்ந்துவரும் வறுமை ஒழிய வேண்டுமானால் புதிய ஐக்கிய சுய நிர்ணய அதிகாரம் படைத்ததமிழகம் தோன்றியாகவேணடும். தமிழ் நாட்டுத் தொழிலாளர்களின் துயரந் தீரவேண்டுமானால், தமிழ் நாட்டுப் பெண்களின் அடிமைத்தனை ஒழியவேண்டுமானால் தமிழ் நாட்டு உழவர்களின் உள்ளக்குமுறல் அடங்கி அவர்களிடையே அமைதியும், ஆநந்தமும் நிலவவேண்டுமானால் புதிய ஐக்கிய—ஒன்றுபட்ட தமிழகத்தை உருவாக்கித் தீரவேண்டும்.

இத்தகைய பொதுப்பணியிலே தமிழ் நாட்டுக்கலைஞர்கள் பங்கு கொள்ளவேண்டும். எழுத்தாளர்கள் ஈடுபடவேண்டும்; பத்திரி காசிரியர்கள் ஒத்துழைக்கவேண்டும். மாணவர்கள் பணியாற்றவேண்டும். பெண் மக்கள் போதுமான முயற்சி யெடுத்துக்கொள்ளவேண்டும். அரசியல் வாதிகள் முன்னின்றுவேலை செய்யவேண்டும். இவ்வாறு தமிழர்கள் அனைவரும் புதிய ஐக்கிய—ஒன்றுபட்ட தமிழகத்தை உருவாக்குவதே நமது முதல் வேலையென உள்ளத்திலே உறுதி கொள்ளவேண்டும்.

ஜனநாயகத்திலே நம்பிக்கையும், தமிழ் நாட்டைத் தொழில் மயமாக்கவேண்டும் என்ற ஆர்வமும், தமிழ் நாட்டு வாணிகம் வளரவேண்டும் என்ற கருத்தும் உள்ள முதலாளிகள், தொழில் நிபுணர்கள், வியாபாரிகள் அனைவரும் புதிய தமிழக இயக்கத்திலே கலந்து கொண்டு முழு மூச்சுடன் உதவி செய்தாகவேண்டும்.

" ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு; நம்முள், ஒற்றுமை நீங்கில் அனைவர்க்கும் தாழ்வு!" ஆதலால் ஒழிக வேற்றுமை! வாழ்க தமிழர்! வலுப்பெற்று வளர்க புதிய தமிழக இயக்கம்! அனைவரும் ஒன்று பட்டால் புதிய—ஐக்கிய தமிழகத்தை அடைவது உறுதி.

VERSITY LIBRA